DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1369 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 1, 2022

# கனடாவில் இரண்டு தமிழ் பேசும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய அமைச்சுகளின் பாராளுமன்றச் செயலாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பெற்றுள்ளனர்



ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஒன்றாரியோவின் **Minister of Children, Community and Social Services - Dr. Merrilee Fullerton** அவர்களது பாராளுமன்றச் செயலாளராக நியமி-க்கப்பட்டுள்ளார். அவர் மாகாண முதல்வர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மேலும் மற்றுமொரு தமிழ் பேசும் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்கள் ஒன்றாரியோவின் **Ontario's Minister of Infrastructure, Kinga Surma** அவர்களது பாராளுமன்றச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் மாகாண முதல்வர் அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இந்த வைபவங்கள்





புதன்கிழமை மாலை இடம்பெற்றன (உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

# ஸ்ரீமதி மீனா தவரட்ணம் அவர்களது சேவை நலம் பாராட்டு விழா 2ம் திகதி சனிக்கிழமை நடைபெறுகின்றது



தாயகத்தில் ஆசிரியப் பணி மற்றும் தமிழர் சமூகம், சமயம் ஆகிய பிரிவுகளில் நீண்டகால மாக சேவையாற்றி வரும் ஸ்ரீமதி மீனா தவரட்ணம் அவர்களுக்கான சேவை நலம் பாராட்டு விழா யூலை 2ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்காபுறோவில் 1686 எல்ஸ்மெயர் வீதியில் அமைந்துள்ள **J C's Banquet Hall** மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களை அறிய சாந்தா பஞ்சலிங்கம் - 416 200 5470 அல்லது மோகன்- 416 567 0144 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

# பொறியியலாளரும் சமய சமூக சேவையாளருமான நந்தீஸ்வரர் காலமானார்



தாயகத்திலும் கனடாவிலும் சிவில் பொறியியலாளராக பணியாற்றியவரும் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவரும். இங்கு மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவரும் அத்துடன் கனடா இந்து மாமன்றத்தின் வாழ்நாள் உறுப்பினராக இருந்து சமயப் பணியையும் ஆற்றியவருமான நந்தீஸ்வரர் வேலுப்பிள்ளை அவர்கள் காலமானார் என்ற சோகமான செய்தியை கனடா வாழ் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம். அவரது இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரங்களுக்கு உள்ளே காணப்படும் அறிவித்தலைப் பார்க்கவும்.

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்
RE/MAX REALTRON BLUE FORCE

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

# STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

FRONTLINE COMMUNITY CENTRE
Canadian Heritage / Patrimoine canadien
Canada

# CANADA DAY CELEBRATION!

Join FCC in celebrating Canada's 155th birthday with music, food, prizes, performances, and fun activities for the entire family!

Friday, July 1st
10 AM - 2 PM

SPECIAL GUESTS



Raymond Cho
Hon. Minister of Seniors and Accessibility of Ontario



Shaun Chen
Member of Parliament for Scarborough North

416-840-4425
INFO@FCCCANADA.ORG
FCCCANADA.ORG
FRONTLINECOMMUNITYCENTRE

FRONTLINE COMMUNITY CENTRE
3031 MARKHAM ROAD,UNIT #27
SCARBOROUGH, ON


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

**Manufacturing Workers and General Labour Needed for Full-time Morning Shifts**
**Looking for Workers to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for long-term positions.**
**Located in Scarborough near Markham and Ellesmere.**
**Salary starting from $16.00 + with benefits.**

Contact - Essan : 647-993-2872


### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415



### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

**We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.**

**Responsibilities:**
- Present and sell company products to potential customers
- Find and cold-call new prospects in existing and in new markets
- Prospect and contact potential customers while generating quality leads
- Must be result-driven and reach agreed sales targets by the deadline
- Resolve customer inquiries and complaints about the products
- Strong organization, and communication skills and be goal-oriented
- Ability to work in B2B corporate sales environment
- Must have a professional appearance and manner

**Qualifications:**
- Must have 2 or more years of outside sales experience
- Great written and verbal communications skills
- Good Microsoft Office abilities
- Ability to build a great and strong rapport with clients
- Strong negotiation skills
- Deadline and detail-oriented
- Exceptional Time Management skills and Organizational Skills Required
- Must have a valid driver's license and reliable transportation
- Bonus: has experience in the pallet industry

**Benefits:**
- Competitive base salary + Uncapped commission
- On-going training and development to ensure your success
- Health Benefits option available

Contact - Essan : 647-993-2872

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் கௌரவமான குடும்பத்தில் பிறந்தவரும் தற்போது அவுஸ்த்திரேலியாவில் Civil Engineer ஆக பணியாற்றுகின்றவரும் Australia நிரந்தரப் பிரஜையும் 1976ம் ஆண்டு பிறந்தவருமான மணமகனுக்கு மணப்பெண் ஒருவரை அவருடைய உறவினர்கள் தேடுகின்றனர். எந்த நாட்டிலிருந்தும் விண்ணப்பிக்கலாம். மணமகன் விவாகரத்து பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் விபரங்களுக்கு 647-667-8176 என்னும் தொலைபேசி இலக்கத்திலோ அன்றி layanthan24@yahoo.ca என்னும் மின்னஞ்சல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

### இலங்கை உணவகங்களில் வேலை வாய்ப்பு

**Perth, Niagara Falls,** மற்றும் **Blue Mountain** ஆகிய நகரங்களில் சிறப்பாக இயங்கிவரும் இலங்கை உணவகங்களில் இலங்கை உணவுகளை தயாரிக்கத் தெரிந்த சமையல் வல்லுனர்களும் **(cooks),** சமையல் உதவியாளர்களும் **(kitchen helpers)** உடனடியாகத் தேவை. அனுபவம் அவசியமில்லை. தகுந்த சம்பளமும் தங்குவதற்கு இடமும் உணவும் வழங்கப்பெறும்.

தொடர்புகளுக்கு செந்தூரன்:
**416 - 569 - 8173**

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Bloomington & McCowan**

**Stouffville** நகரில் உள்ள **Golf Club** இற்கு **Cook & Dishwasher** உடனடியாக தேவை.
**Full tie or Part time.**

**Please call or text : Ravi**
**416-909-9651**

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

உதயன் கதிரோட்டம்

# கோட்டாபாயவிற்கு எதிரான கருத்துப் பரிமாற்றங்கள் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகரிப்பு?

இலங்கையின் ஜனாபதி கோட்டபாய ராஜபக்சாவிற்கு எதிரான கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் விமர்சனங்கள் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகரத்துள்ளதை அவதானித்துள்ள கொழும்புப் பத்திரிகையாளர்கள் சிலர் இது தொடர்பாக அண்மையில் கலந்துரையாடுவதற்கு அங்கு கூடியதாக செய்திகள் வெளியாகிய நேரத்தில் இந்தப் பக்கத்தை எமது ஆசிரியர் பீடத்தில் நாம் எழுத ஆரம்பித்துள்ளோம்.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபாயவை பதவியில் இருந்து வெளியேறும் படி தென்னிலங்கையின் போராட்டக்காரர்கள் 'கோசங்களை' எழுப்பிய வண்ணம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வண்ணமம் உள்ள நிலையில் இவற்றையெல்லாம் தமது தூதுவர்கள் மூலம் அறிந்து கொண்ட சில நாட்டுத் தலைவர்கள் தற்போது கோட்டாபாயவை விமர்சனம் செய்ய முனைந்துள்ளதாக அறியப்படுகின்றது. இந்த நிலையில் பல வெளிநாடுகளின் தலைவர்களும் பொறுப்பான அமைச்சர்களும் கோட்டாபாயவின் தலைமைத்துவம் அதற்றப்பட்டப் பின்னரே இலங்கை அரசிற்கு எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிகள் வழங்குவதற்கான யோசனையை முன்வைக்கலாம் தெரிவித்துள்ள நிலையில் கட்டார் அரச தலைவர் அவர்களும் தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ்வாறாக இலங்கையில் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள் யாராகினும் பொருளாதார வீழ்ச்சியை பற்றிய அக்கறையின் செயற்படுத்துவது என்ற இந்த விடயம் இராஜதந்திர எதிர்ப்பாக வெளிப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறாக இலங்கை பற்றி விமர்சனங்கள் உலக நாடுகளில் மக்கள் பேச்சில் எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளன.

அந்த கோரிக்கையை பொருட்படுத்தாமல் நெகிழ்ச்சியான கலந்துரையாடலுக்கு இடமளிக்காமல் தகனம் செய்தமை இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மீது கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பிற்கு இவையே காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறாக இலங்கையின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகுவதற்கான நல்ல செய்தியோடு விரைவில் இவ்வாறான நிலையை நாமே உருவாக்க வேண்டும் எனறும், பலர் கோட்டாபாயவிடம் வேண்டிக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிக்க, இலங்கையில் எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி நடவடிக்கைகளில் ராஜபக்ச குடும்பத்தின் உறுப்பினர்கள் கடும் தலையீடுகளை மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.இந்த விடயமானது முன்னரேயே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது என்று எம்மிடம் தெரிவித்த சில அன்பர்கள் 'ரூசி கண்ட பூனைகள் போல இந்த ராஜபக்ச சகோதரர்கள் எவ்வாறு 'அநியாயம்' நிகழ்ந்தும் தங்கள் அதிகாரத்தை தொடர்ந்து செல்கின்றார்கள் என்ற எண்ணமே எமக்கு உள்ளுத
இறுதியாக, இலங்கையில் யுஎன்பி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு மக்கள் ஆதவு குறையத் தொடங்கியுள்ள இந்த நிலையில் ராஜபக்ச சகோரர்களை அவர்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து வரும் தந்திரத்தை தொடர்வதாகவே உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

**கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டம் (AGM) யூலை மாதம் 9 ஆம் திகதி 2022 சனிக்கிழமை பின்வரும் முகவரியில் காலை 10:30 மணியளவில் நடைபெறஇருக்கின்றது. யூலை 2022, 2023, யூன் 2024 ஆம் ஆண்டு வரைக்கான நிர்வாகசபைத் தெரிவும் இந்த நிகழ்வில் இடம் பெற இருக்கின்றது.**

Address: Frontline CommunityCentre
3031 Markham Rd #27 Scarborough ON M1X 1L9

**அங்கத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**குரு அரவிந்தன் - தலைவர்**
**ஆர். என். லோகேந்திரலிங்கம் - செயலாளர்**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

தொழிற்சாலையில் உடனடி வேலை வாய்ப்பு



ஸ்காபுறோவில்
Markham & Finch சந்திப்பிற்கு அருகில் இயங்கிவரும் அலுமாரி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

அனுபவம் விரும்பத்தக்கது.

-> Cabinet Maker - அலுமாரி செய்பவர்
-> Saw Operator - பலகை வெட்டுபவர்
-> Cabinet Installer - அலுமாரி பூட்டுபவர்
-> Spray Painter - பெயின்ட் அடிப்பவர்

தொடர்புகளுக்கு: (416) 994-7776

AVAILABLE NOW:
Fully Furnished Office

Fully furnished,
780 Sq.Ft. office
available at
Victoria Park & Finch

Contact:
REV.Rajah Alexander
(647) 923-8750

மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 30 வயதுடையவரும், தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றுகின்றவருமான மணமகனுக்கு அவரது பெற்றார் தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றனர். மணமகள் அழகானவராகவும், பட்டம் பெற்றவராகவும் இருத்தல் அவசியம்.
தொடர்புகளுக்கு:
(647) 609-5031
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

Restaurant வேலை வாய்ப்புக்கள்

Yonge and Eglinton சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் கனடிய உணவகம் ஒன்றுக்கு: Full Time அல்லது Part Time Line Cooks மற்றும் Dish Washers உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

அனுபவம் விரும்பத்தக்கது.
ஆர்வமுடையோர் 416-627-6452 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 44 வயதுடையவரும் கனடிய பிரஜாவுரிமை பெற்றவருமான மணமகனுக்கு அவரது நண்பர்கள் தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றனர். மணமகள் அழகானவராகவும், கல்வி கற்றவராகவும் இருத்தல் அவசியம்.
தொடர்புகளுக்கு:
(647) 806-9790
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

வந்து விட்டது!!

1%
குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
Lowest Interest in GTA

எங்களது புதிய கிளை
ஜூலை 4 முதல் உதயம்!

Pawn Bank Inc.
Your Satisfaction is Our Success

உடனடி நகைக்கடன்

இந்த சலுகை: (FINCH & MCCOWAN)
1571 SANDHURST CIRCLE #159D,
SCARBOROUGH - M1V1V2.
மட்டும் பொருந்தும்

தொடர்புக்கு: 416-754-7198

முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613
EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198

கனடிய செய்திகள் Canadian News

# கனடா ஒன்ராறியோ என்.டி.பி கட்சியின் இடைக்காலத் தலைவராக பீற்றர் தபூன்ஸ் தேர்ந்தெடுக்கப்பெற்றார்



ரொறன்ரோ - NDP MPP Peter Tabuns (Toronto-Danforth) என்.டி.பி கட்சியின் ஒன்றாரியோ இடைக்காலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்.

"ஒன்றாரியோ மக்கள் எங்களை உத்தியோகபூர்வ எதிர்கட்சியை அமைக்க மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டதற்காக NDP பெருமை கொள்கிறது, மேலும் சிறிது காலத்திற்கு கட்சியை வழிநடத்தும் வாய்ப்பைப் பெற்றதில் நான் தாழ்மையுடன் இருக்கிறேன்" என்று இடைக்காலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பீற்றர் தபூன்ஸ் கூறினார்.

"ஒன்றாரியோ NDP கட்சியின் தற்போதைய உறுப்பினர்கள் ஆற்றல் மிக்கவர்கள். மற்றும் தற்போதைய டக்போர்ட் அரசாங்கத்தை கண்காணித்து தகுந்த இடத்தில் வைக்க உறுதிபூண்டுள்ளது. ஊதியம் குறையும் தொழிலாளர்களுக்கு இது ஒரு கடினமான நேரம். சிகிச்சைக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நோயாளிகள். நீண்ட காலப் பராமரிப்பில் உள்ள எங்கள் பெற்றோருக்கும், பள்ளிக்குத் திரும்புவதற்கு அதிக உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கும். மற்றும் அனைவருக்கும் காலநிலை நெருக்கடி பற்றி கவலை. நாங்கள் அவர்கள் பக்கம் இருக்கிறோம். அவர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நீண்டகால பராமரிப்பு ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்ப நாங்கள் போராடப் போகிறோம். அவர்களுக்கான கல்விக்காக நாங்கள் போராடப் போகிறோம். ஊதியத்தை உயர்த்தவும், அவர்களுக்கான செலவுகளைக் குறைக்கவும் நாங்கள் போராடப் போகிறோம். அதேபோன்று ஒன்றாரியோ மாகாணத்தின் மக்களைக் காயப்படுத்தும் கன்சர்வேடிவ் கட்சியின் வெட்டுகளுக்கு எதிராக நாங்கள் போராடப் போகிறோம்.

இதெ நேரத்தில் கட்சியின் விதிகள் மற்றும் தலைமைத்துவ தேர்தல் திகதியை தீர்மானிக்க மாகாண மட்ட உறுப்பினர்கள் மற்றுமொரு கூட்டத்தை நடத்தவுள்ளனர் என்றும். ஒன்றாறியோ NDP தலைவர் கட்சி வலுவான நிலையில் உள்ளது எனறும் அவர் தெரிவித்தார்.

"நாங்கள் இந்த மாகாணத்தின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வலர்களைக் கொண்ட பலதரப்பட்ட, பல தலைமுறை, நவீன சமூக ஜனநாயகக் கட்சி. முன்பை விட நாங்கள் நிதி ரீதியாகவும் அதிக ஆற்றலுடனும் இருக்கிறோம்", என்று பிராடி கூறினார்.

எமது கட்சியின் முன்னைய தலைவி ஆண்ட்ரியா ஹார்வாத்தின் தலைமைக்காகவும், எங்கள் கட்சியை நாங்கள் இருந்ததை விட வலுவான இடத்திற்கு வழிநடத்தியதற்காகவும் நான் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு புதிய தலைவரின் தேர்வு மற்றும் எங்கள் கட்சியின் திசை ஆகியவை ஒன்றாறியோவில் உள்ள பல்லாயிரக்கணக்கான NDP உறுப்பினர்களுக்கு சொந்தமானது - மேலும் கட்சி நல்ல கைகளில் உள்ளது என்று என்னால் நம்பிக்கையுடன் கூற முடியும்." என்றும் அவர் தெரிவித்தார்.

## Canada Day Celebrations, hosted by Scarborough Agincourt MPP, Mr. Aris Babikian

# ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்தும் கனடா தின விழா




Happy Canada Day

Canada Day is a celebration of all things Canadian, including our values of generosity, inclusivity, democracy, tolerance, and diversity.

These values of goodwill are what make us Canadian. It was this same generosity and goodwill that welcomed me to this great province as a newcomer years ago.

Our nation has made substantial progress over the past few years. We are blessed to be free and independent.

I would like to emphasize the resilience of Canadians that has become so apparent in the past two years.

This is the day that makes us remember who we are and feel pride in what we are.

Let us all take a moment and look back at some of the incredible contributions Canadians have made throughout history.

My best wishes to every Canadian, May you all grow and prosper and take our nation to the greater heights.

Let us come together and celebrate this day with lots of happiness and zeal.

Whether you are barbequing in your backyard or in a park, please do so safely and cautiously. Happy Canada Day!

You can have the attached lawn sign free to display your pride in our country.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinіccanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

## Canada's Tamil Speaking MPP Logan Kanapathi, appointed as Parliamentary Assistant to Ontario's Minister of Children, Community and Social Services • Dr. Merrilee Fullerton

கனடிய செய்திகள் Canadian News

# ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, ஒன்றாரியோவின் Minister of Children, Community and Social Services - Dr. Merrilee Fullerton அவர்களது பாராளுமன்றச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

மேற்படி பாராளுமன்றச் செயலாளர் பதவியை லோகன் கணபதி அவர்களுக்கு வழங்கும் அரச வைபவத்தில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான "குயின்ஸ் பார்க்" கில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் முன்னிலையில் லோகன் கணபதி அவர்கள் திருக்குறள் நூலில் சத்தியம் செய்து பதவியை ஏற்றுக் கொள்வதை இங்கு காணலாம். அத்துடன் பதவியேற்புக்கு பின்னர் ஏனைய மாகாண அமைச்சர்கள் நண்பர்கள் ஆகி-யோரோடு அவர் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் இங்கு காணப்படுகின்றது.

**படங்களும் செய்தியும் - சிவா**









# 'தற்போது இலங்கைக்கு உதவ முடியாது' – ஜப்பான் கைவிரிப்பு

**யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



இலங்கைக்குக் கேட்ட போதும, கேட்காமல் இருந்த போதும் பல்லாயிரக் கணக்கான டொலர்களை தொடர்ச்சியாக வழங்கி உற்ற நண்பனாக இருந்த ஜப்பான், நாட்டில் தற்போது நிலவும் சூழலில் தங்களால் உடனடியாக உதவி செய்ய முடியாது என்று கைவிரித்துவிட்டது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள்வதற்கு வழி தெரியாமல் நடுச்சந்தியில் நிற்கும் இலங்கைக்கு இதுவொரு மிகப்பெரிய அடியாகும். நாளுக்கு நாள் அரசிற்கு எதிரான போராட்டங்களும் அதிருப்தியும் வலுத்துவரும் நிலையில், கோத்தா-ரணில் கூட்டணி பிச்சைப் பாத்திரத்துடன் உலகெங்கும் உதவி கேட்டு அலைகின்றனர். இதுவரை இந்தியா மட்டுமே பெருமளவிலான உதவியைச் செய்து வருகிறது. அமெரிக்கா கணிசமான உதவியை அறிவித்துள்ளது. அதேநேரம் இஸ்லாமிய நாடுகள் எவையும் இதுவரை உதவி குறித்து வாய் திறக்கவில்லை என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம்.

சீனா இலங்கை மாணவர்களுக்கென்று ஒரு தொகுதி அரசி அனுப்புவதாக கூறியுள்ளது. அதுவும் எப்போது வரும் என்பது தெரியாது, வந்தாலும் எப்படிப் பகிர்ந்தளிக்கப்படும் என்பது கேள்விக்குறியே. எரிபொருள் தட்டுப்படு குறித்து இதுவரை சீனா மற்றும் அரபு நாடுகளிடமிருந்து எவ்விதமான உத்தரவாதங்களும் வரவில்லை.

இதேவேளை கத்தார் நாட்டி நிதியமைப்பு ஒன்றிற்கு இலங்கை விதித்திருந்த தடை நீக்கிக்கொள்ளப்படும் என்று அங்கு சென்றுள்ள இலங்கைக் குழு தெரிவித்துள்ளது. கத்தார், சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு அமீரகம், ஓமான் போன்ற பல மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலை செய்யும் பணிப் பெண்களாக ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் சென்றுள்ளனர். அந்நாட்டின் சமூக வளர்ச்சியில் இவர்கள் கணிசமான பங்காற்றியிருந்தாலும், எந்த இஸ்லாமிய நாடும் இதுவரை இலங்கைக்கு நெருக்கடியான காலகட்டத்தில் உதவ போதியளவில் முன்வரவில்லை என்பது கசப்பான உண்மை.

எனினும் போர் மற்றும் சமாதான காலம் இரண்டிலும் நம்பக் கூடிய ஒரு நாடாக இருந்த ஜப்பான் தற்போது உடனடியாக உதவிகளைச் செய்ய முடியாது என்று கூறியுள்ளது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முயல்வதாக அரசு கூறும் நடவடிக்கைகளுக்குப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பது மிகவும் யதார்த்தமானது. இந்த வாரம் யாழ்பாணத்திற்கு விஜயம் செய்த பிறகு இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேக்கி இதை தெளிவாகக் கூறிவிட்டார்.

"இலங்கைக்கு அளிக்கப்படும் எந்த நிதியுதவியும் மோசமாக நிர்வகிக்கப்பட கூடும் என்கிற அபாயம் இருப்பதால், இப்போது எம்மால் எந்த நிதியுதவியும் அளிக்க முடியாது, எனினும் அது பின்னால் பரிசீலிக்கப்படலாம்".

மிகவும் நேசமாக இருந்து எவ்வித பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல் தொடர்ந்து இலங்கைக்கு உதவி செய்துவந்த ஜப்பானின் இந்த நிலைப்பாடு ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இதற்கு அப்பால் நம்பகத்தன்மை மீதான கேள்விக்குறியும் எழுந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வடக்கு கிழக்கிற்கு 5 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளையேனும் தாருங்கள் என ஜப்பானிடம் கோரிக்கை விடுக்கும் நிலைமையில் உதவவே முடியாது என்கின்றார் தூதுவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அப்படியே ஜப்பான் தனது முடிவை மறுபரிசீலனை செய்து அதை வழங்க முன்வந்தாலும் பெட்ரோல், டீசல் கிடைக்குமா என்பது யாருக்கும் தெரியாது.

இந்த வாரம் இரண்டு நாட்கள் பயணமாக ஜப்பானியத் தூதுவர் யாழ்ப்பாணம் வந்தார். இவர் பல தரப்பட்டோரையும் சந்தித்ததோடு ஊடகப் பிரதானிகளையும் சந்தித்தார். இச்சந்திப்புகளில் இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளினால் தமிழர்களின் தீர்வு என்பது மறக்கப்படுகின்றது. ஆனால் தமிழர்களின் தீர்வில் ஜப்பானிற்கும் பெரும் பங்கு உண்டு ஏனெனில் போர்க் காலத்தில் அபிவிருத்திகளிற்கு ஜப்பான் உதவியதனால் அரசு போரிற்கு நிதியைச் செலவு செய்தமையே வரலாறு.

இந்தியா, சீனா, அமெரிக்காதான் போரிற்கு உதவியது ஜப்பான் உதவவில்லை எனக் கூற முடியாது. இதேநேரம் சமாதான காலத்திலும் யசுசி அகாசி போன்ற பிரதிநிதியை நியமித்துச் செயல்பட்ட ஜப்பான் அதன் பின்பு பேசாமல் இருக்க முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினர். இதன்போது ஜப்பானியத் தூதுவர் "நான் புதியவர் பழைய விடயம் எனக்குத் தெரியாது" எனக் கூறித் தப்ப முயன்றபோது இது பழைய விடயமானாலும் உலகமறிந்த உண்மை அதனால் நீங்கள் மறுக்க முடியாது என தெரிவிக்கப்பட்டதோடு உடனடியாக வடக்கு கிழக்கிற்கு தலா 5 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளை தாருங்கள் என்ற சமயம் துவிச்சக்கர வண்டி தொடர்பில் கவனம் செலுத்துவதாகப் பதிலளித்துள்ளார்.

இதேநேரம் ஜப்பானியத் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்தார் இச்சந்திப்பில் கலந்துகொண்டவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அதுபற்றி கனடா உதயனிடம் பகிர்ந்து கொண்டார்.

"இலங்கையின் தற்போதைய நெருக்கடிக் காலத்தில் ஜப்பான் உச்சபட்சமாக உதவ வேண்டிய தேவை உள்ளதனால் இதனை மேற்கொள்ள வேண்டும் எனபதே எமது பிரதான கோரிக்கையாக இருந்தபோதும், ஜப்பான் தற்போதும் ஓரளவு உதவி புரிவதாகவும் பெரிய அளவிலான உதவிகளிற்கு சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அறிக்கை கிடைத்த பின்பு தீர்மானிப்பதாகப் பதிலளித்தார்" எனக் குறிப்பிட்டார்.

ஜப்பான் கூறியதிலும் ஒரு அர்த்தமுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பான ஆய்வுகளை நடத்தி வருகிறது. இலங்கையின் நிதிநிலை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதால், பன்னாட்டு அமைப்பு என்ற வகையில் இலங்கைக்கு அது உதவ முன்வந்தாலும், அதில் ஏராளமான நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக வாங்கிய கடனை உரிய நேரத்தில் திருப்பியளிக்க முடியவில்லை என்று அண்மையில் இலங்கை கைவிருத்துவிட்டது. அடுத்த தவணை கடனையும் செலுத்த முடியாத சூழலில் தான் இலங்கை உள்ளது என்பது உண்மை. நாட்டிற்கென்று ஒரு பொருளாதார கொள்கை இல்லாதது கடன் கொடுக்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளைச் சிந்திக்க வைத்துள்ளது.

அது மட்டுமின்றி கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கென்று நிதியமைச்சர் என்று யாருமில்லை. தார்மீக நெறிகளிற்கு அப்பாற்பட்டு நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை தேசியப் பட்டியலின் மூலம் பெற்றுக் கொண்டு "ஒரு நபர் கட்சியின் தலைவர்" என்று விமர்சிக்கப்படும் பிரதமர் ரணில் விக்ரமசிங்விடமே நிதியமைச்சர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முழு நேரமாக நிதியமைச்சர் ஒருவர் தேவைப்படும் நேரத்தில் அதைக் கூட மக்களின்



எதிர்ப்பை பெற்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச செய்யவில்லை என்று பல நாடுகளின் தூதர்கள் மறைமுகமாகத் தெரிவித்துள்ளனர். இதன் பின்புலத்திலேயே ஜப்பானியத் தூதரின் கருத்துக்கள் வந்திருக்கலாம் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இது ஏனைய நாடுகளிற்கும் ஓர் முன் உதாரணமாக மாற முன்பு இலங்கை அரசு தனது நிலைப்பாட்டைச் சீர் செய்யாதுவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் மேலும் சீர் கெடும் என்பது மட்டும் திண்ணம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திக்கம் வடிசாலை தென்னிலங்கை நிறுவனத்துக்குத் தாரை வார்ப்பு பனை அபிவிருத்திச்சபைத் தலைவரின் பேரினவாத எதேச்சாதிகாரம்

## பொ. ஐங்கரநேசன் கடுங்கண்டனம் எதிர்த்துப் போராட அணிதிரளுமாறும் அழைப்பு



திக்கம் வடிசாலையின் உரிமத்தைத் தங்களிடம் மீளவும் கையளிக்குமாறு அதை நிர்வகித்துவரும் வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக்கோரி வருகின்றனர். பல போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர். ஆனால், இப்போது இவர்களைப் புறந்தள்ளி, இவர்களுக்கே தெரியாமல் பனைஅபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜ திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கையைச் சேர்ந்த வி.ஏ டிஸ்ரிலறிஸ் என்ற நிறுவனத்துக்கு 25 வருடக் குத்தகைக்குத் தாரை வார்த்துள்ளார். பேரினவாத எதேச்சாதிகாரப் போக்குடன் வடமராட்சி பனைத் தொழிலாளர்களின் வாழ்வுரிமையைத் தட்டிப்பறித்து தனது இனத்தவர்களிடம் கையளித்துள்ளார் என்று தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திக்கம் வடிசாலை தொடர்பாக சனிக்கிழமை (25.06.2022) பொ. ஐங்கரநேசன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பனை தமிழ் மக்களின் இயற்கை வளங்களில் முதன்மையானது. இதிலிருந்து பொருளாதார ரீதியாக அதியுச்சப் பயனை அறுவடை செய்யவேண்டும் என்ற நோக்குடனேயே பனை அபிவிருத்திச்சபை தாபிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களில் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் பனை பற்றிய பட்டறிவையோ, படிப்பறிவையோ கொண்டிராமல் அரசியற் சிபார்சை மட்டுமே தகுதியாகக் கொண்டிருந்தார்கள். ஆளுங்கட்சியில் அல்லது அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்கட்சிகளில் இருந்து தேர்தலில் தோற்றுப்போனவர்களுக்குப் பிரதியுபகாரமாகத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இவர்களால் பனைத் தொழில் சீரழிந்து இறங்கு முகமே கண்டது. இப்போதைய தலைவர் கிரிசாந்த பத்திராஜவும் அதையே கனக்கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

திக்கம் வடிசாலை 1983 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலும் பனை, தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் நிதியிலும் உருவாக்கப்பட்டது. சுயாதீனமாக இலாபத்தோடு இயங்கிவந்த இந்த வடிசாலை 1987இல் வடமராட்சியில் இடம்பெற்ற ஒப்பறேசன் லிபறேசன் இராணுவத் தாக்குதல் காரணமாகப் பலத்த சேதமடைந்தது. இதனால், பனை அபிவிருத்திச்சபையிடம் இருந்து உதவிபெற நேரிட்டது. ஆனால். ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த கதையாகப் பனைத் தொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி 2001ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. அப்போதிருந்தே திக்கம் வடிசாலையின் சுயாதீனம் பறிபோனது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர்கள் அரசியல் நியமனம் என்பதால் அவர்களின்கீழ் இருந்துவந்த திக்கம் வடிசாலையின் வளங்களும் அரசியற் தேவைகளுக்கே பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. இதனாலேயே, திக்கம் வடிசாலையை பனைஅபிவிருத்திச் சபையிடமிருந்து விடுவிக்க வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். பனை தமிழர்களின் தேசியவளம் என்பதால் இது ஒட்டுமொத்தத் தமிழர்களின் பிரச்சினையும் ஆகும். திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கை முதலாளிகளிடமிருந்து மீட்கவும் பனைஅபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜவின் பேரினவாத எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும் பனைசார் உற்பத்தித் தொழிலாளர்களின் பின்னால் தமிழர்களாக நாம் அனைவரும் அணிதிரண்டு போராடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியில் சிறுதானிய விதைகள் விநியோகம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியைச் சேர்ந்த விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக உரங்கள் மற்றும் எரிபொருளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதால் உணவுற்பத்தி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு குறைந்தளவு நீரும் பசளைகளுமே போதுமான சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இராசதானியம் என்ற திட்டத்தைக் கடந்த மாதம் முதல் முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே திங்கட்கிழமை (27.06.2022) சிறுப்பிட்டியில் 50 விவசாயிகளுக்குக் குரக்கன், பயறு, காராமணி ஆகியவற்றின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் கு.மயூரதன் தலைமையில் நடைபெற்ற விதைகள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இராசதானியத் திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார். வளவாளராகக் கலந்துகொண்ட ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் குறைந்தளவு நீர்ப்பாசனத்துடனும் பசளைகளுடனும் எவ்வாறு சிறுதானியச் செய்கையினை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் பயிர்களில் பீடைகளின் தாக்கங்களைக் கட்டுப்படுத்தும் இயற்கை வழிமுறைகள் பற்றியும் தெளிவுபடுத்தினார்.







வழங்கப்படுகின்ற விதைகளின் நிறையின் இரட்டிப்பு மடங்கு விதைகளை விவசாயிகள் அறுவடையின் பின்னர் சுழற்சி முறையில் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இராசதானியத் திட்டம் முனனெடுக்கப்பட்டு வருகின்றது. விதை இரட்டி என்ற இந்த முறைமை எமது பண்டைய விவசாய மரபில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை அரசுக்கு எதிராக ஜனநாயக மக்கள் எழுச்சி முன்னெடுக்கப்படும் என்கிறார் சஜித் பிரேமதாச

தற்போதைய நிர்வாகத்துக்கு எதிராக ஜனநாயக மக்கள் எழுச்சியை முன்னெடுக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாரிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலவும் நெருக்கடிக்கு முகங் கொடுத்து நாட்டைக் கட்டியெழுப்புதல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தொடர் கலந்துரையாடலை ஆரம்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி அண்மையில் தீர்மானித்தது.

புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் குமார வெல்கமவின் முன்னிலையில் இந்த நிகழ்ச்சியின் முதல் கட்டம் நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

தற்போது நடைமுறையில் உள்ள அத்தியாவசிய சேவைகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் பதவிகளைப் பாதுகாப்பதற்கான சேவைகள் என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

விவகாரங்கள் தீவிரமடைந்தால் மாத்திரமே அமைச்சர்கள் வெளிநாடுகளிடம் தீர்வுகளைத் தேடுகின்றனர் எனவும்,ஜனாதிபதியும் முழு அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# கண்டாவளை கோட்ட முன்பருவ பள்ளி பிள்ளைகளுக்கான மகிழ்ச்சிகர உணவு வழங்கும் திட்டம்



நாட்டில் தற்போது மோசமாக அதிகரித்து செல்லும் உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக இளைய பருவத்தினர் போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்படும் நிலையைக் கருத்தில் கொண்டு IMHO-USA அமைப்பு மகிழ்ச்சிகர உணவு வழங்கும் திட்டத்தை கிளிநொச்சி, மட்டக்களப்பு மேற்கு மற்றும் ஹட்டன் பகுதிகளில் செயற்படுத்தி வருகின்றது.

அவ்வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை கல்வி கோட்டத்தில் இயங்கும் 18 முன்பள்ளிகளைச் சேர்ந்த 466 பிள்ளைகளுக்கான மேற்படி திட்டத்தை IMHO-USA அமைப்பு World Vision உடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது.





இதனை அடியொற்றி கண்டாவளையின் தருமபுரம் புதிய உதயம் முன்பள்ளியில் 52 பிள்ளைகளுக்கான உணவு வழங்கும் இத்திட்டத்தை IMHO-USA அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் திரு. சு.கிருஷ்ணகுமார் அவர்கள் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் திரு. பி.விஜயநாதன் உடன் இணைந்து பார்வையிட்டார்.

அத்துடன் இவ்விஜயத்தின் போது கிளிநொச்சி தெற்கு வலயத்தை சேர்ந்த ஐந்து பாடசாலைகளில் 700 மாணவர்களுக்கான காலையில் உணவு வழங்கும் திட்டம் தொடர்பில் அப்பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடினார். இத்திட்டம் வருகின்ற கிழமை தொடக்கம் இப்பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# தமிழகத்தில் நடப்பது தமிழர்களுக்கான ஆட்சியா? இல்லை சிங்களர்களுக்கான ஆட்சியா? - சீமான் கண்டனம்

இந்தியா செய்திகள் India News



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

திருச்சி, சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழச்சொந்தங்களில் 30 பேர் மாத்திரை உட்கொண்டும், ஒருவர் தீக்குளித்தும் தற்கொலைக்கு முயன்றதுமான செய்திகள் பேரதிர்ச்சி தருகின்றன. “விதியே! விதியே! என் செய நினைத்திட்டாய் என் தமிழ்ச்சாதியை?” எனும் பெரும்பாவலன் பாரதியின் கூற்றுக்கிணங்க, தாய்த்தமிழகத்திலேயே ஈழச்சொந்தங்களுக்கு நிகழ்ந்தேறும் இக்கொடுமைகள் கண்டு மனம்வெதும்புகிறேன்.

தங்களை ஏதிலிகளென இந்தியச்சட்டத்தின்படி பதிவுசெய்துள்ள ஈழச்சொந்தங்களையும் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களெனக் கூறி, சிறப்பு முகாம் எனப்படும் சித்திரவதைக்கூடங்களில் அந்நிய நாட்டவர்களோடு அடைத்து வைத்துள்ள அநீதிக்கெதிராக, தங்களை விடுவிக்கக்கோரி 35 நாட்களுக்கும் மேலாகப் பட்டினிப்போராட்டம் செய்து அரசு மனமிறங்காத நிலையிலேயே, ஆற்றாமையும், விரக்தியும் தாளாது இத்தகையக் கொடிய முடிவை ஈழச்சொந்தங்கள் எடுத்துள்ளனர் என்பது ஏற்கவே முடியாதப் பெருந்துயரமாகும். இந்நாட்டுக்குத் துளியும் தொடர்பற்ற திபெத்தியர்கள் ஏதிலிகளாக அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அடிப்படை வசதிகளும், பொருளாதார வாய்ப்புகளும் அவர்களுக்கு வழங்கப்பெற்று, பெரும் மதிப்போடு நடத்தப்படும் வேளையில், இந்நாட்டில் வாழும் எட்டுக்கோடி தமிழ்ச்சொந்தங்களின் தொப்புள்கொடி உறவான ஈழச்சொந்தங்கள் குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்படுவதும், அடிப்படை மானுட உரிமைகளும், அத்தியாவசிய இருப்பு நடவடிக்கைகளும்கூட அளிக்கப்படாது மறுக்கப்படுவதும் தமிழினத்திற்கு இந்நாட்டு அரசுகள் செய்யும் பெருந்துரோகமாகும். தமிழர்களின் வரலாற்றுத்தாயகமான தமிழகத்திலேயே ஈழச்சொந்தங்கள் நாதியற்றவர்கள் போல நாளும் நடத்தப்படுவதும், அவர்களது உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளிக்கப்படாது அவமதிக்கப்படுவதும் வெட்கித்தலைகுனிய வேண்டிய பெரும் அவமானமாகும்.

தேர்தலுக்கு முன்பு, ஈழச்சொந்தங்களுக்குக் குடியுரிமைப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதி அளித்த மாண்புமிகு முதல்வர் ஐயா ஸ்டாலின் அவர்கள், தற்போது ஏதிலிகளாகக்கூட அவர்களை வாழவிடாது வஞ்சிப்பது எந்தவகையில் நியாயம்? இதுதான் சமூக நீதியா? “ஈழத்தமிழர் எங்கள் இரத்தம்” என மேடையில் முழக்கமிட்ட முதல்வர் ஸ்டாலின் அவர்கள், இப்போது இரத்தம் வற்றிப்போகிற அளவுக்கு அவர்கள் பட்டினிக்கிடந்து, உடல்மெலிந்து கோரிக்கை வைத்தும் செவிமடுக்காதது ஏன்? அவர்களுக்கு வாக்கில்லை என்பதால், அவர்களது வறண்ட நாக்குகள் இடுகிற முழக்கங்கள் உங்கள் செவிப்பறைக்கு எட்டவில்லையா முதல்வரே? உயிரை முன்னிறுத்தி, போராட்டம்செய்தும் உங்கள் இதயக்கதவுகள் திறக்காதென்றால், நடப்பது தமிழர்களுக்கான ஆட்சியா? இல்லை! சிங்களர்களுக்கான ஆட்சியா? இதுதான் நீங்கள் விடியல் தரும் இலட்சணமா? வெட்கக்கேடு! பேரவலம்!

ஆகவே, இந்தியச்சட்டநெறிமுறைகளின்படி, தங்களை ஏதிலிகளாகப் பதிவுசெய்தும் சட்டவிரோதக் குடியேறியவர்களெனக்கூறி, திருச்சி, சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழச்சொந்தங்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்துகிறேன். அதனைச் செய்யத் தவறும்பட்சத்தில், மாநிலம் தழுவிய மக்கள்திரள் போராட்டத்தை முன்னெடுப்போமெனப் பேரறிவிப்பு செய்கிறேன்.

# “சாதிக்க வயது தடையில்லை” 16 வயதில் தொலைத்த கனவை 53 வயதில் சாதித்த மகாராஷ்டிரா பெண். குவியும் வாழ்த்துக்கள்



நம்மில் பலர் வயசு ஆயிடுச்சி, இனிமேல் நான் என்ன பண்றது, சின்ன வயசுலயே விட்டது தப்பா போச்சு. இது போல் பேசியதை நாம் கேட்டு இருப்போம். ஆனால் சாதிக்க வயசு முக்கியமில்லை என நிரூபித்துள்ளார் மகாராஷ்டிரா சேர்ந்த 53 வயதுடைய பெண். மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர் கல்பனா. இவர் தந்தை இவரின் சிறு வயதில் இறந்ததால் குடும்பம் மிகுந்த நிதி நெருக்கடியில் சிக்கியது. இதனால் இவரால் தனது பள்ளி படிப்பை தொடர முடியவில்லை. அப்போது அவருக்கு வெறும் 16 வயது தான். இதையடுத்து கல்பனா திருமணம் செய்து கொண்டு, கணவன், மகன்கள் என குடும்ப வாழ்க்கையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாலும், அவருக்குக் கல்வி மீதான தாக்கம் இருந்து கொண்டே இருந்துள்ளது.

இந்த நிலையில், கல்வியை இடைநிற்றல் செய்தவர்களுக்காக அரசு நடத்தும் இரவு பள்ளி குறித்து ஆசிரியர் ஒருவர் மூலம் கல்பனாவுக்கு தெரியவந்தது. பாதியில் விட்ட தனது கல்வியை மீண்டும் தொடங்க முடிவு செய்த கல்பனா, 2021-ம் ஆண்டு முதல் கணவன் மற்றும் மகனுக்குத் தெரியாமல் கல்வி கற்று வந்துள்ளார். இந்நிலையில் அயர்லாந்தில் இருக்கும் அவரது மகனுக்குத் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக அவரது மகன் இந்தியா வந்தபோதுதான் தனது தாய் இரவு பள்ளியில் சேர்ந்து படித்து வருவது தெரியவந்துள்ளது. இதனையடுத்து தாயின் விருப்பபடியே அவரை தேர்வு எழுதவும் அனுமதித்துள்ளார். இதையடுத்து 53 வயதில் கல்பனா 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி 79.6 சதவீத மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றுள்ளார். கிட்டத்தட்ட 37 ஆண்டுகளுக்குப் பிறகு அவரின் பள்ளி கனவு முழுமையாக நிறைவடைந்துள்ளது. இது குறித்து அவரது மகன் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதைப்பார்த்த நெட்டிசன்கள் பலரும் கல்பனாவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும், பலருக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார் என நெகிழ்ச்சியுடன் பதிவிட்டு வருகின்றனர்.



# முதல்வர் மு.க. ஸ்டாலின் ஒரு குட்டி மோடியாக மாற ஆசைப்படுகிறார் - அண்ணாமலை விமர்சனம்

திமுகவைப் பொறுத்தவரையில் குடும்பமே கட்சி, கட்சியை குடும்பம் என்ற நிலைதான் உள்ளது. திமுகவில் எது கட்சி, எது குடும்பம் என்று தெரியவில்லை என்று அண்ணாமலை விமர்சனம்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள தனியார் பள்ளி மைதானத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் 8 ஆண்டுகால ஆட்சியின் சாதனை விளக்க கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர் கோடிக்கணக்கான ஏழை நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் மத்திய அரசின் திட்டங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் அவர்கள் எந்த நேரமும் மக்களின் நலன் குறித்தே சிந்தித்து வருகிறார். திமுக தமிழகத்தில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவ சிறுபான்மை மக்களை வெறும் ஓட்டு வங்கியாக மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். அவர்களுக்காக வேறு எதையும் அக்கட்சி செய்யவில்லை. தற்போது பாஜகவின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக திரௌபதி முர்மு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மு.க.ஸ்டாலினுக்கு காய்ச்சல் வந்துவிட்டது என விமர்சித்துள்ளார். மேலும் புலியை பார்த்து பூனை சூடு போட்டு கொண்டது என்று ஒரு பழமொழி உண்டு. அதே போல பிரதமர் மோடியை பார்த்து தானும் குட்டி மோடி ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறார் மு.க.ஸ்டாலின். குட்டி மோடியாக மாறவேண்டுமென்றால் அடித்தட்டு மக்களுக்காக உழைக்க வேண்டும். அதற்கு குடும்பத்தை மறந்து உழைக்க வேண்டும். ஆனால் திமுகவைப் பொறுத்தவரையில் குடும்பமே கட்சி, கட்சியை குடும்பம் என்ற நிலைதான் உள்ளது. திமுகவில் எது கட்சி, எது குடும்பம் என்று தெரியவில்லை என்று விமர்சித்துள்ளார்.

# உதயநிதியின் காலில் விழுந்து வணங்கிய தஞ்சை மேயரின் இழி செயல்

காலில் விழும் கலாச்சாரம் அதிமுகவில்தான் அதிகம். மறைந்த முதல்வர் ஜெயலலிதா இருந்தபோது அவர் காலில் மிகவும் வயதானவர்களே விழுந்து எழுந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இதை எல்லாம் ஏற்காத திராவிட பாரம்பரியம் என்று கூறும் திமுகவிலும் தற்போது காலில் விழும் கலாச்சாரம் ஆரம்பித்து விட்டது. தஞ்சாவூரில் மத்திய மாவட்ட திமுக சார்பில், “விழுதுகளாக தாங்கி நிற்போரை தாங்கும்” பொற்கிழி வழங்கல், திமுக மூத்த முன்னோடிகளின் உருவப் படம் திறப்பு, கட்சி கொடியேற்று விழா என முப்பெரும் விழா நேற்று கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கும்பகோணத்தில் நடந்த விழாவில் பங்கேற்ற பின்னர் தஞ்சை விழாவில் பங்கேற்க எம்எல்ஏ உதயநிதி ஸ்டாலின் வந்தார். முதல்வருக்கு எப்படி வரவேற்பு அளிப்பார்களோ அந்தளவிற்கு உதயநிதிக்கும் வரவேற்பு இருந்தது. கூடியிருந்த கட்சி தொண்டர்கள் மத்தியில் உதயநிதி வந்த கார் மிதந்து வந்தது. விழா நடக்கும் கலைஞர் அறிவாலயத்திற்கு அருகே கார் வந்து நின்றது. வாழ்க கோஷம் விண்ணை அதிரடித்த நிலையில் அடுத்ததாக நடந்த சம்பவம் தான் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காரில் இருந்து உதயநிதி இறங்குவதற்குள் கூட்டத்தினர் மத்தியில் புகுந்து வந்தார் தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன் மேயருக்கான அங்கி அணிந்து டவாலியுடன் வந்த அவர் காரை விட்டு இறங்கி உதயநிதியை கண்டவுடன் பட்டென்று அவர் காலில் விழுந்து வணங்கினார். ஆனால் இதற்கு உதயநிதி எவ்வித மறுப்பும் சொல்லாமல் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டார்.

சுற்றி நூற்றுக்கணக்கான தொண்டர்கள் நிற்கும் போது சாலையில் தஞ்சை மாநகராட்சியின் மேயர் என்ற பெருமையுடன் அதற்குரிய அங்கியை அணிந்தபடி உதயநிதி ஸ்டாலின் காலில் அவர் விழுந்து வணங்கிய சம்பவம் சில நிமிடங்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கடந்த 2017ம் ஆண்டு “அன்பின் அடையாளம் போதும். அடிமை நிலை வேண்டாம்” என்று செயல் தலைவராக பொறுப்பேற்ற போது திமுகவினருக்கு மு.க. ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் இருந்து சில வரிகள்... நேரில் சந்திக்க வரும் தொண்டர்கள் சிலர் ஆர்வம் மிகுதியால், நான் சற்றும் எதிர்பாராத நிலையில் என் காலில் விழுந்து வணங்க முயற்சிப்பது எனக்கு மனதளவில் பெரும் நெருக்கடியை உண்டாக்குகிறது. தொண்டர்கள் இப்படிக் காலில் விழுவதை நான் சிறிதும் விரும்புவதில்லை. இது எனக்கு சற்றும் உடன்பாடில்லாத செயல் என்பதுடன், சுயமரியாதைக் கொள்கை வழியில் தன்மானம் காக்கும் இந்த இயக்கத்திற்கும் எதிர்மறைச் செயலாகவும், உடன்பாடில்லாத செயலாகவும் அமைந்து விடுகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதால், மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என சமத்துவ நிலைகாண உரிமைப் போராட்டம் நடத்திய திராவிட இயக்கத்தின் அரசியல் அமைப்பாக நம்முடைய கழகம் செயல்பட்டு வருகிறது. யார் காலிலும் விழ வேண்டிய அடிமை நிலை எந்த மனிதருக்கும் எப்போதும் ஏற்படக் கூடாது என்பதை வலியுறுத்தி, வெற்றி கண்ட இயக்கம் இது என்று தெரிவித்து இருந்தார். ஆனால் அவரது மகனான உதயநிதி தனது காலில் தஞ்சை மாநகர மேயர் விழுந்ததை ஏன் தடுக்கவில்லை என்ற கேள்வியும் சமூக நல ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தியா செய்திகள்
India News

# ஆந்திர இளம்பெண் விண்வெளியில் பயணம் செய்து திரும்பினார்

ஆந்திர மாநிலம் குண்டூரில் பிறந்தவர் சிரிஷா பண்ட்லா (வயது 34). இவர் தற்போது அமேரிக்காவில் வசித்து வருகிறார். பிரிட்டன் கோடீஸ்வரர் சர் ரிச்சர்ட் பிரான்சலுடன் விர்ஜின் கேலக்டிக் ராக்கெட் விமானத்தில், விண்வெளிக்குச் சென்று திரும்பிய சிரிஷா பண்ட்லாவை இந்தியர்கள் கொண்டாடி வருகின்றனர். கல்பன சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் வரிசையில் தற்போது விண்வெளிக்குச் சென்று திரும்பிய இந்திய வம்சாவளி வீராங்கனையாக சிரிஷா பண்ட்லா திகழ்கிறார்.

இவரது விண்வெளி சுற்றுலா பயணத்தை இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு முதல் பலரும் பாராட்டியுள்ளனர். சுனிதாவின் ஆணிவேர் இந்தியாவில் இருந்தாலும் அவர் அமெரிக்காவிலேயே பிறந்தவர். அமெரிக்காவின் நியூ மெக்சிகோவில் இருந்து விண்வெளிக்குப் பறந்த ராக்கெட், ஒரு மணி நேரத்தில் பயணத்தை முடித்துக்கொண்டு பூமிக்குத் திரும்பியது.

வரலாற்று பூர்வ பயணத்தில் சிரிஷா பண்ட்லா இடம்பெற்றது இந்தியாவில், குறிப்பாக அவர் பிறந்த ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. ராக்கெட் வெற்றிகரமாகப் பூமிக்குத் திரும்பியவுடன் இந்தியர்கள் சமூக ஊடகங்கள் மூலம் அவரை வாழ்த்தி வருகின்றனர்.

சுனிதா கூறியதாவது: ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் ஒரு சி-றுமியாக வளர்ந்து வந்தேன். எனது ஆரம்பகால நினைவுகளில் ஒன்று மின்வெட்டு, மின்தடை. என் தாத்தா பாட்டியின் கூரையில் தூங்கியது எனக்கு நினைவிருக்கிறது. இந்தியாவில் நட்சத்திரங்கள் மிகவும் பிரகாசமாக இருப்பதைப் பார்த்தது எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. அங்கே என்ன இருக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டேன். பார்வைக் குறை-பாடு காரணமாக நாசா விண்வெளி வீராங்கனையாக என்னால் இருக்க முடியவில்லை அதற்குப் பதிலாக என்ஜினீயர் வழியைப் பயன்படுத்தினேன்.



கடந்த ஜூலை மாதம் கோடீஸ்வரர் விர்ஜின் கேலக்டிக்கின் முதல் விண்வெளி விமானத்தில் சர் ரிச்சர்ட் பிரான்சனுடன் சென்ற குழுவில் இளம் விண்வெளி பொறியாளராக பணியாற்றினேன்.

பூமிக்கு மேலே ஏறக்குறைய 90 கிலோ மீட்டர் வரை பயணம் செய்தது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. "பூமியைப் பார்த்ததும், வளிமண்டலத்தின் மெல்லிய நீலக் கோட்டைப் பார்ப்பதும், உண்மையில் நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நினைக்க தோன்றியது. நான் சிறு வயதிலிருந்தே விண்வெளி வீரர்கள். சந்திரனில் காலடி எடுத்து வைத்தவர்களின் வாழ்க்கையைப் படித்துள்ளேன். அவர்களை நான் மதிக்கிறேன். அவர்களின் பயணத்துடன் நான் என்னை இணைக்கவில்லை. எனது பயணத்தில்.

# மக்களை திசை திருப்புவதில் கைதேர்ந்தவர் மோடி என்கிறார் ராகுல் காந்தி

கடந்த சில நாள்களாகவே காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, மோடி தலைமையிலான மத்திய அரசை கடுமையாக விமர்சனம் செய்து வருகிறார். மேலும், "இந்தியாவின் பொருளாதாரம் சரியாக இல்லை, இளைஞர்கள் வேலையில்லாமால் சிரமப்பட்டு வருகின்றனர். இதனால் மத்திய அரசு அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தர வேண்டும்!" என கோரிக்கையும் விடுத்து வருகிறார்.

இந்த நிலையில், ராகுல் காந்தி தனது கீச்சக பக்கத்தில், "திசை திருப்பும் அறிவியலில் பிரதமர் மோடி தேர்ந்தவராக இருந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்க உயர்வு, எல்.ஐ.சி நிறுவனத்தின் மதிப்பு சரிவு என பேரழிவுகளை அவரால் மறைக்க முடியவில்லை. இந்திய மக்கள் பல்வேறு பிரச்னைகளில் போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்களின் கவனத்தை திசை திருப்பும் அடுத்த விஷயத்துக்கு பிர-தமர் மோடி திட்டமிட்டு வருகிறார்" எனப் பதிவிட்டிருக்கிறார்.





# குமரிக்கடலில் திருவள்ளுவர் சிலையை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு 6 மாதத்திற்கு அனுமதி இல்லை

ரசாயன கலவை பூசும் பணி நடப்பதால் 6 மாதத்துக்கு கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப்பயணிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அதிகாரிகள் கூறினர்.

கன்னியாகுமரியில் கடல் நடுவே அமைந்துள்ள 133 அடி உயர திருவள்ளுவர் சிலையில் 4 ஆண்டுகளுக்குப் பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ரசாயன கலவை பூசும் பணி கடந்த 6ம் தேதி தொடங்கியது. இந்த பராமரிப்பு பணிகளை அமைச்சர் மனோதங்கராஜ் துவக்கி வைத்தார். சுமார் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடக்கின்றன. ரசாயன கலவை பூசுவதற்காக சிலையை சுற்றி 4 பக்கமும் இரும்பிலான சாரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் சந்தீப் நந்தூரி, திருவள்ளுவர் சிலையில் நடைபெற்றுவரும் முதற்கட்டப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் பணி-களை முடிக்க அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். பராமரிப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சுமார் 6 மாதத்திற்கு சுற்றுலாப் பயணிகள் திருவள்ளுவர் சிலையை பார்வையிட தடை விதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

இந்த ஆய்வின்போது சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் டேவிட் பிரபாகர், கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா அதிகாரி சீதாராமன், ஹோட்டல் தமிழ்நாடு மேலாளர் - யுவராஜ், பொறியாளர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.





# மதுரை திருப்பரங்குன்றத்தில் 1000 ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் கல்வெட்டு கண்டுபிடிப்பு

திருப்பரங்குன்றம் மலையில் சிக்கந்தர் தர்காவின் பின்புறமுள்ள மலைச்சரிவில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமணத்துறவியர் வடக்கிருந்து உயிர்நீத்த செய்தியை கூறும் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இக்கல்வெட்டு கிரந்தமும் தமிழும் கலந்து எழுதப்பட்டுள்ளது. இதனைப் பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் ஆய்வாளர்கள் உதயக்குமார், முத்துபாண்டி, முருகன் ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர்.

இக்கல்வெட்டை வாசித்து இவ்விளக்கத்தை பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் செயலாளர் தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் கூறியதாவது:அரிட்ட நேமிபடாரர் என்னும் சமணத்துறவி சல்லேகனை என கூறப்படும் வடக்கிருந்து நோன்பு நோற்று உயிர்நீத்த இடம் என்பதைக் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அரிட்டநேமிபடாரர் நிசிதிகை இது' என்பது இக்கல்வெட்டின் பாடம். முன் இரண்டு வரிகளில் தொடக்கம் சேதம் அடைந்துள்ளதால் எத்தனை நாள் நோன்பு இருந்தார் என்பதை அறிய முடியவில்லை. 40 அல்லது 50 நாட்கள் இருக்கலாம். முன்னெழுத்துக்கள் இன்றி பது என்ற இரண்டு எழுத்துக்கள் மட்டும் இருப்பதால் 20 முதல் 80 நாட்களை குறிக்கலாம். நிசிதிகை என்ற சொல் இக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

பாண்டிய நாட்டில் இச்சொல் கல்வெட்டுகளில் இதுவரை இடம் பெற்றதில்லை.தொண்டைமண்டலம் (திருநாதர்குன்று) கொங்குமண்டலம் (விசயமங்கலம்) ஆகிய ஊர்களில் இப்படிப்பட்ட நிசிதிகை



கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டில் இதுவே முதலாவதாக அறியப்பட்டுள்ளது. செஞ்சிக்கு அருகில் உள்ள திருநாதர்குன்று மலையில் ஜம்பத்தேழு நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த சந்திர நந்தி எனும் துறவியின் நிசிதிகை உள்ளது.

அதன் காலம் கி.பி 6ஆம் நூற்றாண்டாகும். திருப்பரங்குன்றம் சங்க காலத்திலேயே முக்கிய சமணத் தளமாக விளங்கியுள்ளது. மூன்று தமிழ்பிராமிக் கல்வெட்டுகள் கி.மு. முதல்நூற்றாண்டைச் சேர்ந்தவை இங்கு காணப்படுகின்றன. அதற்கு அடுத்து கி.பி. 8 9 ம் நூற்றாண்டில் தென்பரங்குன்றம் குடைவரைக்கோயில் சமணத்தீர்த்தங்கரர்க்காக எடுக்கப்பட்டது. பின்னர் கி.பி. 13ம் நூற்றாண்டில் அது சிவன்கோவிலாக மாற்றம் பெற்றது. மதுரைக்கு அருகில் சமணம் செல்வாக்குப் பெற்றிருந்த எண்பெருங்குன்றங்களில் திருப்பரங்குன்றம் முதலாவதாகும்.

`மலை உச்சியில் காசிவிசுவநாதர் கோயில் அருகில் மலைப்பாறையில் கி.பி. 9 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணத்துறவியரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மலை அடிவாரத்தில் உள்ள பழனிஆண்டவர் கோயிலின் பின்புறம் ஓர் இயற்கையான சுனைக்கு அருகில் இரண்டு பார்ச்சுவநாதர், மகாவீரர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செதுக்கியவர்களின் பெயர்களும் கி.பி.10ஆம் நூற்றாண்டின் வட்டெழுத்தில் வெட்டப்பட்டுள்ளன. இவ்வளவு சமணத்தொடர்புடைய திருப்பரங்குன்றத்தில் முதல்முறையாக நோன்பிருந்து உயிர்நீத்த அரிட்டநேமிப்பெரியார் பற்றிய கல்வெட்டு கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. மதுரைக்கு அருகில் உள்ள அரிட்டாபட்டி என்னும் சமணத்தலம் அரிட்டநேமிப் பெரியாரின் பெயரில் அமைந்தது என்பர். இவரே அப்பெயருக்குக் காரணமானவராக இருக்கலாம்.

தமிழகத்தில் சங்க காலத்திலேயே வடக்கிருந்து உயிர் போக்கும் வழக்கம் இருந்தது என்பதனை கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் வரலாறு கூறுகிறது. இவ்வழக்கம் பத்தாம் நூற்றாண்டுவரை தொடர்ந்தது என்பதற்கு இப்போதைய திருப்பரங்குன்றம் கல்வெட்டு கண்டுபிடிப்பு சான்றாக அமைகிறது. இக்கல்வெட்டுள்ள இடத்தில் ஒரு துறவியர் மடம் இருந்ததற்கான கட்டுமானத் தடயங்களும் காணப்படுகின்றன. உடைந்த செங்கல்துண்டுகள், சிதைந்த கட்டிடப்பகுதிகள், பானை ஓடுகள் இங்கு இருப்பது கொண்டு இம்முடிவுக்கு வரலாம் என்றார்.

# "நீங்கள் அதிமுக ஒருங்கிணைப்பாளரே இல்லை; உங்கள் செயல் ஏற்புடையதாக இல்லை" : ஓபிஎஸ்ஸுக்கு இபிஎஸ் கடிதம்



கடந்த 23ம் தேதி கொண்டுவரப்பட்ட கட்சி சட்ட திட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால், அந்த சட்ட திட்ட திருத்தங்கள் காலாவதி ஆகிவிட்டது. எனவே, கட்சி ஒருங்கிணைப்பாளர் என்ற உணர்வில் தாங்கள் எழுதியுள்ள கடிதம் செல்லத்தக்கதல்ல" என்று கட்சியின் பொருளாளர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு அதிமுக தலைமை நிலையச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதம்: "தங்களின் 29.06.2022ம் தேதியிட்ட கடிதம் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டேன்.

பின்னர், மகாலிங்கம் வழியாகப் பெறப்பட்டது.கடந்த 23.06.2022 அன்று நடைபெற்ற கட்சிப் பொதுக்குழுவில் 1.12.2021 அன்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுவால் கொண்டுவரப்பட்ட கட்சி சட்ட திட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால், அந்த சட்ட திட்ட திருத்தங்கள் காலாவதி ஆகிவிட்டது. எனவே, கட்சி ஒருங்கிணைப்பாளர் என்ற உணர்வில் தாங்கள் எழுதியுள்ள கடிதம் செல்லத்தக்கதல்ல.

மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது காலியாக இருக்கும் பதவிகளுக்கு நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் 27.06.2022 அன்று முடிவுற்ற நிலையில், இத்தனை நாட்கள் பொறுத்திருந்து, கட்சியின் வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவிக்காத நிலையிலும், 27.06.2022 அன்று கூட்டப்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு தாங்கள் உட்பட அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டு, மொத்தம் உள்ள 74 தலைமைக் கழக நிர்வாகிகளில் 65 பேர் கலந்துகொண்டனர்.4 பேர் உடல்நிலை சரியில்லை என்று தகவல் தெரிவித்திருந்தனர்.

தாங்கள் அந்தக் கூட்டத்தை புறக்கணித்த நிலையில், தற்போதைய தங்களின் இந்த கடிதம் ஏற்புடையதாக இல்லை. அதே போல், நாம் இருவரும் கூட்டாக அழைப்பு விடுத்த, கட்சியின் பொதுக்குழுவை நடத்தவிடாமல் தடுத்து நிறுத்துவதற்காகத் தாங்கள், ஆவடி காவல் ஆணையருக்கு கடிதம் மூலம் புகார் அளித்தும், நீதிமன்றங்களின் மூலம் வழக்குகளைத் தாக்கல் செய்தும், அதிமுகவை செயல்படாத நிலைக்குக் கொண்டு செல்வதற்கான அனைத்துப் பணிகளையும் செய்துவிட்டு, தற்போது இப்படி ஒரு கடிதத்தை எனக்கு அனுப்புவது ஏற்புடையதாக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார். முன்னதாக, உள்ளாட்சித் தேர்தலில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான படிவங்களை கையெழுத்திட அனுப்பி வைக்குமாறு எடப்பாடி பழனிசாக்கு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியிருந்தார்.

# கோடநாடு வழக்கு விவகாரம்: ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரிடம் போலீஸார் விசாரணை

கோடநாடு வழக்கு விவகாரம் தொடர்பாக, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரிடம் போலீஸார் விசாரணை நடத்தினர்.நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில், கடந்த 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி கொள்ளை முயற்சி நடந்தது. இதில், எஸ்டேட்டின் காவலாளி ஓம்பகதூர் கொல்லப்பட்டார். இக்கொலை, கொள்ளை சம்பவம் தொடர்பாக நீலகிரி மாவட்ட போலீஸார் விசாரணை நடத்தி சயான், வாளையாறு மனோஜ் உள்ளிட்ட 10 பேரை முதலில் கைது செய்தனர்.இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான சேலத்தை சேர்ந்த ஓட்டுநர் கனகராஜ் சம்பவம் நடந்த சில நாட்களில் நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திமுக ஆட்சிக்கு வந்தவுடன் கோடநாடு வழக்கு விசாரணை மீண்டும் சூடுபிடித்தது.விசாரணை தீவிரம்: கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர்(ஐஜி), கோவை சரக துணைத் தலைவர்(டிஐஜி) ஆகியோரது நேரடி மேற்பார்வையில் கூடுதல் போலீஸ் அதிகாரிகள் அடங்கிய தனிப்படைகள் அமைக்கப்பட்டு கோடநாடு




கொலை, கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். இத்தனிப்படை போலீஸார் இவ்வழக்கில் முன்னரே கைது செய்யப்பட்ட நபர்கள், சந்தேகத்துக்குரிய நபர்கள் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்வழக்கு தொடர்பாக இதுவரை 200 க்கும் மேற்பட்டோரிடம் போலீஸார் விசாரணை நடத்தியுள்ளனர். இச்சூழலில், கோடநாடு வழக்கு தொடர்பாக விசாரணை நடத்த, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரும், சென்னையைச் சேர்ந்தவருமான கண்ணனிடம் விசாரணைக்கு ஆஜராகுமாறு போலீஸார் சம்மன் அனுப்பினர். அதன் பேரில், கண்ணன் கோவை போலீஸ் பயிற்சி பள்ளி வளாகத்திலுள்ள விசாரணைப் பிரிவு அலுவலகத்தில் நேற்று (28ம் தேதி) ஆஜரானார். விசாரணைக்கு பின்னர் அவர் அனுப்பப்பட்டார். இதைத் தொடர்ந்து இன்று (ஜூன் 29ம் தேதி) 2வது நாளாக ஆஜரான ஓட்டுநர் கண்ணனிடம் போலீஸார் விசாரணை நடத்தினர்.

உயிரிழந்த ஓட்டுநர் கனகராஜ் குறித்தும், இவ்வழக்கு தொடர்பான பல்வேறு கேள்விகள் குறித்தும் அவரிடம் போலீஸார் விசாரித்தனர். காலை முதல் மாலை வரை இந்த விசாரணை நடந்தது.இதுகுறித்து மேற்கு மண்டல ஐஜி சுதாகர் கூறும்போது, ''கோடநாடு விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை தீவிரமடைந்துள்ளது. தொடர்ந்து பல்வேறு நபர்களிடம் விசாரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு நாட்களாக ஓட்டுநர் கண்ணனிடம் விசாரணை நடத்தப்பட்டது'' என்றார்.

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*




# 7-7-2022 வியாழக்கிழமை துர்க்கேஸ்வரத்தில் கொடியேற்றம்

துர்க்கேஸ்வரம், ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலில் எதிர்வரும் 7-7-2022 வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துத்துடன் 21வது மகோற்சவம் ஆரம்பமாகின்றது. ஒரு மகோற்சவத்தில் கொடிமரம், கொடியேற்ற வைபவம் இரண்டுமே மிக முக்கியமானவை. அனைத்துத் தெய்வ அம்சங்களையும் ஒருங்கே மந்திரபூர்வமாக அழைத்து கொடிஸ்தம்பத்தில் வீற்றிருக்க வைத்து வழிபடும் கொடியேற்றத் திருநாளில் இறைவனுடைய தரிசனம் மேன்மையானது.

கொடியேற்ற நாளுக்கு முன்தினம் மகோற்சவ சாந்தி நடைபெறும். யூலை 6ம் திகதி புதன்கிழமை மாலை விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, வாஸ்து சாந்தி, கிராம சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் போன்ற கிரியைகள் நடைபெற்று, யூலை 7ம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கும்பபூஜையுடன் கொடியேற்று வைபவம் ஆரம்பமாகும். ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்வாமிகள் மகோற்சவ குருவாக அமர்ந்திருந்து பூஜைகளை நிகழ்த்தவுள்ளார். யூலை 7ம் திகதி பகல் 10 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்று ஆடிப்பூர தினமாகிய யூலை 31ம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் மகோற்சவம் பூர்த்திபெறும். 25 தினங்களும் காலையும் மாலையும் யாகபூஜை, ஸ்தம்ப பூஜை நடைபெற்று அம்பாளின் அருள், ஆலயத்தினை நிறைக்கும் வகையில் வழிபாடுகள் நிகழும்.

**கொடியேற்றம்**
**7-7-2022 வியாழன்**
**பகல் 10.00 மணி**

**கைலாசவாகனம்**
**12-07-2022 செவ்வாய்**
**இரவு 8.00 மணி**

**மஞ்சத் திருவிழா**
**16-07-2022 சனி**
**இரவு 8.00 மணி**

**வசந்தோற்சவம்**
**24-07-2022 ஞாயிறு**
**இரவு 8.00 மணி**

**பக்த முத்தி பாவனோற்சவம்**
**26-07-2022 செவ்வாய்**
**இரவு 8.00 மணி**

**ஞானப்பால் உற்சவம்**
**27-07-2022 புதன்**
**இரவு 8.00 மணி**

**வேட்டைத் திருவிழா**
**28-07-2022 வியாழன்**
**இரவு 8.00 மணி**

**சப்பறம்**
**29-07-2022 வெள்ளி**
**இரவு 8.00 மணி**

**தேர்த்திருவிழா**
**30-07-2022 சனி**
**காலை 9.00 மணி**

**தீர்த்தம்**
**பூரகர்மம் ருதுசாந்தி**
**31-07-2022 ஞாயிறு**
**காலை 9.00 மணி**

**பூங்காவனம்**
**1-08-2022 திங்கள்**
**மாலை 6.30 மணி**

**வைரவர் மடை**
**2-08-2022 செவ்வாய்**
**மாலை 6.30 மணி**

## யூலை 7 வியாழன் கொடியேற்ற தின வழிபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| காலை | 08.00 | மணிக்கு | கும்ப பூஜை |
| காலை | 08.30 | மணிக்கு | அபிஷேகம் |
| காலை | 09.30 | மணிக்கு | காலை பூஜை |
| காலை | 10.00 | மணிக்கு | வசந்த மண்டபபூஜை |
| காலை | 10.30 | மணிக்கு | கொடியேற்றம் |
| பகல் | 12.00 | மணிக்கு | சந்தி ஆவாகனம் |
| பகல் | 01.00 | மணிக்கு | அன்னதானம் |

## துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா 31-7-2022 சனி

# ஒரு தேசிய அரசாங்கம் சாத்தியமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



“மக்கள் பட்டினியால் வாடினால், நாம் மட்டும் உண்பதில் அர்த்தம் இல்லை. ஆகவே, சென்று எதையாவது செய் எனக்கூறியே - அம்மா என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைத்தார். 6 மாதங்களுக்குள் உங்களாலும் முடியாவிட்டால் - பதவி துறந்து வாருங்கள் என மனைவியும் அறிவுரை வழங்கியுள்ளார். அதேபோல “தாத்தா கம் ஹோம்” (அப்பா வீட்டுக்கு வாங்க) - என பதாகை ஏந்தப்படும் என பிள்ளைகளும் அறிவித்துவிட்டனர். அந்தவகையில் எனக்கான காலம் 6 மாதங்கள். அதாவது 960 மணித்தியாலங்களே எனக்கு வேலை செய்வதற்கான நேரம். அந்த காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்யாவிட்டால், “தாத்தா கம் ஹோம்” எனக்கூறி பிள்ளைகள் எனது வீட்டுக்கு முன் வந்து விடுவார்கள். அப்போது எனக்கு வீடு செல்ல வேண்டிவரும். என்னைபோல் ஒருவருக்கு 6 மாதங்களுக்குள் மக்களுக்கு முன்னேற்றகரமான - பொசிற்றிவ்வாக - எதையாவது செய்ய முடியாவிட்டால், பதவி வகித்து என்ன பயன்?”...... இவ்வாறும் கூறியிருப்பவர் பசிலின் இடத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான தம்மிக்க பெரேரா.

ஒரு கோஷஸ்வரரும் கொடை வள்ளலுமாகிய அவர் அரசியலுக்கு புதுசு. அவர் மீது வரி ஏய்ப்புக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. அவர் நினைப்பது போல நாட் கணித்து ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது. இதே போன்ற நெருக்கடி கிரேக்கத்தில் ஏற்பட்ட பொழுது ஐந்து ஆண்டுகளுக்குள் ஏழு தடவைகள் அரசாங்கம் மாறியது. நிதி அமைச்சர்கள் மாறினார்கள். அர்ஜென்டினாவில் 5 ஆண்டுகளுக்குள் 5 தடவைகள் அரசாங்கம் மாறியது. நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். இலங்கைத் தீவைப் பொறுத்தவரை, ராஜபக்சக்களின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இதுவரையிலும் நான்கு நிதியமைச்சர்கள் வந்துவிட்டார்கள். மூன்று தடவைகளுக்கு மேல் அமைச்சரவை மாற்றப்பட்டிருக்கிறது. எனினும் ரணில் பிரதமராக வந்த பின்னரும் பொருளாதார நிலையில் திருப்பகரமான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. இன்னும் கூராகச் சொன்னால் ரணிலுக்கு முன்பு இருந்ததை விடவும் நிலைமை மோசமாக இருக்கிறது என்பதே சரி. ரணில் ஒரு மந்திரவாதி இல்லை. அவருடைய அமைச்சரவையில் இருக்கும் தம்மிகவும் மந்திரவாதி இல்லை. மந்திர தந்திரங்களில் தேர்ந்த ஞானக்காவே தோற்றுப்போய் விட்டார். கடனை வாங்கி எவ்வளவு காலத்துக்கு நாட்டை நிர்வகிப்பது?

எரிபொருள் நெருக்கடியால் நாடும் வாழ்க்கையும் பெருமளவுக்கு முடங்க தொடங்கிவிட்டன. பாடசாலைகள் முழு அளவில் இயங்குவதில்லை. அரசு அலுவலகங்கள் முழு அளவில் இயங்குவதில்லை. தனியார் வாகனங்கள் பெருமளவுக்கு வீதியில் இல்லை. பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஓடித் திரிகின்றன. இதனால் வாழ்க்கை பெருமளவுக்கு முடக்கப்பட்டு விட்டது. இப்பொழுது எரிபொருளுக்காக வரிசைகளில் நிற்பதுபோல எதிர்வரும் மாதங்களில் உணவுப் பொருளுக்காகவும் வரிசைகளில் நிற்கும் ஒரு நிலை வரலாம் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டு விட்டது. அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றின் விலைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. இதனால் நடுத்தர வர்க்கமும் அரிசியை கொள்வனவு செய்ய முடியாத ஒரு நிலைமை வரலாம். பசி வந்திடப் பத்தும் பறக்கும். இப்பொழுது எரிபொருளுக்காக வரிசைகளில் நிற்பவர்களுக்கு இடையிலேயே வன்முறையான உரையாடல்களையும், வன்முறைச் செயற்பாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது. பசியோடு உணவுப் பொருட்களுக்காக வரிசையில் நிற்கும் ஒரு நிலைமை வந்தால் அங்கே வன்முறை இதைவிடப் பாரதூரமாக இருக்கலாம்.

நடப்பு நிலைமைகளைத் தொகுத்து பார்த்தால் இப்பொழுதுதான் அதிகரித்த அளவில் போராட்டங்கள் வெடிக்க வேண்டும். ஆனால் முன்னரை விடப் போராட்டங்கள் சோர்ந்து போயிருக்கின்றன என்பதே உண்மை. சில நாட்களுக்கு முன் ஜேவிபி ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்குபடுத்தியது. எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாக வரிசைகளில் நிற்பதற்கு பதிலாக அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டு தெருவில் இறங்குங்கள் என்று ஜேவிபி அழைப்பு விடுத்திருக்கிறது. ஆனாலும் ரணிலுக்கு முன்பிருந்ததோடு ஒப்பிடுகையில் இப்பொழுது போராட்டங்களின் வேகமும் செறிவும் குறைந்துவிட்டன என்பதே உண்மை. காலிமுகத்திடலில் போராட்டக் கிராமத்திலும் பிற்பகல் நேரங்களில் வருபவர்களின் தொகை குறைந்து விட்டது. நாட்டை முடக்கும் விதத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் தயங்குகின்றன. ஏனெனில், ஏற்கனவே விநியோகச்சங்கிலி குலைந்து போயிருக்கிறது. தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் அது மேலும் சிதைவடைந்தால், அது மக்களையே தாக்கும். ஏற்கனவே நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் வாழ்க்கை மேலும் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்று ஜேவிபியின் தொழிற்சங்கம் கூறுவதாக, அண்மையில் இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக போராடுவதில் உள்ள ஆபத்தான விடயமும் அதுதான். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் எனப்படுவது அதன் தர்க்கபூர்வ விளைவாக பொதுமக்களைத்தான் மேலும் தாக்கும். ஆனால், நெருக்கடிகள் மேலும் தீவிரம் அடைந்தால் போராடினால்தான் வாழ்க்கை என்று ஒரு நிலை தோன்றலாம்.

எனினும் அவ்வாறான போராட்டங்களுக்கு ஒன்றிணைந்து தலைமைதாங்க எதிர்க்கட்சிகள் தயாராகவில்லை. கடந்த பல மாதகால நெருக்கடிகளுக்கு எதிர்க்கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும். எதிர்க்கட்சிகள் மத்தியில் எல்லா கட்சிகளாலும்

**(தொடர்ச்சி 15ம் பக்கம்)**



# வடக்கு மாகாணக் கல்வி நிலைத் தொடர்பாக குறிப்பிட்ட இலங்கை ஆசிரியர் சேவை சங்க பொதுச் செயலாளர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

2022-06-29 திகதி மாலை 4.45 மணி அளவில் வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அவர்களைச் சந்தித்து, யாமும் (புயல்நேஷன்) இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின தென்மராட்சிக் கல்வி வலய செயலாளர் கி. சிவாநந்தன் அவர்களும் இன்றைய வடக்கு மாகாணக் கல்வி நிலைத் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடினோம்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் முதலியோரின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப, இவ் சந்திப்பை மேற்கொண்டோம். அவ் வேளை ஆரோக்கியமான விடங்கள் கலந்துரையாடப்பட்டன. எரிபொருள், மூன்று நாட்கள் பாடசாலை நடத்துதல், யாழ் வலய உள்ளக இடமாற்றம், மாகாண இடமாற்றம், பாடசாலை செல்லும் நேரம்,
விசேட விடுமுறைகள் முதலிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

போதிய அளவு எரிபொருள் கிடைக்கும் வரை ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வி நலன் கருதி செயற்படும் வண்ணம் கேட்டுக்கொண்டார். ஆசிரியர்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால், பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாவிடின், அவர்களுக்கு விசேட விடுமுறை ஆதாரங்களுடன் வழங்கப்படும் என்றும் பாடசாலையை நடத்தி செல்லுதல் வலயக் கல்விப் பணிப்பாளர்களினதும் அதிபர்களினதும் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணக் கல்வி வலய பணிப்பாளர் தலைமையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உள்ளக இடாற்றம் நோத்தியாக நடைபெற்றுள்ளதாகவும் வெளிமாவட்ட சேவை ஆறு வருடங்களாக்கப்பட்டன (இது இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் புயல்நேஷன் தலைமையில் நடநத்திய பல்வேறு போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தேவை கருதி எமது மகஜர் இணைக்கப்படுகின்றது.) எனவும் பணிப்பாளர் அவர்கள் குறிப்பிட்டார்.

இடமாற்ற சபை கூடி வெளிமாவட்ட சேவை ஆறு வருடங்ளாக்கப்பட்டமையால், மேன்முறையீடுகளுக்கு (2021/2022) இரண்டு தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்படட்ன. நிகழ்நிலையில் 2023 ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்திற்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிப்பது நன்று. அதற்கு விண்ணப்பிக்கும் இறுதி திகதி 08-07-2022 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. முதலிய விடயங்களையும் குறிப்பிட்டார்.

யாழ் வலயத்தில் நேர்தியாக உள்ளக இடமாற்றம் இடம்பெற மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒத்துழைப்பு நல்கியமைக்கு எமது சங்கம் சார்பாக, அவருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தேன்.

இங்ஙனம், தங்கள் தொண்டில்,
புயல்நேஷன்
077 - 9681333
கௌரவ ஆளுநர்,
யாழ்ப்பாணம், வடக்கு மாகாணம்.

18.01.2021.

அனைத்து ஆசிரியர்களுக்கும் இட மாற்றத்தில் சம வாய்ப்பு வழங்கப்படாமை

வடக்கு மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய இட மாற்றத்தில், ஆசிரியர்கள் தமது சேவை காலத்தில் அதிகஷ்ட, கஷ்ட பிரதேசங்களில் ஆறு வருடங்களுக்கு மேல் வெளி மாவட்டங்களில் சேவை ஆற்றிய போதும் எந்த விதமான காரணங்களும் குறிப்பிடப்படாமல் அவர்களின் இவ்வருடத்திற்கான இட மாற்றம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆசிரியர்களுக்கு முதல் நியமனக் கடிதத்தில் சிலருக்கு ஐந்து வருடங்கள் சேவையாற்ற வேண்டும் எனவும் வேறு சிலருக்கு ஐந்து வருடங்கள் மாத்திரம் சேவையாற்ற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்ட போதும், ஒரு வருடம், இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் மேலதிகமாக சேவை ஆற்றிய ஆசிரியர்கள் பலர் உள்ளனர்.

ஒரு பிரதேசத்தில் அல்லது கல்லூரியில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் மூலம் ஏற்படக்கூடிய ஒரு தலைப்பட்ச நிலைமை ஆசிரிய தொழில் விருத்திக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துவதனால், பல்வேறுபட்ட பிரதேசங்கள் பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் கலாசார சூழல்களில் உள்ள கல்லூரிகளின் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் பல்வேறுபட்ட அநுபவங்களைப் பெற்றுக்கொண்டு தமது செயற்றிறனை விருத்தி செய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என தேசிய ஆசிரியர் இட மாற்றக் கொள்கை - சுற்றறிக்கை 2007/20 - 1.6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய இங்கு இட மாற்றங்கள் இடம் பெறுவதில்லை ஆசிரியர்களுக்கிடையே பாராபட்சம் காட்டப்படுகின்றது. அனைத்து ஆசிரியர்களுக்கு இட மாற்றத்தின் போது, காலப் பகுப்பில் சம உரிமை - வாய்ப்பு - வழங்கப்படாமையால், இன்று கல்விச் சமூகம் பெரும் சிக்கலை எதிர் கொண்டுள்ளது எதிர் காலத்தில் இன்னும் பாரிய சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டி வரும் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுகின்றோம்.

வெளி மாவட்டங்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் பொருளாதார ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமையால், திருப்திகரமான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் வாழ்க்கையில் விரக்தி நிலையை அடைந்துள்ளனர். இதனால், வடக்கு மாகாணம் தேசிய ரீதியான கல்விக்கான பங்களிப்பில் பின்னடைவைக் கண்டுள்ளது.

2020.10.30 திகதி அன்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற ஆசிரிய இட மாற்ற சபையில்:- முதல் நியமனக் கடிதத்தில் ஐந்து வருடங்கள் எனக் குறிப்பிடப்பட்டவர்கள் ஆறு வருடங்கள் வெளி மாவட்ட சேவையைப் பூர்த்தி செய்தால், போதும் எனவும் சொந்த மாவட்டத்தில் உள்ள வலயங்களில் வெற்றிடங்கள் இல்லாவிடின் அருகில் உள்ள வலயங்களுக்கு நியமிக்கப்படுவார்கள் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், அவை பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆசிரியர் நலனில்
அக்கறை கொண்ட தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாம் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்க்கின்றோம். தேசிய ஆசிரியர் இட மாற்ற கொள்கையைத் தழுவி இட மாற்றத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது நாட்டடின் கல்வி வளர்ச்சியில் கரிசனை கொண்ட தொழிற் சங்கம் என்ற வகையில், ஆறு வருடங்களுக்கு மேல் வெளி மாவட்ட சேவையை நிறைவு செய்து, பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சாதகமான தீர்வைப் பெற்றுத் தருமாறு, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம், பொதுச் செயலாளர்,
இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்,
இங்ஙனம், (பெ.ஸ்ரீகந்தநேசன்), செயலாளர்,
வடக்குமாகாணம்,
இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

# யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக நடைபெறும் "வென்மேரி" விருதுகள்" வழங்கும் விழா




எமது தாயகமாம் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் தமிழ் பேசும் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழா, எதிர்வரும் 2022 ஆகஸ்ட் 17ம் திகதி யாழ்ப்பாண நகரின் மத்தியில் உள்ள "இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி" மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு இங்கே காணப்படும் விளம்பர அறிவித்தலைப் பார்க்கவும்.

# வவுனியாவை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடி சென்றடைந்தனர்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வவுனியா மாவட்டத்தில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் வியாழக்கிழமை (30) காலை அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கை தமிழர்களை மீட்ட மரைன் போலீசார் ராமேஸ்வரம் மரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் 4 பேரையும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்படுவார்கள்.

வவுனியாவில் இருந்து மன்னாரிற்கு வந்து மன்னாரில் இருந்தே படகு மூலம் தனுஷ்கோடியை வந்தடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,தமது உறவுகள் இந்தியாவில் வசித்து வருகின்ற மையினால் அவர்களுடன் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக தாம் படகு மூலம் வந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போது வரை இலங்கை தமிழர்கள் 96 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




# வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் எம்.பி அமெரிக்கா பயணம்

வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை 35 வது ஆண்டாக நடாத்தும் "மாபெரும் பேரவை தமிழ் விழாவில்" பங்கேற்பதற்காக வட அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் அழைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வியாழக்கிழமை (30) அமெரிக்கா பயணமானார்.

01-06-2022 ஆம் திகதி தொடக்கம் 04-06-2022 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் இந்நிகழ்வு நடை பெறவுள்ளது.

இந்த பயணத்தில் அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுடனும் "தமிழர் தரப்பு நிலைப்பாடு" தொடர்பாக கலந்துரையாட சந்திப்புக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு அமெரிக்க வாழ் தமிழ் அமைப்புகள் பலரோடும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று முன் தினம் தினம் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறித்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வாகனங்களுக்கு பெட்ரோல் விநியோகம்

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வியாழக்கிழமை (30) காலை முதல் வாகனங் களுக்கான எரிபொருள் (பெட்ரோல்) வழங்கப்பட்டது.

இராணுவம் மற்றும் கடற்படையின் உதவியுடன் மன்னார் பிரதேசச் செயலக பணியாளர்களின் மேற்பார்வையில் வாகனங்களுக்கு பெட்ரோல் வினியோகிக்கப்பட்டது.



மோட்டார் சைக்கிலுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கர வண்டிக்கு 2000 ரூபா விற்கும், கார் உட்பட ஏனைய பெட்ரோல் வாகனங்களுக்கு 2500 ரூபாவிற்கும் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வினியொ-கிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஏனைய எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருள் வினியோகிக்கப் படாமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.



இந்த நிலையிலே மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வியாழக்கிழமை (30) காலை முதல் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு டோக்கன் அடிப்படையில் எரிபொருள் வினியோகிக்கப்பட்டது.

நீண்ட வரிசையில் நின்று அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்படும் கழிவு அகற்றும் நடவடிக்கை ஸ்தம்பிதம்



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்திலும் எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கழிவு அகற்றும் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் வாகனங்களுக்கான எரிபொருட்கள் உரிய முறையில் கிடைப்பதில்லை.

இதனால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவு அகற்றும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (29) அன்று கழிவு அகற்றும் வாகனங்களுக்கான எரி பொருட்கள் முழுமையாக கிடைக்கவில்லை. இதன் காரணமாக கழிவு அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்க பாரிய சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல விதமான கழிவு அகற்றும் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்படும்.மக்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே உரிய அதிகாரிகள் குறித்த விடையத்தில் கவனம் செலுத்தி மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு தேவையான எரி பொருட்களை உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டால் கழிவு அகற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத் திருவிழா ஆரம்பம்





மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷே நிகழ்வை முன்னிட்டு பூர்வாங்க கிரிகைகள் வியாழக்கிழமை (30) காலை 10.45 மணி அளவில் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவ சிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

கும்பா விசேசத்திற்கு வருகை தந்த சிவச்சாரியார்கள் மற்றும் தேவாரம் ஓதுபவர்கள், தர்மபுர ஆதி யினத்தினை சேர்ந்தவர்கள் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குருவால் மாலை அனுவிக்க பட்டு மங்கள வாத்தியத்துடன் வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டது.

கிரிகைகளின் போது சாந்தி பூஜைகள் தர்மபுர ஆதீன முதல்வர் மீனாட்சி சுந்தரம் தம்பரான், வேத சிவகாம பாடசாலை முதல்வர் சிவசிறி ஏ.வி.சுவாமிநாத சிவாச்சாரியார் ஆகியோர் முன்னிலையில் இக் கிரியைகள் இடம் பெற்றது.

தொடர்ந்து எதிர்வரும் 5 நாட்கள் இக்கிரிகைகள் இடம் பெறும். எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

6 ஆம் திகதி வியாழக்கிழமை (06-07-2022) அன்று மஹா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெறவுள்ளது. இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து வருகை தந்த பிரதம சிவாச்சாரியார்களின் தலைமையில் ஆரம்பமாகிய இந்த கும்பாபிஷேக திருவிழா ஓதுவார் மூர்த்திகளின் வேத மந்திர பாராயணங்களுடன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் ஜூலை 6 திகதி கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ள நிலையில் பூஜைகள் நடைபெற்று கருவறை இறைவனுக்கு எண்ணைக்காப்பு சாத்திரம் வைபவம் மிகவும் சிறப்பாக இடம்பெற உள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வெளியிடத்து பக்தர்கள் வருகை குறைவாக இருந்தாலும் கும்பாபிஷேக பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# ஒரு தேசிய அரசாங்கம் சாத்தியமா?

(12ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஜனவசியம் மிக்க, மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய தலைவர்கள் கிடையாது. அப்படி யாரும் இருந்திருந்தால், கடந்த சில மாதங்களுக்குள் அவர்கள் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பியிருந்திருப்பார்கள். அப்படி யாரும் இருந்திருந்தால், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்படும் ஒரு நிலைமை தோன்றியிருந்திருக்காது. அப்படி யாரும் இருந்திருந்தால் நாடு அண்மை நாட்களாக பெருமளவுக்கு முடங்கும் ஒரு நிலைமை தோன்றியிருக்காது.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகளுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. பழியை அரசாங்கத்தின்மீது போட்டுவிட்டு எதிர்க்கட்சிகள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றன. பொறுப்பை ஏற்று ரிஸ்க் எடுக்க எந்த ஒரு எதிர்க்கட்சித் தலைவரும் தயார் இல்லை. இந்த நேரத்தில் ரிஸ்க் எடுப்பது என்பது ஒன்றில் மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கி தாமரை மொட்டு அரசாங்கத்தை வீட்டுக்குத் துரத்துவதுதான். அது சாத்தியமான ஒன்றுதான். ஏனென்றால் தாமரை மொட்டுக் கட்சியின் பிதாவான மகிந்த ராஜபக்சபதவி விலகி விட்டார். அக்கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்படும் பசில் ராஜபக்ஷ பதவி விலகி விட்டார். யாப்பின்படி அவர்கள் பதவியை விட்டு விலகவில்லை. அவர்கள் யாப்புக்கு வெளியே நடந்த போராட்டங்களின் விளைவாகத்தான் பதவிகளில் இருந்து விலக வேண்டி வந்தது.எனவே போராட்டங்களை ஒழுங்குபடுத்தி அவற்றுக்கு தலைமை தாங்கினால் தாமரை மொட்டு அரசாங்கத்தை துரத்தலாம். ஆனால் அதற்கு எதிர்க்கட்சிகள் தயாரில்லை.

இப்பொழுது சஜித் அணியும் ஜேவிபியும் கூட்டமைப்போடு இணைந்து ஒரு புதிய கூட்டுக்குப் போக முயற்சிப்பதாக செய்திகள் கிடைக்கின்றன. இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படும் பொழுது உலகின் முன்னுதாரணம் மிக்க ஜனநாயக நாடுகளில் ஒரு தீர்வுதான் ஏற்றுக்கொள்ளப்படும். அதுதான் தேசிய அரசாங்கம். ஆனால் இலங்கைத் தீவு அப்படிப்பட்டயொரு தேசிய அரசாங்கங்கத்தை உருவாக்கக்கூடிய ஜனநாயக பாரம்பரியத்தை கொண்டிருக்கவில்லை. இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் தேசிய அரசாங்கம் என்பது அனைத்து கட்சி அரசாங்கந்தான். மாறாக அனைத்து தேசிய இனங்களையும் பிரதிபலிக்கும் ஓர் அரசாங்கம் அல்ல. அதாவது இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளும் ஓர் அரசாங்கம்தான் உண்மையான தேசிய அரசாங்கமாக இருக்கமுடியும். அப்படி ஒரு அரசாங்கத்தை உருவாக்க சிங்களக் கட்சிகள் தயாரா?

அப்படி ஒரு தேசிய அரசாங்கம் என்பது தோல்விகளுக்கு கூட்டுப் பொறுப்பை ஏற்கும். எதிர்காலத்தை நோக்கி கூட்டாக நம்பிக்கையைக் கட்டியெழுப்பும். ஆனால் அப்படி ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கத் தேவையான செழிப்பான ஜனநாயகப் பாரம்பரியம் இலங்கையில் கிடையாது. அதனால் தான் ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கத் தயாரற்ற ஆளுங்கட்சியானது, ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் ஆக்கியதன்மூலம் தன்னை தற்காத்துக் கொண்டிருக்கிறது. அதாவது ரணில் விக்ரமசிங்க தலைமை தாங்கும் தாமரை மொட்டு அரசாங்கம் எனப்படுவது அதன் மெய்யான பொருளில் ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கத் தயாரற்ற ஒரு மனநிலையின் வெளிப்பாடுதான்.

அண்மைய நிலவரங்களின்படி, சஜித் பிரேமதாசவின் தலைமையிலான எதிர்க்கட்சி ஒரு இடைக்கால ஏற்பாடாக சர்வ கட்சி அரசாங்கத்திற்கு தயார் என்று தெரிகிறது. ஜேவிபியும் அதற்குத் தயார் என்று தெரிகிறது. அரசாங்கத்திலிருந்து பிரிந்து போய் இயங்கும் குழுவும் அதற்கு தயார் என்று தெரிகிறது. ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் போன்ற சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கணிப்புக்குரிய கருத்துருவாக்கிகள், இடைக்கால யாப்பு ஒன்றுக்குப் போக வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு அரசியல் மறுசீரமைப்பை இறுதி இலக்காக வைத்து அவ்வாறு ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு போகவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது எதிர்க்கட்சிகள், விக்ரர் ஐவன் போன்றவர்களின் முன்மொழிவு ஒரு தேசிய அரசாங்கம் அல்லது இப்போது இருப்பதை விடவும் அனைத்துக் கட்சிகளின் பங்களிப்பையும் பெற்ற ஒரு இடைக்கால ஏற்பாடுதான்.

அது இடைக்கால ஏற்பாடுதான் என்பது எல்லாருக்குமே நன்கு தெரிந்திருக்கிறது ஒரு நிரந்தர ஏற்பாடாக தேர்தலை வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன. அவ்வாறு தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் காசு இல்லை என்றால் அதற்கு உதவ சில வெளிநாடுகள் தயாராகக் காணப்படுவதாக சில எதிர்க்கட்சி பிரமுகர்கள் கூறுகிறார்கள். அப்படி ஒரு தேர்தலை நடத்துவதன் மூலம் ஒரு புதிய அரசாங்கத்தை, ஒரு புதிய தலைமையை, மிகக் குறிப்பாக நாட்டு மக்கள் அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒரு தலைமையை உருவாக்கலாமா என்ற கேள்வி இங்கு முக்கியம். ஏனென்றால் இப்பொழுது அரங்கில் உள்ள சிங்களக் கட்சிகள் மத்தியில் அப்படிப்பட்ட தலைவர்கள் யாரும் கிடையாது. கட்சிகளுக்கு வெளியிலிருந்துதான் ஒருவரைக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு கொண்டு வரப்பட்ட ஒருவர்தான் தம்மிக பெரேரா. பொருளாதார நெருக்கடி பற்றியும் அதற்கான தீர்வு பற்றியும் அவர் எப்படிப்பட்ட தெளிவோடு இருக்கிறார் என்பதை இக்கட்டுரையின் தொடக்கத்தில் பார்த்தோம். அவரைப் போன்றவர்களைத்தான் வெளியில் இருந்து கொண்டு வர முடியும் என்றால் நாட்டின் நிலைமை எப்படி அமையும்?


**கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28வது கோடை கால ஒன்றுகூடல்**

**கனடா சித்தன்கேணி ஒன்றியத்தின் 28வது கோடை கால ஒன்றுகூடல் எதிர்வரும் ஜூலை 9ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுரோ மிலிக்கன் பூங்காவில் காலை 10:00 மணிமுதல் நடைபெறவுள்ளது. அன்றயதினம் பிள்ளைகள், பெரியவர்களுக்கான நிகழ்ச்சிகளும், புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் நடைபெறவுள்ளது. இந்த ஒன்றுகூடலில் அனைவரும் கலந்து மதிய போசனத்துடன் உங்கள் உறவுகள், நண்பர்கள் சந்தித்து மகிழ அன்புடன் அழைக்கின்றனர்.**

**உங்கள் வரவை எதிர்பார்க்கும் நிர்வாகத்தினர்.**
**சித்தன்கேணி ஒன்றியம் - கனடா**

**E-mail: sithankerney@gmail.com**
**President: 416-219-9764 Secretary: 647-406-8953**
**Treasurer: 647-718-3324**




# 'தோற்றுப்போன அரசின்' கதாநாயகர்கள் ராஜபக்ஷக்கள்

- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

- சிங்கப்பூராக இருக்க ஆசைப்பட்ட இலங்கை இப்போது லெபனான் பாணியில் பயணிக்கின்றது.
- மக்களின் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்கும் எல்லை உண்டு.

இலங்கையின் 22 மில்லியன் மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடி தற்போது மனிதாபிமான நெருக்கடியாக மாறிவிட்டது. சிங்கப்பூராக இருக்க ஆசைப்பட்ட ஒரு நாடு இப்போது லெபனான் பாணியில் வீழ்ச்சியை எதிர்நோக்குகி உள்ளது. நாளை என்ன நடக்கும் என்பது குறித்த அச்சத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மக்கள் வரிசைகள் நீடிப்பது விலைவாசி உயர்வு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் போவது போன்றவற்றால் நாட்டில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து மோசமாகி வருகிறது.

நாட்டின் பெரும்பாலான மக்கள் பட்டினியை நோக்கி மிக வேகமாகத் தள்ளப்படுகின்றனர்.

50 பில்லியன் டொலருக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடன்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் கையிருப்பு இதுவரை இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது.

இன்றைய நிலையில் இலங்கைக்கு தேவைப்படுவது பொறுப்புமிக்க அரசாங்கமும் நிலையான சர்வதேச முதலீடுமாகும். ஒரு காலத்தில் இலங்கையின் மிக முக்கியமான இருதரப்பு பங்காளியாக இருந்த பிரிட்டன் அமெரிக்கா இந்தியா மற்றும் ஏனைய "குவாட் நாடுகளுடன்" இணைந்து நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கும் சீனாவின் மீதான முதலீட்டு சார்புக்கு ஒரு ஒத்திசைவான போட்டியான மாற்று வழியை வழங்குவதற்கும் அவசர இடைவீட்டு நிதியை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அது நடைமுறைக்கு வருவதாகத் தெரியவில்லை.

அதேவேளையில் புதிய பிரதமர் மற்றும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு ஆறு வாரங்களுக்கு மேலாகியும் அவர்களது கைகளில் பொருளாதார மீட்சித் திட்டம் குறித்து எதுவும் இல்லை. குறிப்பாக மக்கள் பார்வையில் ஆட்சியாளர்கள் வெறும் ஆரூடம் கூறும் ஜீவன்களாகவே தெரிகின்றனர்.

மக்கள் மற்றும் குறிப்பாக பிள்ளைகளின் வாழ்க்கை ஆபத்தில் உள்ளது என்று யுனிசெப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார். அவரது கூற்றுப்படி தெற்காசியாவிலேயே ஊட்டச்சத்தின்மையில் இலங்கைப் பிள்ளைகள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். இந்தச் சிறுவர்கள் நாட்டின் எதிர்கால சொத்து. தற்போதய ஆட்சியாளர்கள் போதுமான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும் தவறினால் நாடு குழப்பமாகவும் அராஜகமாகவும் மாறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது பொறுப்புமிக்க அரசாங்கமும் நிலையான சர்வதேச முதலீடுமாகும். இந்த இரண்டுமே இப்போது இலங்கையில் இல்லை. துரதிஷ்டவசமாக ராஜபக்ஷக்களும் அவரது அரசியல் பங்காளர்களும் அதிகாரத்தில் தம்மை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் தொடர்ந்தும் தமது ஆட்சியை நிலை நிறுத்துவதற்குமான நகர்வுகளையுமே மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் தீர்மானங்களினால் உருவாகிய தவறுகளுக்காகவும் மன்னிப்புக் கோரிய போதும் மக்கள் வழங்கிய ஆணைக்கேற்ப பதவியை விட்டு விலகப் போவதில்லை அதாவது தோற்றுப்போன ஜனாதிபதியாக வெளியேறப் போவதில்லை என்று கோதாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பானது "தோற்றுப் போன நாட்டை" மக்களுக்கு வழங்கிய நிலையிலும் ராஜபக்ஷக்களின் ஆட்சியை கொண்டு நடத்தவே திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என்பதையே காட்டுகின்றது. அதாவது தோல்வியடைந்த" தலைவராக வெளியேற முடியாது என்ற அடிப்படையில் ஜனாதிபதி தயக்கமின்றி பதவியில் தொடர்ந்தும் இருக்கிறார்.

இது பொதுவான அரசியல் தர்மம் மற்றும் அரசியலமைப்பு கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நியாயப்படுத்தலாகும். இவ்வாறான வழிவகைகள் மூலம் ஜனாதிபதி தன்னையும் ராஜபக்ஷக்களையும் மீட்க முடியும் என்று நம்புகின்றாரா? அல்லது நாட்டைமீட்டுவிடுவேன் என்று சபதம் செய்கின்றாரா? ஆனால் இரண்டுமே நடைமுறை சாத்தியமற்றது என்பதை காலம் விரைவில் உணர்த்தும்.

இன்றைய நெருக்கடிக்குள் தேர்தல் வந்தால் அதிகாரத்தை மக்கள் அப்படியே தூக்கி வழங்கி விடுவர் என எதிர்க் கட்சிகள் நினைக்கின்றன. ஆனால் எவ்வித வேலைத் திட்டமும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. வெறும் கையுடனேயே எதிர்க் கட்சிகள் உள்ளன.

ஜேவிபி உட்பட சஜித் பிரேமதாச அடங்களாக இன்றைய நெருக்கடியை கையாள என்ன உபாயத்தை வைத்திருக்கின்றனர் என்பதை அவர்கள் மக்கள் முன் வைக்க வேண்டும்.

மொத்தத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி மனிதாபிமான நெருக்கடியாக மாறி மக்களை பட்டினி நோக்கி விரைந்து தள்ளுவதானது பொதுமக்களின் கோபத்தின் மற்றொரு கொடிய அலைக்கு அரசாங்கம் அழைப்பு விடுப்பதாகவே அமைகின்றது. ஏனெனில் மக்களின் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்கும் எல்லை உண்டு.

Email : vathevaraj@gmail.com

# குடும்ப ஆட்சிகளின் காலம் முடிவிற்கு வருகிறது

**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

**"Family politics can make you suffer your entire life."**

**-Brian Baraack**

"Dynasty rulers die nastily" என்று ஆங்கிலத்தில் ஒரு செலவடை உண்டு.

டில்லியில் நேரு குடும்பத்தினர், பஞ்சாபில் பாதல் குடும்பத்தினர், உத்திர பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் குடும்பத்தினர், பிஹாரில் லாலு பிரசாத் யாதவ் குடும்பத்தினர், தமிழகத்தில் கருணாநிதி குடும்பத்தினர், காஷ்மீரில் அப்துல்லா குடும்பத்தினர், கர்நாடகாவின் தேவகௌடா குடும்பத்தினர், பாகிஸ்தானில் புட்டோ மற்றும் நவாஸ் ஷெரீ.்.ப் குடும்பத்தினர், வங்கதேசத்தில் முஜிபுர் ரஹ்மான் குடும்பம், இலங்கையில் பண்டாரநாயக்க மற்றும் ராஜபக்ச குடும்பத்தினர் என்று தெற்காசியாவிலுள்ள இவர்கள் அனைவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு-குடும்ப கட்சி மற்றும் ஆட்சி.

இவர்களில் சிலரை உங்களுக்குத் தெரியும், பலரை உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம், ஆனால் தெரிந்துகொள்வது காலத்தின் கட்டாயம்.

ஆனால் அதற்கு முன்னர், இந்தியாவின் மராட்டிய மாநிலத்தின் தலைநகரம் மற்றும் நாட்டின் நிதித்துறையின் தலைநகரம் என்று அறியப்படும் மும்பையில் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்ற அரசியல் இழுபறிகளும் அதையடுத்து ஒவ்வாத கூட்டணி மற்றும் குடும்ப ஆட்சி குற்றச்சாட்டுக்கு ஆளான அரசின் ஆட்சி பறிபோனதை நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த வாரம் புதன்கிழமை (29) மிக அபூர்வமாக இந்திய உச்சநீதிமன்றம் இந்தியாவின் மராட்டிய மாநிலத்தில் நிலவிய அரசியல் நெருக்கடி தொடர்பான அவசர வழக்கை மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை விசாரித்து இரவு 9 மணிக்கு, அங்கு உத்தவ்தாக்ரே தலையில் இருந்த சிவசேனை, தேசியவாத காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகியோரின் கிச்சடி ஆட்சி வியாழன் (30) காலை சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கு கோர வேண்டும் என்று தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்ற தீர்ப்பை அடுத்து உத்தவ் தாக்ரே இரவோடு இரவாகப் பதவி விலகினார்.

அடுத்த 24 மணி நேரத்தில் சிவசேனை கட்சியிலிருந்து பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்களுடன் வெளியேறி கிளர்ச்சி செய்த ஏக்நாத் ஷிண்டே, பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவுடன் மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சராக மும்பையில் பதவி ஏற்றார். இப்படியான அரசியல் கேலிக் கூத்துகள் தெற்காசியாவில் புதிதல்ல. மூன்று கால்களில் நிற்பது என்றுமே ஆபத்தானது. அந்த நான்காவது காலை யார் எப்போது இழுத்து கீழே தள்ளுவார்கள் என்கிற அபாயம் தலைக்கு மேல் கத்தியாகவோ அல்லது கையில் கத்தியாகவோ உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் தெற்காசியாவில் குடும்ப கட்சிகள் மற்றும் ஆட்சிகளுக்கு மக்களிடையே ஆதரவு மிகவும் குறைந்துவிட்டது. இதற்கு அடிப்படையில் அரச நிர்வாகத்தில் குடும்பத்தினரின் தலையீடே முக்கியக் காரணம். வயது மற்றும் அரசியல் அனுபவங்களுக்கு அப்பாற்பட்டு சுய கௌரவத்தை இழந்து கட்சியின் தலைவரின் குடும்ப உறுப்பினர்கள் என்கிற ஒரே காரணத்திற்காக அவர்களிடம் வளைந்து நெளிவது, அரசின் அதிகாரிகளின் நியமனம், அரச வேலைகள், சாதாரண வீட்டுக்கு குழாய் இணைப்பு தொடங்கி பல்லாயிரம் கோடி பெறுமான அரச ஒப்பந்தங்கள் குடும்ப உறுப்பினர்கள் கைகாட்டும் ஆட்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என்கிற நிலை ஆகியவையே கட்சி மற்றும் மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்துகிறது.

இதற்கு அண்மைக் காலத்தில் சிறந்த உதாரணமாக மராட்டிய மாநிலத்தில் ஜூன் 30 ஏற்பட்ட ஆட்சி மாற்றம். கடந்த சட்டமன்ற தேர்தலில், சிவசேனை மற்றும் பாரதிய ஜனதா கட்சி கூட்டாகப் போட்டியிட்டு ஆட்சி அமைப்பதற்குத் தேவையான இடங்களைப் பெற்றது. ஆனால் சிவசேனை கட்சியின் தலைவர் தானே ஆட்சி காலம் முழுவதும் முதல்வராக இருக்க வேண்டும் என்று



பிடிவாதம் பிடித்து யாரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டார்களோ அதே காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸுடன் கூட்டணியுடன் ஆட்சி அமைத்தார். இதன் பின்னர் முதல்வர் உத்தவ் தாக்ரே மற்றும் அவரது மகன் ஆதித்ய தாக்ரே ஆகியோர் வைத்ததே ஆட்சியில் சட்டம் என்ற குற்றச்சாட்டு வேகமாகப் பரவியது. இதன் காரணமாக கட்சியின் மூத்த நிர்வாகிகள் மற்றும் சிவசேனை சார்பில் ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் ஓரங்கட்டப்பட்டனர். சிவசேனையின் சார்பில் சட்டமன்றத்திற்கு தெரிவாகியிருந்த 55 உறுப்பினர்கள் 40 உறுப்பினர்கள் ஏக்நாத் ஷிண்டே பக்கம் தாவி அவருக்கு ஆதரவளித்தனர். சொந்தக் கட்சியிலேயே கிளர்ச்சி செய்து வெறியேற அவர்கள் கூறிய முக்கிய காரணம் "பட்டத்து இளவரசரை" தாண்டி யாரும் எதுவும் செய்ய முடியாது என்பதே.

இந்தியாவை யார் ஆட்சி செய்வார்கள் என்பதை முடிவு செய்யும் முக்கிய மாநிலமாக இருக்கும் உத்தர பிரதேசத்தில் பலம் வாய்ந்த ஒரு தலைவராக இருந்தவர் முலாயம் சிங் யாதவ். ஆனால் அவர் கட்சியை மகனான அகிலேஷ் யாதவிடம் ஒப்படைத்த பிறகு 2014, 2017, 2019, 2022 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் அவரது சமாஜ்வாதி கட்சி படுதோல்வி அடைந்தது. அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வென்ற பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கைவிட்டார், அதற்கு கடந்த வாரம் இடைத் தேர்தல் நடைபெற்ற போது அவரது கட்சி அங்கு தோல்வியடைந்தது. அவர் வீட்டைவிட்டு வெளியேறுவதில்லை ஏசி அறையிலிருந்தே அரசியல் செய்கிறார் என்று கட்சிக்காரர்களே கூறுகின்றனர்.



பஞ்சாப் மாநிலத்தில் ஆளுமைக்க மிக்க தலைவராக இருந்தவர் பிரகாஷ் சிங் பாதல். இந்திரா காந்தியை எதிர்த்து அரசியல் செய்து, ஜனதா கட்சியின் ஆட்சியில் அமைச்சராகவும், சுமார் 10 ஆண்டுகள் பஞ்சாபின் முதலமைச்சராகவும் இருந்தவர் பாதல். ஆனால் தனக்குப் பிறகு மகன் சுக்பிர் சிங் பாதலை கட்சியின் தலைவராகவும் மாநிலத்தின் துணை முதலமைச்சராகவும் ஆக்கினார். அதுமட்டுமின்றி தனது மருமகளை மத்திய அரசில் அமைச்சராக்கினார். அதிலிருந்து கட்சிக்கு வீழ்ச்சி ஏற்பட்டது மட்டுமின்றி ஆட்சியும் பறி போனது. இன்றளவும் கட்சியால் மீள முடியவில்லை.

காங்கிரஸ் கட்சியின் நிலையே பல ஆண்டுகளாகக் கவலைக்கிடமாகவே உள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து சுமார் 50 ஆண்டுகள் ஆட்சியில் கோலோச்சியது. குடும்பம் வைத்ததே கட்சியிலும் ஆட்சியிலும் சட்டம் என்பது காங்கிரஸ் ஆட்சியில் எழுதப்படாத விதி. நேரு, இந்திரா, ராஜீவ் ஆகியோர் பிரதமர்களாக இருந்த போது, அவர்கள் நினைத்த மாத்திரத்தில் மாநிலங்களில் கட்சியின் தலைவர்களை மாற்றுவது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளை மத்திய அரசின் எதேச்சாதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைப்பது, கட்சிக்கு கப்பம் கட்டாதவர்களை தூக்கி எறிவது என்பதெல்லாம் அக்கட்சியில் சர்வ சாதாரணம். எனினும் கட்சியின் தலைவராக சோனியா காந்தியும் அதற்கு பின்னர் அவரது மகன் ராகுல் காந்தியும் பதவியேற்றதிலிருந்து கட்சிக்கு தொடர்ந்து இறங்குமுகம் மற்றும் தோல்விகள். ஆனாலும் அதற்கு தாயும் மகனும் பொறுப்பல்ல என்று கட்சியில் உள்ள துதிபாடிகள் தொடர்ந்து கூறி ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி கட்சி இன்று அதலபாதாளத்திற்கு சென்றுவிட்டது. கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக தொடர்ந்து நாடகம், அதைத் தொடர்ந்து "போகாதே போகாதே" என்ற நாடக ஒப்பாரி, பின்னர் மீண்டும் தலைமையேற்பு பிறகு மீண்டும் தோல்வி இதுவே காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலை.

இந்தியாவில் நிலவும் குடும்ப ஆட்சி மற்றும் வாரிசு அரசியலுக்கு இலங்கை எந்த வகையிலும் விதிவிலக்கல்ல. இன்று மிகவும் மோசமான நிலையில் நாடு இருப்பதற்கும் மேலும் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதற்கும் ராஜபக்ச குடும்பமே காரணம் என்பது ஊரறிந்த உண்மை. உலகில் எங்கும் இல்லாதபடி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து சகோதரர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கையில் நாடு சிக்கித் தவித்தது. இன்றும் ராஜபக்ச சகோதரர்களுக்கு ஆட்சிக் கட்டிலைவிட்டு இறங்க மனம் வரவில்லை. நாடு முழுவதும் சமைத்து சாப்பிட வசதியில்லை, மக்கள் மண்ணெண்ணெய், பெட்ரோர், டீசல், எரிவாய் போன்றவற்றைப் பெறுவதற்கு மணிக்கணக்குச்



சென்று இப்போது நாட்கணக்கில் வரிசையில் நிற்கின்றனர். தற்போது அதுவும் இராணுவத்தின் கைகளுக்குச் சென்றுவிட்டது. போர் வெற்றிக்கு தாங்களே காரணம் என்று கூறி எந்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று பேரினவாத கொள்கைகளை முன்னெடுத்தார்களோ, இன்று அதே சிங்கள மக்கள் அவர்களுக்கு எதிராக போராடுகின்றனர். இனி தமக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்பதை உணர்ந்துள்ள ராஜபக்ச சகோதரர்கள் "வந்தவரை லாபம், கொண்டவரை மோகம்" என்ற சிந்தனையில் உள்ளனர்.

இவை அனைத்திலும் மிகவும் முக்கியமானதொரு கேள்வி உள்ளது. மக்கள் ஏன் வாரிசு அரசியலை வெறுக்கின்றனர் அல்லது குடும்ப ஆட்சியை தூக்கி எறிகின்றனர்?

அதற்கு அடிப்படையாக அரசியல் ஆய்வாளர்கள் கூறும் காரணம், "தகுதியில்லாத அடுத்த தலைமுறையிடம் ஆட்சி மற்றும் கட்சியை ஒப்படைப்பது". அது மட்டுமின்றி வாரிசு அரசியல் ஜனநாயக விழுமியங்களை நசுக்குகிறது் கட்சியில் நீண்டகாலம் உழைத்தவர்களின் உழைப்பும் அபிலாஷையும் அங்கீகரிக்கப்படுவதில்லை, "கொள்ளையடித்த பணம் குடும்பத்திடம் உள்ளது, பணம் இல்லாமல் அரசியல் செய்ய முடியாது, அப்படி செலவு செய்த பணத்தை மீண்டும் எடுப்பதற்கு ஊழல் செய்ய வேண்டும், முறைகேடாகச் சம்பாதித்த பணம் குடும்பத்திடமே இருக்கிறது, தேர்தலில் மீண்டும் போட்டியிடப் பணம் தேவை, அந்த பணத்திற்கு குடும்பத்திடம் கையேந்த வேண்டும், வெளிவர முடியாத இந்த சுழற்சியே குடும்ப ஆட்சி மற்றும் வாரிசு அரசியலிற்குக் காரணம்" என்கிறார்கள் அந்த ஆய்வாளர்கள்.


இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சியும் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முக்கிய காரணமும் அவர்கள் குடும்ப ஆட்சி மற்றும் வாரிசு அரசியலிற்கு எதிராக முன்னெடுத்த மிகப் பெரிய பரப்புரையாகும். அது மக்களிடையே நன்றாக எடுபட்டது. எனவே, அவர்களால் மத்தியிலும் பல மாநிலங்களிலும் ஆட்சியை கைப்பற்ற முடிந்தது.




ஆனால் இலங்கையில் இருபெரும் கட்சிகளான ஐக்கிய (மில்லாத) தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து இப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவாக செயல்படும் கட்சியும் குடும்ப அரசியலில் ஊறிப்போனவை. எனவே குடும்ப ஆட்சி அல்லது அரசியல் என்று அவர்கள் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்ட முடியாது. தேசியளவில் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளோ, சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலேயே உள்ளது. பேரினவாதத்திற்கு மாற்றாக ஒரு சித்தாந்தத்தை முன்வைத்து ஆட்சிக்கு வர முடியவில்லை.

குடும்ப ஆட்சி மற்றும் வாரிசு அரசியல் என்பது ஜனநாயகத்தின் சாபக்கேடு. அது தெற்காசியாவில் தீர்க்க முடியாத ஒரு தொற்று வியாதியாக, கொரோனாவை விட மோசமாக 70 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. ஆனாலும் தற்போது இந்தியாவின் வாரிசு அரசியலில் ஏற்படும் வீழ்ச்சியானது ஜனநாயக விழுமியங்கள் மீண்டும் துளிர்க்கும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.


ALLSTATE'S
2022 NATIONAL CHAMPION AWARD WINNER!
RONALD ANTON
Allstate Trusted Advisor and Agent
GET A FREE QUOTE
FOR AN EXCLUSIVE DISCOUNT, PLEASE CALL:
416.846.6479
Allstate.
You're in good hands.
உங்கள் வீடு, வாகண காப்புறுதி தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
தமிழிலும் உரையாடலாம்


HAPPY
CANADA DAY
NICK MANTAS
& The Ward 22 Team
Nick Mantas
Councillor
Ward 22,
Scarborough-Agincourt
அனைவருக்கும் எமது இனிய
கனடா தின நல்வாழ்த்துக்கள்!




# Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is finally available at the Beer Store




Sinha Stout, the indisputable king of dark beers, presents its big brother – Sinha Lager – to Canadian beer connoisseurs. With a rich heritage of close to 150 years, the Sinha range prides itself amongst Asia's greatest beers, winning global acclaim across every continent.

Brewed since 1881, with water, malted barley, rice, hops and caramel, Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is a perfect thirst quencher on a hot sunny day. Sinha Lager pairs well with Asian, African, Middle Eastern, and Western cuisine said Stefan Atton, Vice President of the international business for Lion Brewery Ceylon PLC.

Sinha Lager is renowned to be a great thirst quencher with an alcohol strength of 4.8%. It stems from an age-old recipe using the finest ingredients promising great flavour and refreshment. Six-packs will be available at 89 stores across Brampton, Bolton, Georgetown, Mississauga, Oshawa, Ajax, Whitby, Toronto, Etobicoke, and North York, retailing at just $17.45 for a six pack of 330ml bottles.

The award-winning Sinha Lager hails from sunny Sri Lanka and boasts a history stretching back to 1881 when British Explorer, Sir Samuel Baker, set up Ceylon Brewery to cater to European tea farmers living in the mountains of Sri Lanka 6000 feet above sea level.

The brews produced at the Lion Brewery in Sri Lanka are some of the best kept secrets from the rest of the world, until their discovery in the 90s when the brewery started exporting beyond its shores and have since won global acclaim including several gold medals at the prestigious Monde Selection beer awards.

During the promotional period to mark its foray into Canada, Sinha Lager, will participate at the Toronto Festival of Beer, and this will be the first time a Sri Lankan beer will be showcased at the annual Beer Fest. The event will take place from 22nd to 24th of July and offers a great opportunity for Canada's beer aficionados to flavour this acclaimed beer all the way from salubrious Sri Lanka.

Upon its discovery by global beer connoisseurs, Sinha Lager, is tantalizing drinkers around the world, and is now available at the Beer Store in Canada. True to Sri Lanka's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence.

"For many years, our discerning customers in Canada have flavoured the jewel in our crown, Sinha Stout – the 'best Stout in the world', as endorsed by the legendary late beer hunter, Michael Jackson. Now we offer our other hidden gem, Sinha Lager, and we have no doubt consumers will fall in love with this legendary beer . This golden lager with a crisp refreshing finish, was born in the mountains of Sri Lanka 6000 feet above sea level. This award-winning exotic 4.8% lager offer hints of fruit, caramel, and subtle hop notes.

Hilton
TORONTO/MARKHAM SUITES CONFERENCE CENTER & SPA

WE ARE HIRING

Benefits
– Team Member plus Friends & Family rate at family of brands worldwide,
– Free one meal during working shift
– Complimentary parking

Full Time
- Bartender
- Banquet Chef
- Banquet Supervisor
- Banquet Porter
- Busperson
- Dishwasher
- Housekeeping Supervisor
- Lobby Attendant
- Maintenance
- Maintenance Coordinator
- Assistant Front Office Manager
- Wedding & Special Events Manager
- Pastry Chef
- Room Attendant
- Sous Chef
- Security Guard
- Switchboard Operator
- Third Cook
- Third Cook Pasty

Part Time
- Guest Service Agent
- Night Auditor
- Room Attendant
- House Person
- Security Guard
- Dishwasher
- Restaurant Server

APPLY NOW

Send Your Resume Today!
HR@markhamsuites.com

Hilton Toronto/Markham Suites Conference Centre & Spa
8500 Warden Avenue, Markham, Ontario L6G 1A5



AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா

6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.

- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து தங்குமிட வசதி காலை உணவு பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956






SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
SINHA
LAGER
IMPORTED
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

# ஆத்மார்த்த அஞ்சலி

## கனடா இந்துமாமன்றத்தின் வாழ்நாள் செயலதிபர்

## மாண்புமிகு வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்

பூமியோடு: **18 Jan, 1949** சாமியோடு: **27 June, 2022**




**உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்குவதில்லை !**

கள்ளமில்லா சிரிப்பு கனிவான அணைப்பு
உள்ளம் எல்லாம் நிறைந்து
உதவிடும் தொண்டன்
வெள்ளமெனப் பாய்கின்ற
தருமத்தின் புதல்வன்
தெள்ளமுதாம் சைவத்தினை
சைவநீதியாய் செப்பிய தமிழன்
கடந்த மூன்று தசாப்தங்களாக கனடாவில்
“கனடா இந்துமாமன்றம்” என்ற அமைப்பின்
செயலாளராக பணியாற்றி தொண்டு செய்து
வந்த பன்னாளுமையும், பேராண்மையும்
நிறைந்த செயல் வீரன்
வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்
எம்மை விட்டு பிரிந்தார் என்பதனை
ஆழ்ந்த கவலையுடனும் கண்ணீருடனும்
பகிர்ந்து கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்

கனடா இந்து மாமன்றம்

**Canada Hindu Maamantram**

# மரண அறிவித்தல்



**தோற்றம்:** 18 - 01 - 1949

**மறைவு:** 27 - 06 - 2022

# திரு. நந்தீஸ்வரர் வேலுப்பிள்ளை

**(Professional Engineer)**
**Building Inspector City of Markham**
உரிமையாளர் **Nanthee & Son's Building Inspecton**
கனடா இந்து மாமன்றச் செயலாளர், கனடா மகாஜனா **OSA** போசகர்

**யாழ்ப்பாணம், பன்னாலையை பிறப்பிடமாகவும் Toronto வை வதிவிடமாகவும் கொண்ட திரு. நந்தீஸ்வரர் வேலுப்பிள்ளை அவர்கள் 27.06.2022 அன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்வநாயகியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான Dr. சபாரட்ணம், சிவஞானரட்ணம் அவர்களின் பாசமிகு மருமகனும்,
ஜெகரட்சினியின் அன்புக் கணவரும்,
பிரணவன் (Bell Canada), அமரர் வித்தகன், Dr. சித்தகன், Dr. விமுத்தன், Dr. பவித்ரா (Sandhurst Dental Clinic) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜபாலினி, சாந்தலதா, சுபாசினி, தயாளன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,
திருமதி. சிவஞானமலர், அமரர் பாக்கியலீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,
ஜெகஜெனனி, ஜனார்த்தனகுமார், அமரர் விஸ்வநாதன், அமரர் சாந்தினி, சிறிதரன் ஆகியோரின் அருமை மைத்துனரும், அமரர் சிவலிங்கம் அவர்களின் சகலனும்,
அட்சயா, அகரன், ராஜி, கார்த்தி, மகி, மாறன், வேந்தன், காவியன், தீரன், டிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home (8911 Woodbine Avenue, Markham எனும் முகவரியில் July 2ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மற்றும் July 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணி முதல் 2 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் 2 மணியில் இருந்து 3.30 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் Highland Hills Crematorium (12492 Woodbine Avenue, Gormley) எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**மனைவி மற்றும் பிள்ளைகள்**

**தொடர்புகளுக்கு:**
**Home : (416)496-9595**
**Prianavan (Prabu) : (416)726-0822**
**Chithakan (Chitha) : (905)599-2423**
**Vimuthan : (647)999-5420**
**Pavithra : (647)939-2810**


MORTGAGES & REFINANCES
WE WILL GET THE MORTGAGE FOR
• LOW INCOME
• BAD CREDIT
• CONSUMER PROPOSAL
அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!
PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS
WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU
Shan Thayaparan
Mortgage Architect M08009140
416-826-7426
shan@shan123.com
MORTGAGE ARCHITECTS

# கனடாவுக்கு சுவாமியின் வருகை - 2022



## "குரு பிரம்மா, குரு விஷ்ணு, குருதேவா மகேஸ்வரகா குரு சாட்சா பரப்பிரம்மம் தஸ்மயி ஸ்ரீகுருவே நமக''.

சற்குரு சரவணபாபா சுவாமி விரைவில் கனடா வரவிருக்கிறார் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கனடாவுக்கு சுவாமி புதியவர் அல்ல. 2015 முதல் இன்று வரை 8 முறை எம்மைத் தேடி, எமக்கு ஆசி வழங்குவதற்காக கனடா வந்துள்ளார். சிவகுமாரனே அருட்குமாரனாக அவதரித்துள்ளார் என யாவராலும் போற்றப்படுபவர் எங்கள் சுவாமி. சிறுவயதிலேயே உலகியலில் இருந்து விடுதலையாகி குருவடிவம் தாங்கினார். இன்று அனைத்துக் கண்டங்களிலும் கால்பதித்து தனது புனிதப்பணியை மேற்கொண்டு வருகிறார். இவர் தன்னை வருத்தி எம்மை வாழ வைக்கும் மகான். பெற்ற தாய் போல எம்மை மன்னிக்கும் மனம் கொண்டவர். இவரது நிபந்தனையற்ற அன்பு, நட்பை வளர்த்தது. அவர் தரும் ஆலோசனைகளும், (சற்சங்கம்) போதனைகளும் நல்லாசிரியனாய் நின்று எம்மை வழிநடத்தின. அவரது புன்சிரிப்பும், பண்பும் அவரை தெய்வமாகவே காட்டின. தனக்கென்று எதையும் தேட மாட்டார். உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளையும் சமமாக மதித்து நடப்பார். உலகில் அமைதியும், உடல் ஆரோக்கியமும், உள்ளத்துக்கு ஆனந்தமும் அனுக்கிரகமாக வேண்டுமென்று பிரார்த்தனை செய்வார். 'சர்வ யோகா சமஸ்தா சுகினோ பவந்து' என்று வேண்டுதல் செய்யும்படி எம்மையும் ஊக்குவிப்பார்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள ஸ்ரீகிருஷ்ணபுரம், பாலக்காடு என்ற இடத்திலும், கலிகட்டில் உள்ள மயிலாடுகுன்னு என்ற மலையிலும், லண்டனில் பார்நெற் என்ற இடத்திலும் கோவில்கள் அமைத்து மனித குலத்திற்கு அன்பையும் புரிந்துணர்வையும் வழிகாட்டி வருகிறார்.

ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கும் எமது கர்மாக்களை களைவதற்கும் குருவின் துணை அவசியம். பக்தி மார்க்கத்திலிருந்து எம்மை ஞானமார்க்கத்துக்குக் கொண்டு செல்லும் வல்லமை குருவுக்கு மட்டுமே உண்டு. 'குரு தான் எமக்கு எல்லாம்' என சங்கல்ப்பம் செய்து அதற்கான மனப்பக்குவத்தை அடைந்தால் குருவின் ஆசியும் பேரின்பமும் கிட்டும்.

சுவாமியை தரிசிப்பதால் உண்டாகும் அனுபவம் சுவாமிக்கும் சுற்றத்தாருக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும். ஆர்வம் சாதனைக்கு வித்தாகும். சாதனை மூலம் உண்மையை உணர்தல் சாத்தியமாகும். இதுவே பக்தி மார்க்கமாகும். நல்லதை நினைப்பதும், நல்லதைச் செய்வதும், மானசசாதனை. மந்திரங்களையும், சுலோகங்களையும் பாராயணம் பண்ணுதல் மந்திர சாதனை. தானம் செய்வது கர்ம சாதனை. இவற்றைவிட அன்னதானம், வித்தியாதானம், வஸ்திரதானம் என பல உண்டு. இந்த பக்தி மார்க்கத்தில் உள்ளவரை ஞானமார்க்கத்துக்கு இட்டுச் செல்ல குருவால் மட்டுமே முடியும். 'குரு இல்லா வித்தை பாழ்' என்பது முதுமொழி.

சற்குரு ஸ்ரீசரவணபாபா சுவாமி முருகனின் அவதாரமெடுத்ததுடன் மக்கள் மீது நிபந்தனையற்ற அன்பும் கொண்டவர். சேவையின் மகத்துவத்தை அவரது சற்சங்கங்களில் வலியுறுத்தி வருகிறார். சற்சங்கங்களில் சுவாமி இந்து மதத்தின் அறக்கருத்துக்களை தமிழில் மிக எளிமையான முறையில் எமக்கு உணர்த்தி வருகிறார். பதிவு செய்யப்பட்டவை எக்காலத்துக்கும் நிரந்தரமானவை. சுவாமியை தரிசிப்பதுடன் அவரது சற்சங்கத்தை உற்றுக் கேட்டலும் சேவைகளில் தலையானவை, இதையே பக்தி சாதனை என்பார்கள். சுவாமி மேற்கொள்ளும் பஜனைகளும், ஆராதனைகளும் மிகவும் புனிதமானவை. இவை உள்ளத்தை உருகவைக்கும் அனுபவங்களாக இருக்கும். சுவாமி எந்நேரமும் மந்திரங்களையும் சுலோகங்களையும் உச்சரித்தபடியே இருப்பார். தன்னை வருத்தி, தன்னை நம்பியவர்களை அரவணைத்துக் காத்து வருகிறார் எங்கள் சுவாமி. சுவாமியை நம்பியவர்கள் தங்களது அனுபவங்களைத் தெரியப்படுத்துகையில் சுவாமி தம்முடன் துணை நின்றதால் மலைபோல் வந்த கஸ்டம் பனிபோல் மறைந்தது என்று சுவாமியிடம் சரணடைகின்றனர்.

சேவைகளில் ஒன்று தானம் செய்தல். சுவாமியின் வழிகாட்டலில் உலகளாவிய தர்மகாரியங்கள் நடைபெறுகின்றன. சுவாமி ஈழமண்ணுக்கு பல தடவைகள் விஜயம் செய்துள்ளார். கதிர்காம கந்தன் ஆலயத்தில் திரையின் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கந்தனின் விக்கிரகம் சுவாமியிடம் கையளிக்கப்பட்டது. இது சேவைக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். வன்னியிலுள்ள சிறிய கிராமங்களுக்கும் போய் உடல் ஊனமுற்றவர்களையும், போரால் நலிவடைந்த மக்களையும் கண்டு ஆசியும் வழங்கி பொருளுதவியும் செய்துள்ளார். ஈழ மக்களின் கண்ணீரைத் துடைக்க தன்னை வருத்தியுள்ளார். சுவாமி எம்மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவதில் சிகரம் வைத்தாற் போல அமைந்தது முல்லைதீவு கடற்கரையில் சுவாமி ஆற்றிய ஆத்மசாந்திப் பிரார்த்தனை. திருக்கேதீஸ்வரம், சிவனிடம் அனுமதி பெற்று முள்ளியவளையில் தானங்கள் செய்து முல்லைக் கடற்கரையில் ஏக்கங்களுடனும், தவிப்புடனும் போரில் உயிர் நீத்த அத்தனை மக்களுக்கும் சாந்தி கிட்ட வேண்டுமென்று சுவாமி செய்த பிரார்த்தனையாகும். வற்றாப்பளை அம்மனிடம் மறுபிறப்பு கிட்ட வேண்டுதலும் செய்யப்பட்டது. இதன் மூலம் சுவாமி எங்கள் இதயங்களில் பதிவாகி விட்டார். கனடாவில் சற்குரு சரவணபாபாவின் வழிநடத்தலில் பல ஆண்டுகளாக ஒரு அமையம் இயங்கி வருகின்றது. இங்கு இரத்ததானம், உணவு வங்கிக்கு பொருள் சேகரித்தல், மரநடுகை, முதியோர் இல்லங்களில் பிரார்த்தனை நடத்துதல், நற்பணிக்கான வீதியோட்டத்தில் பங்கு பற்றுதல் போன்றவை நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுடன் மாதம் இருமுறை கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டு சுவாமியின் போதனைகளைப் பலரும் அறியும்படி செய்வதுடன் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

மக்கள் தம் உள்ளத்தை உணர்த்துவதற்காகவும் ஞான ஒளியை காண்பதற்காகவும் ஞான பிரசாதம் பெறுவதற்காகவும் கனடாவில் ஞானஜோதி பீடம் என்ற தர்மநிலையம் அமையவிருக்கின்றது. இது ஒரு பாடசாலையாகவும். தேவசாலையாகவும், தர்மசாலையாகவும் அமையும் என்பது சுவாமியின் தீர்க்கதரிசனம். அடியவர்களுக்கு கர்ம வினைகளில் இருந்து விமோசனம் கிடைக்க ஞானஜோதி பீடம் துணை நிற்கும். குருவருள் மூலம் திருவருள் கைகூடி அனைவரது வாழ்விலும் சுகமும் சந்தோசமும் கைகூட வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் எமது சற்குருவை வரவேற்க நாம் எல்லோரும் ஒன்று கூடி தயாராகுவோம்.

சுவாமியை தரிசித்து ஆராதனைகளில் பங்குபற்றி சற்சங்கத்தை உற்றுக் கேட்டு சுவாமியின் கையால் பிரசாதத்தைப் பெற்று பேரானந்தம் பெற அனைவரையும் வரவேற்கிறது கனடா சரவணபவா சேவா அமையம், சுவாமியின் நிகழ்ச்சி நிரல் பின்னர் அறிவிக்கப்படும்.

ஓம் சரவணபவ.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


SRI LANKA
A Warm Welcome Awaits
இலங்கைக்கு வரும் போது
இங்கே தங்கி யாழ் உணவையும் சுவைக்கலாம்
MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON
CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.
குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்
Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்
நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006
ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006
councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com
416-396-7222

# உள்வீட்டுச் சண்டையால் அதிமுக பலவீனப்படுவது தமிழ்நாட்டு அரசியலுக்கு நல்லதல்ல

- கனடா நக்கீரன்

ஒரு உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. உறை அதற்கு இடம் கொடாது. ஆனால், இந்தச் சொற்றொடர் உவமை அணியில் தான் எப்போதும் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டு இரண்டு பிரதமர்கள் என்பது நாட்டில் நடக்க முடியாத ஒன்று.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது இடத்துக்கு அவரது இணைபிரியாத் தோழி சசிகலா நடராசன் அதிமுக இன் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனை அடுத்து அவரே புதிய முதலமைச்சர் என அறிவிக்கப்பட்டார். ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன கதையாக அப்போதுதான் சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றன்றத் இறுதித் தீர்ப்பு வெளிவந்தது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா 1991 முதல் 1996 வரையிலான ஆட்சி காலத்தில் வருமானத்திற்கு பொருந்தாத வகையில் 66 கோடியே 65 லட்சத்து 42 ஆயிரத்து 318 ரூபாய் சொத்து சேர்த்ததாக குற்றம்சாட்டு. வருமானத்திற்கு பொருந்ததாத வகையில் சொத்து குவிப்பதற்கு ஜெயலலிதாவிற்கு உள்நோக்கத்துடன் உதவி செய்ததாக அதிமுக பொதுச்செயலாளராக இருக்கும் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ம் தேதி பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹாவால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார். நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை, 100 கோடி அபராதம் விதிக்கப்பட்டதால் தனது பதவியை ஜெயலலிதா துறந்தார்.

சசிகலா, இளவரசி மற்றும் திவாகரன் ஆகியோர்க்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனையம் 10 கோடி ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டது. சசிகலா நான்காண்டுகள் கழிந்து பரப்பன அக்ரஹார சிறையில் இருந்து சனவரி 27, 2021 இல் விடுதலையானார். இடையில் சசிகலா அதிமுக இல் இருந்து வெளியேற்றப்பட்டார். அவரது இடத்துக்கு ஓபிஎஸ் ஒருங்கிணைப்பாளராகவும் இபிஎஸ் இணை ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

இவர்களை இரட்டைக் குழல் துப்பாக்கிகள் என வர்ணித்தாலும் இருவருக்கும் இடையில் உள்ளூர விரிசல், மோதல் தொடர்ந்து இருந்து வந்தது. கடந்த யூன் மாதம் 23 ஆம் திகதி அதிமுக தலைமை அலுவலகமான "எம்ஜிஆர் மாளிகையில்" நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில் அது பூகம்பமாக வெடித்தது. கட்சி ஆதரவாளர்கள் ஒருவரோடு ஒருவர் தள்ளு முள்ளில் ஈடுபாட்டர்கள். கூட்டம் அமைதியாக நடைபெற தமிழ்நாடு காவல்துறை பாதுகாப்பு அளித்தது. இப்போது இரண்டு கன்னையும் நீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணையம் என மாறி மாறி ஏறி இறங்குகிறார்கள். பிந்திக் கிடைத்த செய்தியின் படி ஓபிஎஸ் அவரது ஒருங்கிணைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக இபிஎஸ் கடித மூலம் அறிவித்துள்ளார். இதற்கு எதிராக ஓபிஎஸ் நீதிமன்றப் படிகளில் ஏறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
தமிழ்நாடு தொலைக்காட்சிகளில் இபிஎஸ் - ஓபிஎஸ் அணிகளுக்கு இடையே வெடித்துள்ள உட்கட்சி மோதல் தொடர்ந்து அலசப்படுகிறது. ஒரு வார காலமாக அதுவே முக்கிய விவாதப் பொருள் ஆகியிருந்தது!

ஜெயலலிதா சிறை சென்ற போதெல்லாம் முதலமைச்சர் நாற்காலியில் தனது நம்பிக்கைக்கு பாத்திரமான ஓபிஎஸ் அவர்களை அமர்த்திவிட்டே சென்றார். அதிமுக ஆட்சியில் பத்து ஆண்டுகள் (2014 - 2021) நிதி அமைச்சராகவும் ஓபிஎஸ் இருந்திருக்கிறார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, அவர் டிசம்பர் 6, 2016 அன்று மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வரானார். இருப்பினும், சசிகலா நடராசனின் அழுத்தத்தால் 5 பெப்ரவரி, 2017 இல் பதவி விலகினார். அவரது இடத்துக்கு சசிகலாவால் தெரிவு செய்யப்பட்டவர்தான் இபிஎஸ் அவர்கள்.

71 வயதான ஓபிஎஸ் தமிழ்நாட்டின் பெரியகுளத்தில் பிறந்து 18 வயதில் கல்லூரியில் படிக்கும் போதே திமுகவில் அரசியல் தொண்டரானார். அரசியல் வாழ்க்கைக்காக 12 ஆம் வகுப்புக்குப் பிறகு படிப்பை நிறுத்தினார். 1972 இல் எம்.ஜி.ஆர் கருணாநிதி தலைமையிலான திமுகவில் இருந்து பிரிந்து அதிமுகவை உருவாக்கிய போது அதில் ஓபிஎஸ் 1973 இல் இணைந்தார். 2011 இல் நடந்த சட்ட சபைத் தேர்தலில் முதல் முறையாக போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதற்கு முன்னர் அவர் ஒரு தேநீர் கடையை நடத்தி வந்தார். உழைப்பால் உயர்ந்தவர். தந்தை ஒரு விவசாயி.

தமிழ்நாட்டு வாக்காளர்களில் ஒரு பகுதியினர் சாதிரீதியாக வாக்களிக்கிறார்கள். ஓபிஎஸ் தேவர் சமூகத்தைச் சார்ந்தவர். சசிகலாவும் அதே சமூகத்தைச் சார்ந்தவர்தான். எம்ஜிஆர் அதிமுக வை தொடங்கிய காலம் தொட்டு இந்த சமூகத்தினரே அவர் வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளனர்.

இன்றைய அதிமுக இல் எம்ஜிஆர் அல்லது ஜெயலலிதா போன்ற ஆளுமை மிக்க தலைவர்கள் இல்லை. அதுதான் சிக்கல். நாடாளுமன்றத் தேர்தல், சட்டசபைத் தேர்தல்களில் தொடர்ந்து அதிமுக தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்பதற்குக் காரணம் இந்த ஆளுமைப் பஞ்சம்தான்.

திமுக இல் இருந்து எம்ஜிஆர் 14 ஒக்தோபர், 1972 இல் நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அதே ஆண்டு அதிமுக வை தொடங்கிய எம்ஜிஆர் தன் அரசியல் பலத்தை ஆழம் பார்க்கவும், அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு பாடம் புகட்டவும் தக்க தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் எதிர்பார்த்த அந்த தருணம் வந்தது. திண்டுக்கல் தொகுதி நா.உ திமுக வைச் சேர்ந்த இராஜாங்கம் இயற்கை எய்தினார். இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. திமுகவிலிருந்து வெளியேற்றப்பட்ட எம்ஜிஆர் அரசியலில் சாதிப்பாரா, திமுக எனும் ஆலமரத்தை அவரால் எதிர்க்க முடியுமா எனப் பல்வேறு கேள்விகள் எழுந்தன. அவற்றுக்கு திண்டுக்கல் இடைத் தேர்தல் மூலம் விடை அளிக்க எம்ஜிஆர் உறுதி பூண்டார்.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# ஜெயலலிதா வேடத்தில் நடித்தால் நீதிமன்றம் வழக்கு என்று அலைய முடியாது என்கிறார் நடிகை ரம்யா கிருஷ்ணன்

சினிமா



ரஜினியின் படையப்பா படத்தில் நீலாம்பரி கதாபாத்திரம் மூலம் ரசிகர்களை மிரட்டி இருந்தார் நடிகை ரம்யா கிருஷ்ணன். இப்படத்திற்குப் பிறகு இவருக்கு மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்த படம் பாகுபலி. அந்தப் படத்தில் இவருடைய ராஜமாதா சிவகாமி தேவி கதாபாத்திரம் பலராலும் கவரப்பட்டது. இந்நிலையில் இயக்குனர் கௌதம் மேனன் மற்றும் பிரசாத் முருகேசன் இணைந்து இயக்கிய குயின் வெப் சீரிஸில் ரம்யா கிருஷ்ணன் நடித்திருந்தார். மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை தழுவி இந்த வெப்சீரிஸ் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வெப் சீரிஸில் குழந்தைப்பருவ ஜெயலலிதா கதாபாத்திரத்தில் அனிகாவும், அதன்பின்பு இளமையான தோற்றத்தில் ரம்யா கிருஷ்ணனும் நடித்திருந்தார். அப்படியே ஜெயலலிதாவின் பிம்பத்தை ரம்யா கிருஷ்ணன் கண்முன் காட்டி இருந்தார். இந்த தொடரின் வெற்றியை அடுத்து தற்போது குயின் சீரிஸின் இரண்டாம் பாகம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ரம்யா கிரு'ணன் படபிடிப்பி தளத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டிருந்தார். தற்போது ரம்யா கிருஷ்ணன் குயின் படக்குழுவுக்கு ஒரு வேண்டுகோள் வைத்துள்ளாராம். அதாவது இந்த தொடரில் சர்ச்சை அதிகம் இல்லாமல், சுவாரசியமாக எடுக்கவேண்டும். நீதிமன்றம் வழக்கு என்று அலையாத படி என்னை நடிக்க வையுங்கள் என குயின் படக்குழுவிடம் ரம்யா கிருஷ்ணன் கோரிக்கை வைத்துள்ளார்.

ஜெயலலிதாவின் வாழ்க்கையும் பல சர்ச்சைகள் நிறைந்து இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதிலும் அவருடைய இறப்பு தற்போது வரை மர்மமாகவே உள்ளது. மேலும் சில விஷயங்களை தவறாக பிரதிபலித்தல் தொண்டர்கள் மத்தியில் இது பெரிய சர்ச்சையாக வெடிக்கும். இதனால் முன்கூட்டியே ரம்யாகிருஷ்ணன் படக்குழுவிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

# ஆண்ட்ரியாவுடனான காதல் குறித்து மனம் திறந்த இசையமைப்பாளர் அனிருத்

ஆண்ட்ரியாவுடன் காதலை முறித்துக் கொண்டதை அனிருத் பல வருடங்களுக்கு முன்பு ஒரு பேட்டியில் பகிர்ந்துகொண்டது, தற்போது பரவி வருகிறது. தனுஷ் நடிப்பில் வெளியான, 3 திரைப்படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் அனிருத். அதன் பின்பு விஜய், அஜித், ரஜினிகாந்த், கமலஹாசன் என பல முன்னணி நடிகர்களின் திரைப்படங்களில் இசையமைத்து வருகிறார். மேலும் ஆண்ட்ரியாவும் பல திரைப்படங்களில் பாடியும், முக்கியமான கதாபாத்திரங்களில் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். இந்நிலையில் அனிருத் இசையமைப்பாளராக அறிமுகமான காலகட்டத்தில் இவரும், ஆண்ட்ரியாவும் காதலித்து வருகின்றனர் என்றும் இவர்கள் இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி நெட்டிசன்களிடம் விமர்சனத்துக்குள்ளானது. இதையடுத்து ஆன்ட்ரியாவும், அனிருத்தும் சில காலங்கள் காதலித்து வந்த நிலையில், இருவரும் பிரிந்த செய்தி வெளியானது. அப்போது ஒரு பேட்டியில், அனிருத்திடம் அவரது காதல் தோல்வி குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், நான் காதலித்த பெண் என்னுடன் 6 வயது பெரிய பெண்ணாக இருந்ததால், எங்களுக்கு அதிக கருத்து வேறுபாடுகள் இருந்து வந்ததாக தெரிவித்தார்.

ஆண்ட்ரியாவை காதலிக்கும் போது, அவருக்கு 25 வயது என்றும் தனக்கு 19 வயதே இருந்ததாகவும் அனிருத் தெரிவித்திருந்தது, தற்போது பரவி வருகிறது. சமீபத்தில் அனிருத் இசையில் வெளியான விக்ரம் திரைப்படம் பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்று வரும் நிலையில், அவரது இசை இப்படத்திற்கு மேலும் ஒரு பலம் சேர்த்துள்ளது. இதனிடையே அனிருத் கூடிய விரைவில் திருமணம் செய்ய உள்ளதாகவும், கீர்த்தி சுரேஷும், அனிருத்தும் தற்போது காதலித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகி வருகிறது. இந்நிலையில் தற்போது பல வருடங்களுக்கு முன் அனிருத் கொடுத்த பேட்டி பரவியதால் முடிந்து போன ஆண்ட்ரியாவின் காதல் தற்போது அம்பலமாகியுள்ளது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்னது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


JULY 9
SATURDAY
@ 6:00PM
PRABHA
MAGISHA
RACHEL
SABEASAN
RAJITHA KIRUBAN
SHARMILA
AKALIYA THARMAKULARAJAH
Mega Tuners
FUNDRAISER EVENT
விடியலைத்தேடி 2022
PRIMA DANCE SCHOOL EST. 2011
இடம்
Ayyappan Temple
635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8
25th
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
Majestic City
The Biggest South Asian Indoor Mall in North America.
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Leasing Opportunity
Crish Sivakolunthu (Project Manager)
647 218 3698 or 416 291 3555

# உள்வீட்டுச் சண்டையால் அதிமுக பலவீனப்படுவது தமிழ்நாட்டு அரசியலுக்கு நல்லதல்ல

(25ம் பக்கத் தொடர்ச்சி

எம்ஜிஆர் எடுத்து ஒரு முடிவு தமிழக தேர்தல் வரலாற்றையே திருப்பிப் போட்டது. அப்போது எம்ஜிஆரின் ”உலகம் சுற்றும் வாலிபன்” திரைப்படம் திரைக்கு வரத் தயாராக இருந்தது ஆனால் படத்தை திரையிடவிடமாட்டோம் என ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்ப்பு எல்லாவற்றையும் முறியடித்து அந்தப் படம் அசுர வெற்றிபெற்றது.



திண்டுக்கல் தேர்தலில் திமுகவுக்குத் தன் ஆதரவை ஈவேரா பெரியார் தெரிவித்தார். திண்டுக்கல் தேர்தலில் “உங்கள் ஓட்டு தமிழனுக்கா அல்லது அந்நியனுக்கா“ என்ற கேள்வியை கருணாநிதி எழுப்பினார். பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே 20 மே, 1973 அன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. எது நடக்கக் கூடாது என திமுக நினைத்ததோ அது நடந்தது. அதிமுக வேட்பாளர் 2.6 லட்சம் வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். ஆளும் கட்சியான திமுக 93 ஆயிரத்துக்கும் சற்று அதிக வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருந்தது. நிறுவன காங்கிரஸ் வேட்பாளருக்கு இரண்டாம் இடம் கிடைத்திருந்தது.

1977 இல் சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. 1987 இல் அவர் மறையும் வரை நடந்த மூன்று சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக வலம் வந்தார். அவர் மறைவுக்குப் பின்னர் அவரது அரசியல் வாரிசாக விளங்கிய செல்வி ஜெயலலிதா அதிமுக இன் பொதுச் செயலாளராக 28 ஆண்டுகள் இருந்தார்.

எம்ஜிஆருக்கு அறிஞர் அண்ணா மீது இருந்த அளப்பரிய பற்று மற்றும் மதிப்புக் காரணமாகவே அண்ணாவின் பெயரைக் கட்சிக்கும் கட்சியின் கொடியில் அண்ணாவின் படத்தையும் வைத்தார். என்றும் வளர்பிறையாக இருந்த எம்ஜிஆர் போன்ற சந்திரன் வழிநடத்திய கட்சியில் இன்று இருப்பவர்கள் மின்மினிப் பூச்சிகளாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அண்ணா சொல்லிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காற்றில் போய்விட்டது. இனி அதிமுக கட்சிக்கு தேய் பிறைதான். இப்படியான ஒரு வலாற்றுப் பின்னணியைக் கொண்ட அதிமுக இல் ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் இருவரும் ஆளை ஆள் ஒளித்து விளையாடுகிறார்கள்.

மொத்தம் 2,190 உறுப்பினர்களைக் கொண்ட அதிமுக பொதுக் குழுவில் (முழு எண்ணிக்கை 2,665) நூறுக்கும் குறைவான உறுப்பினர்களது ஆதரவே ஓபிஎஸ் க்கு இருப்பதாக இபிஎஸ் அணியினர் சொல்கிறார்கள். ஆனால் ஓபிஎஸ் ஒன்றரைக் கோடி அதிமுக உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் தனது பக்கமாக இருக்கிறதாகச் சொல்கிறார். ஆனால் யதார்த்தம் வேறுவிதமாக இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.



அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் அதிமுகவுக்கு ஒற்றைத் தலைமை வேண்டும் என்பதைப் பெரும்பான்மை அதிமுக அடிமட்டத் தொண்டர்கள் விரும்புகிறார்கள். அதே நேரம் இபிஎஸ்தான் அந்தத் தலைவர் என்பதை பலரும் ஏற்றுக் கொள்ளவில்லை. சசிகலாவை எடப்பாடி நாலு காலில் ஊர்ந்து போய் அவரை ஏமாற்றி கட்சியைக் கைப்பற்றி விட்டார். இப்போதும் அதே போல் ஓபிஎஸ் அவர்களை வெளியேற்றிவிட்டு பொதுச் செயலாளர் பதவியை பெற்று முழுக் கட்சியையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகிறார். சசிகலா, ஓபிஎஸ் போலவே தங்களையும் இபிடிஎஸ் ஏமாற்றிவிடுவார் அவரை நம்ப முடியாது என்று பல கட்சி நிருவாகிகள் கருத்துச் தெரிவித்திருக்கிறார்கள்.

விரைவில் அதிமுக இல் ஓபிஎஸ் வகித்த பொருளாளர் பதவி உட்பட எல்லாப் பதவிகளும் பறிக்கப்பட்டு கட்சியில் இருந்து அவர் ஓரங்கப்படுவார். போதாக்குறைக்கு ஓபிஎஸ் ”துரோகத்தின் அடையாளம்” என அதிமுக இன் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் தரக்குறைவாக விமர்ச்சித்துள்ளார். இது பலரது முகத்தை சுழிக்க வைத்துள்ளது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எம்ஜிஆர் காலத்தோடு போய்விட்டதா? அதிமுக இல் வெடித்திருக்கும் ஒற்றைத் தலைமைபற்றிய சிக்கல் நீடிக்குமானால் அதிமுக உடைய வாய்ப்புண்டு. ஏற்கனவே டிடிவி தினகரன் அதிமுக இல் இருந்து விலகி அம்மா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியுள்ளார்.

சிறைசென்று திரும்பிய சசிகலா நடராசன் பொதுச் செயலாளர் பதவியை மீண்டும் கைப்பற்ற நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதே நேரம் `அ.தி.மு.கவை மீட்பேன்“ எனச் சொல்லி கட்சித் தொண்டர்களைச் சந்தித்துப் பேச சசிகலா சுற்றுப் பயணம்மேற்கோண்டார். அது வெற்றி பெறவில்லை. சசிகலாவுக்கு ஆதரவாக சில மாவட்டங்களில் அதிமுக நிர்வாகிகள் தீர்மானம் நிறைவேற்றினாலும் பெரும்பான்மையினர் ஆதரவு அளிக்கவில்லை.

உள்வீட்டுச் சண்டையால் அதிமுக பலவீனப்படுவது தமிழ்நாட்டு அரசியலுக்கு நல்லதல்ல. பாஜக போன்ற மதவாதக் கட்சிகள் தமிழ்நாட்டில் வலுவாக காலூன்ற அது வழிவகுத்துவிடும். ”இபிஎஸ் யை முதல் அமைச்சர் நாற்காலியில் இருத்தியதே பாஜக தான் என அதன் சட்ட சபை உறுப்பினர் நயினார் நாகேந்திரன் சொல்கிறார்!




# பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட புலனாய்வு அதிகாரியின் இறப்புக்குப் பின்னர் மனைவிக்கு நஸ்டஈடு

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசாவினது வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பு



பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த புலனாய்வு அதிகாரியின் இறப்புக்குப் பின்னர் அவரது மனைவிக்கு நஸ்டஈடு வழங்கப்பெற்ற சம்பவம் தொடர்பாக தென்னிலங்கையில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்த வழக்கில் மெற்படி புலனாய்வு அதிகாரியின் மனைவியின் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசாவினது வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பினால் தென்னிலங்கையில் அரசாங்கத்தின் அநீதியான நடவடிக்கைக்கு எதிராக நீதி கிட்டியுள்ளதாக பெரும்பான்மை இன மக்கள் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா அவர்களைப் பாராட்டி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பாக அறியப்படுவதாவது; பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நஸ்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இது எனவும் தற்போது தென்னிலங்கையில் பேசப்படும் ஒரு வழக்காக இது கருதப்படுகின்றது.

கொழும்பு - 8 பொரளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இரகசியமாக இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் புலனாய்வு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துர்யலாகே தர்மதாச 2007ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அரச புலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை நடத்திய பின்னர் அவருக்கு எதிராக RDX 23 கிராம் தனி உடமையில் வைத்திருந்தமை, 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சயனைட் வில்லைகளை தனி உடமையில் வைத்திருந்தமை மற்றும் பாதுகாப்பு இரகசியங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத் துறைக்கு வழங்கியமையென மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் 2010ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12 வருடங்களாக நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் அரசாங்க தரப்பினதும், எதிராளி தர்மதாச சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசாவினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி, தனது தீர்ப்பில் எதிராளி தரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசாங்க தரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை 2019ம் ஆண்டு விடுதலை செய்து அறிவித்தார்.

2019ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ் மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசியலமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சிறுநீரக பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த தர்மதாஸ சிறுநீரகக் கோளாறால் அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால் அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்த போது தர்மதாச அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையாலேயே அவரின் நோய் தீவிர நிலைமைக்குச் சென்றுள்ளது. இப்போது அவரின் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்தச் சுத்திகரிப்புச் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மனுதாரருக்கு உரிய சிகிச்சையும், பராமரிப்பும் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான மோசமான நிலையை அடைந்திருக்க மாட்டார். தர்மதாசவின் இந்த நிலைக்கு பொலிஸாரும், சிறைச்சாலை தரப்பினரும், சட்ட மா அதிபருமே காரணம் எனக் குற்றம்சாட்டி நீதியான நிவாரணத்தைக் கோரி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் அந்த மனுவில் ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றிவிட்டது அரசாங்கம். தர்மதாச குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ நஷ்டஈடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தகுந்த சிகிச்சையின்றி மேற்படி புலனாய்வு அதிகாரி சிறையில் இருந்தபோது மாமியாரின் ஓய்வூதியப் பணமே தர்மதாசவின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையை கொண்டு செல்ல உதவியது. தர்மதாச விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வூதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்க வேண்டிய அவலம் தொடர்கின்றது என மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கையில் தர்மதாச 2021ம் ஆண்டு மார்கழி மாதம் மரணமடைந்ததையடுத்து தர்மதாசவின் மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில் இம்மாதம் 24ஆம் திகதியிடப்பட்டு தர்மதாசவின் மனைவிக்கு 55,23,808.18 ரூபாவிற்கான காசோலை அரசாங்க தரப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# திருக்குறள் கூறும் ஊக்கத்தின் மேன்மை

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.com, M.A)
வள்ளுவன் வழி உலக இணையப்பள்ளி நிறுவுநர்
தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்



**திருக்குறள் கூறும் ஊக்கத்தின் மேன்மை**

காதலையும், வீரத்தையும், கொடைச் சிறப்பையும் சங்கப் பெரும் புலவர்கள் பாடி வந்தனர். தொடர்ந்து வந்த சங்கமருவிய காலப் பகுதியில் அறநெறி தாழ்ந்து அநீதி தலை தூக்கியது. அதனால் அக்காலத்து மக்களுக்கு அறநெறி போதிக்க நீதிநெறி இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன. அக்காலப் பகுதியில் திருக்குறள் மேன்மை மிகு நீதி நூலாகத் தெய்வப் புலவர் திருவள்ளுவரால் படைக்கப்பட்டுப் பின்னர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக வைக்கப்பட்டது.

தடுமாறிய மனிதனை நேரிய வழியிற் கரைசேர்க்க எழுந்த கலங்கரை விளக்கமே திருக்குறள். இந்நூலானது தெவிட்டாது தித்திக்கும் அற்புத அதிமதுரமாகும். வாழ்வுப் பிணிகளைப் போக்கும் அரியதொரு ஔடதம். பன்மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பல்லின மக்களையும் கவர்ந்திழுக்கும் நூலாக விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் தாண்டியும் உயிர்வாழும் சிரஞ்சீவியான இந்நூல், நாம் சீரிய வழியில் வாழ அரிய நல் அறங்களைக் கூறுகிறது. உலக அரங்கிலே தமிழனின் பெருமைகளைத் தக்கவைத்துக்கொண்டிருக்கும் உயிர்நூல் இது. "பிறப்பால் அனைவரும் ஒத்தவர்களே" என்ற பொதுப்பண்பை உரக்கக் கூறிநிற்கிறது. மொழி, இனம், மதம், நாடு அத்தனையையும் கடந்த "உலகப் பொது நூல்" என்ற பெருமை இந்நூலுக்கு உண்டு.

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்டது தமிழ்நாடு**
**- மகாகவி பாரதியார் -**

உலகு பயனுறும் வகையில் அவதரித்தவர் திருவள்ளுவர் என்பதனை இவ்வரிகள் மூலம் மகாகவி நமக்குக் கூறினார். திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுயநலமின்றி ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் நோக்கிய பெருமகனார் ஆவார். மனித மனங்களின் இயல்புகளை முழுமையும் அறிந்த பெருஞானி இவர். அறம், பொருள், இன்பமென ஐயன் வள்ளுவன் வகுத்த முப்பாலிலும் உள்ள 1330 குறள்களும் நீதியின் சிகரங்கள். கள்ளருந்தல், சாதிப்பிரிவினை, புலால் உண்ணல், மாற்றான்மனை கவர்தல், அழுக்காறு, கோபம், பேராசை, வன்சொல், வன்செயல் என்ற பல தீமைகளையும் ஒழித்து மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்று சமூகப் புரட்சி செய்த புரட்சியாளர் இவர்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**
**(அதிகாரம் - இல்வாழ்க்கை, குறள்-50)**

என்ற குறள் மூலம் அறவழி வாழ்வோர் மனிதர்களாயினும் மனிதர்களால்த் தெய்வமாகத் துதிக்கப்படுவர் எனக்கூறி, புனிதர்களாய் வாழுங்கள் என வழி காட்டினார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் இலக்கு என்பது அவசியமானது. அந்த இலக்கினை அடைவதற்கு ஊக்கம் இருக்கவேண்டும். ஊக்கமும், உயர்வான எண்ணங்களும் இணையும்போதே வாழ்வில் வெற்றிக்கனிகளை நாம் சுவைக்க முடியும். எமது வாழ்க்கைக் கனவுகள் எப்பொழுதும் மேன்மையானவையாக இருக்கவேண்டும். பிறந்தோம் இறந்தோம் என்றில்லாமல் வாழ்விலே பண்பாளர்களாக, வெற்றியாளர்களாக வியக்கத்தகு அதிசயங்களை நிகழ்த்துபவர்களாக வாழ்வதே சிறப்பாகும். இதனையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும் எமக்கு "ஊக்கமுடைமை" என்ற தனது அறுபதாவது அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இதேபோன்று ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்திலும் இடைவிடாது உழைத்து ஓர் செயலை நிறைவேற்றும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். உடைமை என்பது சொத்தாகும். எனவே வாழ்வில் ஊக்கமே உயர்ந்த உடைமையாகிறது. ஊக்கமுடைமை அதிகாரம் செயல் ஆற்றுவதில் தளர்ச்சியின்றி மன எழுச்சி உடைத்தாதலைச் சொல்லியது. ஆள்வினையுடைமை அதிகாரம் அச்செயலை முடியுமாறு முயலுதலைக் குறிக்கிறது.

**உடையர் எனப்படுவது ஊக்கம்அஃது இல்லார்**
**உடையது உடையரோ மற்று**
**(அதிகாரம் - ஊக்கமுடைமை, குறள் எண்-591)**

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்**
**(அதிகாரம் - ஊக்கமுடைமை, குறள்-592)**

என்ற குறட்பாக்கள்மூலம் ஊக்கமே ஒருவருக்குச் சொத்தாகுமென்றும் அது இல்லாதவர் பிற இருப்பினும் சொத்துடையார் ஆகார் என்றும், ஊக்கமே ஒருவரின் பொருளுடைமையாகும். மற்ற பொருளுடைமை நிலையற்று அழிந்துவிடும் என்றும் வலுவாக எடுத்துக் கூறினார்.

ஆரம்ப காலங்களில்த் தெய்வ நம்பிக்கை, குரு நம்பிக்கை, கிரக நம்பிக்கை, அரச நம்பிக்கை போன்றனவே மக்களை ஆட்சி செய்தன. திருவள்ளுவரே முதன்முதலில் தன்னம்பிக்கை பற்றி அதிகம் கூறியவர். முயற்சியும், ஊக்கமும் ஒரு மனிதனின் தன்னம்பிக்கையினை வளர்க்கும் என்பதைக் கூறி ஒரு தந்தையாக எம்மை வழிப்படுத்தியவர். தெய்வமும் அருள்செய்யாது போகலாம் ஆனால் எமது முயற்சி என்றும் தோற்காது என்பதனைக் கீழ்வரும் குறளிற் கூறியுள்ளார்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை, குறள்-619)**

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை குறள்-620)**

சோர்வு இல்லாமற் குறைவின்றி எப்பொழுதும் விடாமுயற்சியோடு உழைப்பவர்கள், பயனைத் தடுக்கும் ஊழ்வினையயும் வெல்வர் என்பது வள்ளுவர் கூறும் அறிவுரையாகவுள்ளது.

**"ஊக்கமது கைவிடேல்" என்று**
**ஆத்திசூடியில் ஔவையும்,**

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே**
**இச்சகத்தில் உள்ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,**
**அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சமென்பதில்லையே..**

என்ற மகாகவியின் வரிகளும் அண்டிப் பிழைப்பதைத் தூக்கி எறிந்துவிட்டுத் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டுமென்று கூறுகின்றன. எத்தனை பெரும் இடர்கள் வரினும் கலங்கா நெஞ்சத்துடன் வெற்றி நடை போட வைக்கிறார்கள் எம் சான்றோர்கள்.

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்**
**(அதிகாரம் - இடுக்கணழியாமை, குறள்-621)**

துன்பத்தைக் கண்டு துவளாதீர்கள் என்ற வள்ளுவர் அத்துன்பத்தை உங்கள் சிரிப்பொலியினால் விரட்டியடியுங்கள், அச் சிரிப்பொலியே உங்கள் துன்பத்தை எதிர்த்து வெல்லும் ஆயுதம் என்கிறார். உங்கள் மனதில் மகிழ்வும், முகத்திற் புன்முறுவலும் இருக்க வேண்டுமே தவிர கண்ணீர் அல்ல என்பதைக் கூறி நம்மை ஊக்கப்படுத்தியுள்ளார். விழுவதெல்லாம் அழுவதற்கில்லை, சவால்களும், தோல்விகளும் நம் வாழ்வின் முன்னேற்றப் படிக்கற்கள் என்பதை வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை,குறள்-611)**

நம்மால் இதைச் செய்யமுடியாது என்று மனம் தளரக்கூடாது. அதைச் செய்து முடிக்கும் ஆற்றலை முயற்சியே தரும் என்ற நம்பிக்கையை நமக்கு வள்ளுவர் ஊட்டுகிறார். தோல்வியை அவமானமாகக் கருதுவதைக் கைவிட்டு, தோல்வி என்பது நிலையானது அல்ல, கடந்து வரக்கூடியதுதான் என்று எண்ண வேண்டும். வாழ்விற் பின்னடைவுகள் ஏற்பட்டாலும் நம் எதிர்காலம் முடிந்துவிட்டது எனச் சிந்திக்காமல் அடுத்து வரும் வாய்ப்புகள் வாழ்வில் ஒளியேற்றும் என்று நம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் செயற்பட வேண்டும்.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்**
**பட்டுப்பாடு ஊன்றும் களிறு**
**(அதிகாரம் - ஊக்கமுடைமை குறள்-597)**

போர்க்களத்தில் நிற்கும் யானை அம்பு தைத்த துன்பத்தால் துடித்துப் போகும். மேனி முழுதும் குருதி ஒழுகும். ஆனால் அந்த யானையோ மனந் தளர்ந்து விடுவதில்லை. போர்க்களத்தை விட்டுத் தோற்று வெளியே ஓடி விடாது நெஞ்சுறுதியோடு நின்று தன் பெருமையை நிலைநாட்டும். அச்சம் தவிர்த்துத் தொடர்ந்து போராடும். அதுதான் யானையின் குணம். யாரால் நமக்குத் துன்பம் ஏற்படுத்தப்பட்டாலும் அத்துன்பத்தைத் தோற்கடித்து, சோதனைகளைச் சாதனைகளாக்கி முன் செல்லுங்கள்.! முன்னே செல்லுங்கள்.!! என்கிறார் தெய்வப்புலவர் வள்ளுவர்.

**உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து**
**(அதிகாரம் - ஊக்கமுடைமை குறள்-596)**

நாங்கள் எப்பொழுதும் உயர்வையே நினைக்க வேண்டும். அது ஒருவேளை நிறைவேறாமல் விட்டாலும் எய்திய தன்மையோடு ஒக்கும் என்பது இக்குறளின் கருத்து. எனவே வீழ்ச்சி கண்டு ஒருபோதும் நாம் சோர்ந்துவிடக் கூடாது. மறுபடியும் மறுபடியும் முயற்சிக்க வேண்டும். ஊக்கமும், விடா முயற்சியும் வாழ்வில் அவசியமானவை.

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை, குறள்-612)**

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை, குறள்-616)**

**மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரையினாள்.**
**(அதிகாரம் - ஆள்வினையுடைமை, குறள்-617)**

எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். எடுத்துக்கொண்ட முயற்சியினை இடையிலே கைவிடக்கூடாது என்றும், ஒருவரது இடைவிடா முயற்சியானது செல்வத்தைச் சேர்க்கும், முயலாமல் இருப்பது வறுமைக்குள் எம்மைச் சேர்த்துவிடும். ஒருவனுடைய சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கின்றாள், சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள் என்று முயற்சி தரும் உயர்வினை வள்ளுவர் விளங்கவைத்துள்ளார்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு.**
**(அதிகாரம் - ஊக்கமுடைமை குறள்-595)**

நீர்ப்பூக்களின் தண்டின் நீளமானது அவை நிற்கும் நீரின் அளவினதாகும். அதேபோல நாம் எவ்வளவு ஊக்கமுள்ளவர்களாக இருக்கின்றோமோ அவ்வளவிற்கு நம் வாழ்க்கையும் உயரும் என்பதை இக்குறள் வழி உணர முடிகிறது.

ஊக்கமும், முயற்சியும் ஒருவனது வெற்றிக்கு அடித்தளமாகின்றன. அத்துடன் எமக்குள் மிகுந்த தன்னம்பிக்கையை வளரச்செய்யும் உந்து சக்தியாக இவை விளங்குகின்றன. இவற்றால் தனிமனித, குடும்ப, சமூக, நாடு மற்றும் உலகு என்ற அனைத்திலும் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஊக்கமும், விடாமுயற்சியும் வாழ்வில் அவசியம் என்ற திருவள்ளுவரது திருகுறள்களின் பொருளுணர்ந்து வாழ்வினை வளப்படுத்துவோம்.

***வாழ்க தமிழ்.!***
***வாழ்க வள்ளுவம்.!!***


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1004



## சோமாஸ்கந்த ஈஸ்வரம்
## (நயினை முத்துக்குமாரசுவாமிகள் கோவில்)
## நயினாதீவு, யாழ்ப்பாணம்

*"ஆதியாய் அருமறையாய் ஆறங்கம் தானதுவாய்*
*சோதியாய் தோன்றினாய் நற்றுணையே அருட்திருவே*
*நீதியாய் நிலைத்திட்ட நின்மலனே நிறையொளியே*
*வீதிவருவாய் மலர்த்துங்க சங்கரனின் அடைக்கலமே"*

தமிழ்நாட்டிலே கடைக்கால சித்தர்களாக போகர், புலிப்பாணி, சட்டைமுனி, கொங்கணவர், கோரக்கர், மச்சமுனி, கமலமுனி, கருவூரார், கௌசிகர். சிவவாக்கியர், சுந்தரானந்தர், இடைக்காடர். பிரம்மமுனி போன்றோர் வாழ்ந்துள்ளனர். அவ்வாறே இலங்கையில் கடையிற்சுவாமிகள், பரமகுருசுவாமிகள், குழந்தைவேற்சுவாமிகள், அருளம்பலசுவாமிகள், யோகர்சுவாமிகள், நவநாதசித்தர், பெரியானைக்குட்டிசுவாமிகள், சித்தானைக்குட்டிசுவாமிகள், சடைவரதசுவாமிகள், ஆனந்தசடாட்சரகுரு, செல்லாச்சி அம்மையார், தாளையான்சுவாமிகள், மகாதேவசுவாமிகள், சடையம்மா, நாகநாதசித்தர், நயினாதீவு சுவாமிகள், சி.சண்முகவடிவேல் சுவாமிகள் போன்ற சித்தர்கள் வாழ்ந்தனர். சித்தர்களின் சமாதிக்கோயில்கள் அமைந்துள்ள ஊர்களும், கோயில்களும் அருட்பொலிவு மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.

1897 ஆம் ஆண்டு நயினாதீவிலே அவதரித்த நயினாதீவு சுவாமிகளுக்கு, பெற்றோர் முத்துக்குமார் எனப் பெயரிட்டனர். சுவாமிகள் சிறு வயதில் நயினாதீவில் தில்லையம்பல வித்தியாசாலையில் கல்வி பயின்றுள்ளார். விளையும்பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க, சிறுவயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றவராக விளங்கியுள்ளார். சிறுபிராயத்திலே யாழ்ப்பாணம் சென்று நயினாதீவிற்குத் திரும்பிக்கொண்டிருந்தபொழுது, பிரயாணச் செலவிற்காக வைத்திருந்த ஐந்து சதத்தைத் தொலைத்துவிட்டார். புங்குடுதீவு தோணித்துறையில் நின்றவாறு எவ்வாறு ஊர் திரும்புவது என, தான் வணங்கும் தெய்வமாகிய பிள்ளையாரை மனதில் நினைத்தார்.

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் தெய்வத்தின் அருட்கடாட்சம், சிறுவயதிலேயே நயினாதீவு சுவாமிகளுக்குக் கிடைத்தது. அப்பொழுது ஊரிலுள்ள பிள்ளையார்கோவில் குருக்கள் அவ்விடம்வந்து சுவாமிகளின் நிலையறிந்து, அவரையும் தன்னுடன் தோணியில் அழைத்துச் சென்றார். ஊர் திரும்பிய நயினாதீவு சுவாமிகள், பிள்ளையாரின் கருணையை எண்ணி மனமுருகினார். அது கவிதையாக வெளிப்பட்டது.

*"தச்சிச்சி பாடவும் தட்டாத்தி கூடத்தகவுடனே*
*இச்சித்து வேடிச்சிவ ந்தாள் இருந்த இடைச்சியாரோ*
*மச்சிக்கு நாணி மறைந்ததினால் மதிவாடவிடாது*
*இரட்சிக்க முன்னெதிர் வந்தான் கணேச முதல்வனுமே:"*

சிறுவயதிலேயே நற்பண்புகளைக் கொண்டுவிளங்கிய நயினாதீவுச் சுவாமிகளிடம், நன்றிமறவாமை ஊறிக்கிடந்தது. தானெழுதிய கவிதையை தனக்கு உதவி செய்த குருக்கள் வீட்டிலே கொடுத்து தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இவ்வாறான பல சம்பவங்கள் நயினாதீவுச் சுவாமியாரின் சிறு வயதிலே நடைபெற்றுள்ளது.

இறைவன் பல சோதனைகளைக் கொடுத்து அருளாளர்களை ஆட்கொள்வது வழக்கம். இவ்வாறான ஒரு சம்பவத்தின்மூலம் நயினாதீவுச் சுவாமிகளுடைய வாழ்க்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டது. சுவாமிகளுடைய சகோதரராகிய முருகேசு என்பவர், கொழும்பிலுள்ள பொரளைப் பிரதேசத்திலே சுருட்டுக்கடை வைத்திருந்தார். சுவாமியாரும் சிறுவயதிலேயே அக்கடையிலே வேலை செய்து வந்தார் அப்பொழுது 1915 ஆம் ஆண்டு இலங்கையின் இரு சமூகங்களான முஸ்லீம்களுக்கும், சிங்களவருக்குமிடையே இனக்கலவரம் இடம்பெற்றது.

இக்கலவரத்தில் ஒன்றாக வாழ்ந்தவர்கள் பகைவர்களாக மாறி, ஒருவரை-யொருவர் கொன்றொழித்தமை சுவாமியாரைப் பெரிதும் பாதித்தது. அவருடைய மனதிலே பல மாற்றங்கள் ஏற்பட்டது. யுத்தத்திலே இடம்பெற்ற சோகக் காட்சிகளைக் கண்டு மனம்மாறிய அசோகன் போல, சுவாமியும் இவ்வாறான துன்பங்களிலிருந்து விடுதலை பெற மார்க்கம் என்ன? என சிந்தித்தார். துன்பங்களிலிருந்து விடுதலைபெற, இறைவனை இறுகப் பற்றவேண்டும் என எண்ணங்கொண்டார்.

இவ்வாறான நிலையில் தெய்வசித்தம்போல, இந்தியாவிலிருந்த வந்திருந்த ஒரு பெரியவரைச் சந்திக்க நேர்ந்தது. அவரும் முத்துக்குமாரோடு சிலநாட்கள் தங்கியுள்ளார். இருவரும் கதிர்காமத்திற்குச் சென்றார்கள். இருவரும் வழியில் ஒரு மரத்தடியில் தங்கி ஆறுதல் எடுத்தனர். அப்பொழுது முத்துக்குமாருவிற்கு தீட்சையும், உபதேசமும் கொடுக்கப்பட்டது. ஆனந்தமிகுதியால் இறைவனின் பெருங்கருணையை எண்ணி கண்ணீர் மல்கினார். குருவும், சீடரும் கதிர்காமம் சென்று கந்தனை வணஙகிய பின், மீண்டும் கொழும்பை வந்தடைந்தனர். குருவுக்குத் தொண்டுசெய்து வாழ்வதையே விரும்புவதாகக் கூறிய முத்துக்குமார், அவரைத் தன்னுடன் தங்குமாறு வேண்டினார். பதிலேதும் கூறாதிருந்த குரு, ஒருநாள் வெளியே சென்றவர் மீண்டும் முத்துக்குமாரிடம் திரும்பி வரவில்லை. எங்குதேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில், முத்துக்குமாரசுவாமிகள் அலைந்து திரிந்தார்.

இவ்வாறான சூழ்நிலையில் இறையுணர்வில் மனம் அதிக ஈடுபாடு காட்டியமையால், கடையிலே கவனம் செலுத்தாது திரிந்தார். வியாபாரம் தொடர்பான விடயங்களில் ஆர்வங்காட்டாது அலைந்து திரிந்தார். இக்காரணத்தினால் கோபங்கொண்ட சகோதரர், முத்துக்குமார சுவாமிகளை வைவது வழக்கம். இவ்வாறாக நிகழ்ந்த ஒரு நிகழ்வின் பின்னர் முத்துக்குமார சுவாமிகள், யாருக்கும் கூறாது கடையை விட்டுச் சென்றுவிட்டார். அப்பொழுதும் தனது மனஉணர்வை ஒரு கவியாக எழுதிவைத்துவிட்டு குருவைத் தேடி அலைந்தார்.

*வளரும்...*




OM SHAKTI ASTROLOGER & PSYCHIC
PALM READING, FACE READING, HOROSCOPE
OVER 25 YEARS OF EXPERIENCE
PANDIT: GURUDEV
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS
REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA,
BUTTU, JINN & GIVES N100% PROTECTION



SPECIAL PRAYERS FOR FULL MOON & DARK MOON
Solves problems like Health, Love, Marriage, Job, Depression, Family, Husband-wife, Jealousy court etc
SPECIALIST IN BRINGING BACK LOVED ONES
REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION
No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE
100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

ஆந்திர பிரதேஷ் வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: GURUDEV சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!
கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

100% Guarantee
Private & Confedential
அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பிரகாஷ்

2681 EGLINTON AVE E, SCARBOROUGH, ON, M1K 2S2
BRIMLEY & EGLINTON, NEXT TO CIBC BANK
4377-888-977

# ஜீவன் முக்தி 586

*(சென்ற வார தொடர்ச்சி...)*

கிருஷ்ணருடையது ஞானத்தைத் தாண்டிய ரசம். இரண்டு பேரும் ஒன்று என்று உணர்ந்தாலும்கூட சீண்டிப் பார்ப்பதிலே ஒரு ஆனந்தம் விளையாடிப் பார்ப்பதிலே ஒரு ஆனந்தம்.

கிருஷ்ணனின் லீலையைப் புரிந்து கொள்ள விரும்பி பாகவதத்தைப் படித்தால் கண்கள் நிறைந்து உணர்வே மலர்ந்துவிடும். காரணமில்லாத விளையாட்டு எதை வர்ணிப்பது எதை விடுவது என்றே தெரியவில்லை. அந்தச் செயல்களை வர்ணிப்பதுகூட சாத்தியம் இல்லை. அந்த உணர்வைப் பற்றிச் சொன்னேன் அவ்வளவுதான்.

செயல்களை வர்ணிப்பதுகூட சில மனிதர்களுக்குப் புரியாமல் போகலாம்.

கிருஷ்ணன் செய்த செயல்களைப் பார்த்தோம் என்றால் சில நேரம் பகுத்தறிவுக்குப் புரியாமல்கூட போகலாம். ஆனால் அந்த உணர்வை உள்வாங்கிக்கொள்ளுங்கள். அப்போது அந்தச் செயலுடைய மகத்துவம் புரியும்.

உணர்வு ரீதியாக ராசலீலையை உள்வாங்கினாலே அதற்கான தீக்ஷை உங்களின் உணர்வுக்குள் நிகழ்ந்துவிடும்.

## உன்னத உறவு

- **உங்களின் புதுப்புது பரிமாணங்களைத் திறப்பதே உறவு**
  Opening your new dimensions is what is "relationship"
- **உணர்வையே கரைக்கும் உறவு, குரு-சிஷ்ய உறவு**
  Guru-disciple relationship,The relationshipThat meltsThe very consciousness
- **குரு சிஷ்ய உறவு மலர்ந்தால் வாழ்வே மலரும்**
  WhenThe Guru-disciple relationship flowers, life itself flowers
- **உங்கள் வாழ்க்கையே மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான்**
  Your life itself is just a doll"s play
- **அன்பைக் கண்டால் பயமா? ஆனந்த அலைக்கு அணை கட்டாதீர்!**
  Afraid of love? Don"t raise a wall for Bliss waves
- **அன்பின் உச்சம் கண்டு பயப்படக்கூடாது**
- **உணர்வை மலர்த்துவது குரு சக்தியே**
  It isThe Guru"s energyThat makesThe consciousness to flower
- **மகோன்னத தீக்ஷை**
  The ultimate initiation

இந்த ஞானத்தைத் தாண்டிய ரசத்தை நேரடியாக அடைந்தால் அதைத்தான் பக்தி என்கிறோம். முக்தியடைந்து அந்த ரசத்தை அடையலாம் நேரடியாகவும் அடையலாம்.

தியானம் - ஞானம் - தவம் என்று படிப்படியாக ஏறி முக்தியைப் பெற்று பக்தியைப் பெறுபவர்கள் பக்தர்கள். நேரடியாகப் பக்தியில் கரைபவர்கள் கோபிகைகள்.

## உன்னத உறவு

எல்லா உறவுகளுமே நம்மை மீண்டும் மீண்டும் பந்தத்திற்குள்ளே ஆழ்த்தும் பலம் வாய்ந்தது.

ஆனால் இந்தக் குரு-சிஷ்ப உறவு மட்டும் நம்மை மீண்டும் மீண்டும் சுதந்திரத்திற்குள் ஆனந்தத்திற்குள் அழைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது.

உறவு என்றால் என்னவென்று ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் மீது அவர்களுடைய சாயலைப் பதிப்பதனால் உங்களுக்கே உங்களைப் பற்றித் தெரி-யாத பலபரி மாணங்களை உங்களுக்குப் புரிய வைக்கிற நபருக்குத்தான் "உறவு" என்று பெயர். உறவிற்கு அவ்வளவு பெரிய பலம் உண்டு.

## உங்களின் புதுப்புது பரிமாணங்களைத் திறப்பதே உறவு

எல்லோருமே திரும்பத் திரும்ப செய்கிற ஒரு வேலை "எங்கே ஏமாந்து விடுவேனோ?" "எங்கே இவரிடம் ஏமாந்து போய்விடுவோமா?" என்று நம்மை நாமே பாதுகாத்துக் கொள்கிறோம். இது நாம் எல்லோருமே செய்கிற ஒரு வேலைதான்.

ஆனால் திடீரென்று பார்த்தால் யாரோ ஒரு ஆணுக்காக யாரோ ஒரு பெண்ணுக்காக உங்களுடைய பொக்கிஷங்களையும் உங்களுடைய வாழ்க்கை முழுவதும் சேர்த்து வைத்த பணம் மட்டும் இல்லை உங்கள் உணர்வையேகூட திறக்கத் தயங்க மாட்டீர்கள் அதுதான் மிகப்பெரிய விஷயம்.

நன்கு புரிந்துகொள்ளுங்கள் பொக்கிஷ த்தைக்கூட சில சமயம் திறந்து விடுவோம்.

நீங்கள் எப்படி உங்களை உலகத்திற்குக் காட்டுகிறீர்களோ அது போலவே காட்டிக்கொண்டு இல்லாமல் இரகசியம் ஒளிவு மறைவு என்பது இல்லாமல் அதாவது திருத்தம் செய்யாமல் உங்களுடைய குணத்தை உங்கள் நிஜமான பரிமாணத்தைக் காட்டுகிற துணிவு! இன்னொரு ஜீவனிடம் தம்மை முழுமையாய்த் திறப்பது அதுதான் காதலுடைய அடையாளச் சின்னம்.

மற்றவர்களுக்கு எல்லாம் காட்டாத உங்கள் குணத்தையே ஒருவரிடம் திறந்து காட்டுகிறீர்கள். அதாவது இந்த Personality-ஐத் திறந்து காட்டுவதுதான் மிகப் பெரிய செயல்.

உங்களுடைய பர்ச னாலிட்டியை... குணத்தைத் திறந்து காட்டுவதென்றால் யாரிடம் திறந்து காட்டுவீர்கள்? யார் உங்களை அப்படியே ஏற்றுக்கொள்வார்களோ பரிமாணத்தை ஒரு காதலன் திறந்து வைத்து விடுவான.

இவர்களையெல்லாம் தாண்டி உங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆழமான பரிமாணமான கடவுளை திறந்து வைப்பவரே "குரு-நாதர்" என்றழைக்கப்படுகிறார்.

## உணர்வையே கரைக்கும் உறவு குருசிஷ்ய உறவு

இத உறவில் மட்டும்தான் இதற்கு மேல் அடைவதற்கு ஒன்றுமில்லை என்ற கரைந்து விடுதல் நிகழும். அதுதான் அந்தக் குரு-சிஷ்ய உறவின் உச்சம். குரு-சிஷ்ய உறவின் தன்மை.

உங்கள் உணர்வு கரைந்து போய் விடும்பொழுது காணாமல் போய் விடும்பொழுது நடப்பதுதான் ஞானத்தைத் தாண்டிய ரசம்.

அதனால் குரு - சிஷ்ய உறவிற்கு மீறி குரு - சிஷ்ய உறவைத் தாண்டி உங்களுக்குள் நடப்பதற்கு எதுவுமில்லை. ஏனென்றால் அதுதான் வாழ்க்கையில் மிகச் சிறந்த நிகழ்வு.

பல உறவுகள் சேர்ந்துதான் நீங்கள் என்கிற பட்டைதீட்டப்படாத வைரத்தை பட்டை தீட்டுகிறது. நீங்கள் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம் மாதிரி வைரம் போன்று பட்டை தீட்டப்படுவது என்பது பல்வேறு உறவுகள் உங்கள் மேல் உராயும்பொழுது நிகழ்வது. உராய்ந்து உராய்ந்து உன்னத நிலைக்கு எடுத்துச்செல்வதனால்தான் அதற்கு உறவு என்று பெயரோ என்னவோ!

உராய்ந்து உராய்ந்து...
உங்களை
உன்னத நிலைக்கு
எடுத்துச் செல்வதனாலேதான்
அதற்குப் பெயர் உறவு.

அது உங்களுடைய ஒவ்வொரு பரிமாணத்தையும் மலரச் செய்யும். உதாரணமாக தாய்மை என்கிற பரிமாணத்தை மலரச் செய்வது உங்களுடைய மகன் அல்லது மகள் என்கிற உறவு.

தனியாக இளம் பெண்ணாகச் செல்லும்போது நாயைப் பார்த்து பயப்படும் ஒரு இளம் பெண் அவ-ளுடைய குழந்தையோடு செல்லும் பொழுது சிங்கம் எதிர்பட்டால் குழந்தையைக் காப்பதற்காக அதை எதிர்த்து அடிக்கத் துவங்குவாள். முறத்தாலே புலியையும் விரட்டுவாள் என்பார்களே அதுபோன்று அதே இளம் பெண் துடிப்போடு இயங்குவாள்.

எங்கிருந்து வந்தது அந்தத் தைரியம்? நேற்றுவரை தனியாகப் போக பயந்த இளம் பெண்ணாக இருந்தவள் அப்போது நாய்கூட அவளை எளிதில் மிரட்டியது. ஆனால் அவளுடைய குழந்தையைக் தாக்க புலியே வந்தாலும் அதைக்கூட விரட்டும் சக்தியோடு எதிர்கொள்வாள்.

உறவுகளைப் பற்றிய ஒரு ஆழமான சத்தியத்தை இங்கே உணர்த்துகிறோம்.

காதலன்-காதலி கணவன்-மனைவி என்கிற ஒவ்வொரு உணர்விற்கும் ஒவ்வொரு உறவிற்குள்ளும் நுழைவதற்கு முன்பும் அகங்காரமில்லாமல். தளர்வாக இருக்கிற மன உணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு.

உங்களுக்குள்ளே செய்ய வேண்டிய நிரந்தரமான மாற்றத்தைச் செய்து வைக்க வேண்டும். நிரந்தரமான மாற்றத்தைச் செய்து விட்டுப் "போவதற்காகத்தான் அந்த உறவுகளையெல்லாம் நம்முடைய வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கிறோம். இல்லையென்றால் அந்த உறவுகள் எல்லாம் வீண்.

கணவனுக்கும் மனைவிக்கும் நடுவில் இருக்கும் உறவு ஒருவரை ஒருவர் மலர வைத்து உன்னதமான நிலையை அடைய வேண்டும். அகங்காரமில்லாத நிலையை அவர்களுக்குள் காட்ட முடியவில்லை வெறுமனே உடலால் மட்டும்தான் சம்பந்தம் என்றால் அதற்கு "உறவு" என்கிற அழகான வார்த்தையைத் தயவு செய்து உபயோகப்படுத்த வேண்டாம்.

அது உறவு அல்ல.

உண்மையான உறவு என்னவென்றால் உணர்விலே ஏற்படுத்துகிற ஆழமான மலர்ச்சி.

கனடிய செய்திகள் Canadian News

# இவ்வருடத்தின் கனடா தினத்தை பாதுகாப்புடன் கொண்டாடுங்கள்

## பிரம்ரன் மாநகரசபை தனது குடியிருப்பாளர்களை வேண்டிக்கொள்கின்றது

இவ்வருடத்தின் கனடா தினத்தை பாதுகாப்புடன் கொண்டாடுங்கள் என கனடாவின் பிரம்ரன் மாநகரசபை தனது குடியிருப்பாளர்களை வேண்டிக்கொள்கின்றது என இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம். தமிழ் மற்றும் பிற மொழிகளிலும் வெளியாகியுள்ள இந்த அறிக்கையில் பாதுகாப்பு தொடர்பாக கவனத்துடன் செயல்படும் படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## Celebrate safely this Canada Day!

BRAMPTON, ON (June 24, 2022)

The City of Brampton reminds residents of the importance of being safe while using fireworks on Canada Day on July 1.

Canada Day is one of four days a year when short-range fireworks are allowed on private property in Brampton without the need for a permit. Under the by-law, fireworks are also permitted on Victoria Day, Diwali and New Year's Eve.

Short-range fireworks are those that tend to travel less than three metres (10 feet) when set off (e.g. fountains, wheels, ground spinners, sparklers). That's roughly the height of a Brampton Transit bus or a basketball hoop.

All other rocket-type fireworks are banned in Brampton. The City reminds residents that fireworks are not permitted on the street, sidewalks, within City parks or on municipal or school properties, and that they are only permitted to be set off until 11 pm. When using short-range fireworks on private property, residents must follow these safety precautions:

- Have a container of water or a hose line filled with water available to extinguish fire-works.
- Never light a firework or hold a lit firework in your hand, other than a sparkler.
- Never throw or point fireworks at other people.
- After using sparklers, place them in a container of water to fully cool before disposal.
- Allow all fireworks to fully cool before disposal.

For more information on firework safety and bylaws, visit/: www.brampton.ca/fireworks.

BRAMPTON Service and Information Update

**இந்த வருட கனடா தினத்தை பாதுகாப்புடன் கொண்டாடுங்கள்!**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 24, 2021) – ஜூலை 1, கனடா தினம் அன்று பட்டாசுகளை உபயோகிக்கும்போது பாதுகாப்பாக இருப்பதின் முக்கியத்துவத்தை நகரவாசிகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது

ப்ராம்ப்ட்டனில் உள்ள தனியார் கட்டிடங்களில் உரிமம் ஏதும் பெறாமலேயே குறுகிய தூரமே செல்லும் பட்டாசுகள் அனுமதிக்கப்படுகின்ற வருடத்தின் நான்கு முக்கியமான நாட்களில் கனடா தினமும் ஒன்றாகும். உப சட்டத்தின் கீழாக, விக்டோரியா தினம், தீபாவளி மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களிலும் பட்டாசுகள் கொளுத்த அனுமதிக்கப்படுகின்றன.


குறுகிய தூர பட்டாசு என்பது பற்றவைத்தவுடன் மூன்று மீட்டர் (10 அடி) க்கும் குறைவாக பயணித்து வெடிக்கின்ற பட்டாசுகள் (எ.கா. புஸ்வாணங்கள், சங்கு சக்கரங்கள், தரைச்சக்கரங்கள், மத்தாப்புக்கள் ஆகியவை) ஆகும். இது ஏறக்குறைய ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்தின் உயரம் அல்லது கூடைப்பந்து வளையத்தின் உயரம் ஆகும்.

தனியார் கட்டிடங்களில் குறுகிய தூரம் செல்லும் பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்புவாசிகள் பின்வரும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்:

மற்ற அனைத்து வகை ராக்கெட் பட்டாசுகளும் ப்ராம்ப்ட்டனில் தடை செய்யப்பட்டுள்ளன. தெருக்கள், நடைபாதைகள், நகரின் பூங்காக்களுக்குள் அல்லது நகராட்சி அல்லது பள்ளி கட்டிடங்களில் பட்டாசுகள் வெடிக்க அனுமதிக்கப்படாது என்றும் இரவு 11 மணி வரை மட்டுமே பற்றவைக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் நகர குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டப்படுகிறது.

தனியார் கட்டிடங்களில் குறுகிய தூரம் செல்லும் பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்புவாசிகள் பின்வரும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்:

- பட்டாசுகளை அணைப்பதற்காக ஒரு பாத்திரம் நிறைய தண்ணீர் அல்லது தண்ணீர் வரும் குழாயை அருகில் வைத்திருக்க வேண்டும்.
- மத்தாப்பு தவிர, எந்த பட்டாசுகளையும் ஒருபோதும் கையில் பிடித்தபடியோ பற்ற வைக்கவோ வேண்டாம்.
- பட்டாசுகளை ஒருபோதும் மற்றவர்களை நோக்கி காட்டவோ வீசவோ வேண்டாம்.
- மத்தாப்புக்களை உபயோகித்த பின்னர், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு முன்பாக குளிர்ந்த நீர் உள்ள பாத்திரத்தில் இடவும்.
- அனைத்து பட்டாசுகளையும் அப்புறப்படுத்தும் முன்னால் முழுக்கவும் குளிர வைக்கவும்.



15

# எண்ணித் துணி

2006 ஐப்பசி 10 ஆம் திகதி ஸ்காபரோ வைத்தியசாலையில் இருந்து சன்னிபுருக் (Sunnybrook) வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டேன்.



Sunnybrook HEALTH SCIENCES CENTRE


அங்கு முன்பொரு தடவை குறிப்பிட்டது போன்று பல்வேறு சடங்குகளுக்குப் பிறகு காலில் குருதிக் குழாயில் துளை போட்டு அதன்வழி இதயத்தை அடைந்து பரிசோதனை (Angiogram) செய்யப்பட்டது.

இதயக் குழாய் ஒன்றில் 80வீத அடைப்பு இருந்ததாக தெரிய வந்தது. அத்தோடு இதயத்துள் சென்று ஒடுங்கிய குழாயை விரியச் செய்யும் (Angioplasty) சிகிச்சையும் செய்யப்பட்டது.

ஆன்ஜியோக்ராம் (Angiogram) பரிசோதனை இப்போது இரண்டாவது தடவையும், அஞ்சியோபிளாஸ்ட்டி (Angioplasty) சிகிச்சை முதல் முறையாகவும் செய்யப்பட்டது.

முன்பொரு தடவை பரிசோதனை (Angiogram) செய்த போது இருந்ததைவிட இம்முறை இதயக் குழாயின் அடைப்பு (Blockage) அதிகமாக காணப்பட்டமையாலேயே இந்த வேளையில் எனக்கு அஞ்சியோபிளாஸ்ட்டி (Angioplasty) குழாய் அடைப்பெடுத்து ஸ்டென்ட் (Stent) வைக்கப்பட்டது.





தொடர்ந்து வந்த நாட்கள் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கான நாட்கள். அடுத்தநாள் வந்த மருத்துவ நிபுணர்கள் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்கள். அவர்கள் ஏன் குண்டு போடப் போகிறார்கள்... ஆனால் அப்பிடித்தான் எனக்கிருந்தது. மருத்துவ நிபுணர்கள் எனக்கு டீவிபிரில்லேற்றர் (Defibrillator) எனும் கருவியை நெஞ்சில் பொருத்த வேண்டும் என்று சொன்னார்கள்.




பேஸ்மேக்கர் (Pacemaker) வைப்பது பற்றி - விபரங்கள் தெரியா விட்டாலும் - கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் இந்தப் பொருளின் பெயரே வாய்க்குள் இலகுவில் நுழையாததாக இருந்தது. இது நெஞ்சுக்குள் நுழையுமா? ம்ம்... எனக்கு பயமாகவே இருந்தது.

அதுபற்றிய மேலதிக விபரங்களைக் கேட்டறிந்தபோது அந்தக்கருவியில் இருந்து இரண்டு வயர்கள் எனது இதயத்தின் இரண்டு அறைகளிலும் தொடர்புபடுத்தப்படும் என்றும் அது தேவையானபோது மின்சாரத்தை வழங்கி தவறாக துடிக்கும் இதயத்துடிப்பை சரி செய்யும் என்றும் ஏதோ ஒரு வீட்டின் இரண்டு அறைகளுக்கு மின்னிணைப்பை வழங்குவது போல மிக சர்வ சாதாரணமாக சொன்னார்கள்.

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு*

இந்தத் திருக்குறள் அடிக்கடி என் மனதில் வந்து போனது. இதனை எண்ண எண்ண எண்ணும் எண்ணிக்கை எண்ணிக்கையற்றுப் பெருகியதைத் தவிர என்னால் துணிய முடியவில்லை. தூங்கினாலும் தூக்கம் கெட்டிருந்தாலும் இதே நினைப்புதான். இந்த நினைப்பிலேயே முற்றிலும் தூக்கம் வராமல் போனது. தூக்க மாத்திரை தந்தார்கள். அது தலைவலியைத் தந்ததைத் தவிர தூக்கத்தைக் கொண்டு வரவே இல்லை.




ச்சய்ய்... நெஞ்சுக்குள் ஒரு இயந்திரத்தைப் பொருத்துவதா? எனக்கு ஒருதடவை வந்த இந்த இதய நோய் மீண்டும் வரவேண்டும் என்பதும் இல்லைத்தானே. இப்பதானே அடைப்பை துப்புரவாக்கி ஸ்ரெண்ட்ரும் (Stent) வைத்து ஒடுங்கியிருந்த இரத்தக் குழாயை அகட்டியிருக்கிறார்கள். அப்படி இருக்க தேவையில்லாமல் ஒரு மெசினை பூட்டிறது... ம்ம் ம்ம்..

காலம் முழுக்க காவிக் கொண்டு திரிய வேணும். அதெல்லாத்தையும் விட இரண்டு வயர்களை கொண்டு போய் இதய அறைகளுக்குள்ளை சொருகி விடுறது எண்டால் என்ன இது ஒரு லேசுப்பட்ட காரியமா... என் இதயமே உன்னோடு விளையாட்டா... எவ்வளவு (Risk) அபாயம்..ம்... ஆள் முடிஞ்சாலும் முடிஞ்சு போகலாம்.



என் இதயமே... இப்பிடித்தான் என் புத்தி வேலை செய்தது.

எந்தக் கொம்பன் சொன்னாலும் அப்பிடியே ஏற்றுகொள்ளுற பழக்கம் எனக்கு இல்லை. அதற்கு மறுத்தான் போட்டு எனக்குள்ளை ஆராய்ந்து ஓம்பட்டாலே அல்லாமல் எதையும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளுற புத்தி எனக்கு ஒருநாளும் கிடையாது... அந்த நிலைமைதான் இப்போதும்.

மகள் அதை பொருத்துவதுதான் நல்லது, எல்லாம் மிகுந்த பாதுகாப்போடு செய்வினம். ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை என்று அடிக்கொருதரம் தொலை பேசியில் சொல்லிக் கொண்டிருந்தா.

அவ மருத்துவம் படிக்கிறவ. எப்பிடியும் கொஞ்சம் கேக்கத்தான் வேணும். என்னுடைய வழமையான இதய மருத்துவர் (Cardiologist) டாக்டர் ரங்கநாதன். இந்தியத் தமிழர். அவர் வேலை நேரம் போக கோயில்களில் பஜனைப் பாட்டுகளும் தேவார திருவாசகங்களும் பாடிறவர். அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்த போது “செய்யிறதுதான் நல்லது. கடவுளிட்டை பாரத்தைப் போட்டுவிட்டு செய்யுங்கோ” என்று சொன்னார். அங்கிருந்த மருத்துவ நிபுணர்கள் நான் தீர்மானம் எடுப்பதற்கு போதிய அவகாசம் - நாட்கணக்கில் - தந்தனர்.

இதற்கிடையில் மகள் அவுஸ்திரேலியாவில் இருக்கும் இதயச் சிகிச்சை நிபுணர் டாக்டர். கங்காகரன் (கண்ணன்) உடன் கதைத்த பின்னர் நானும் கதைப்பதற்கு ஒழுங்கு செய்தார்.

அவர் எங்கள் குடும்ப நண்பரும் நான் பனையபிவிருத்திச்சபையில் (Palmyrah Development Board) கடமையாற்றிய பொழுது தலைவராய் (Chairman) இருந்த க. நடராஜா அவர்களின் புதல்வரும் ஆவார். டாக்டர் கங்காகரன் (கண்ணன்) என்னை தொலைபேசியில் அழைத்து மிக நீண்ட நேரம் உரையாடினார்.

இதை விட எனது குடும்பநல மருத்துவர் ரவிமூர்த்தி அவர்களும், அமெரிக்காவில் மகள் மருத்துவத்துறையில் படிக்கும் வேளையில் நண்பராகிய குடும்பநல மருத்துவர் அம்பலவாணர் (அம்பி) அவர்களும் இதனைப் பொருத்துவதே பொருத்தமானது என்று உறுதிபடச் சொன்னார்கள்.

என் மனைவி, மகன் கீர்த்தனன் நெருங்கிய உறவினர்கள் எல்லோருமே என் நெஞ்சுக்குள் அதை வைப்பதற்கே வாக்களித்தனர்...

இவையெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து என் புத்தியில் விவாதம் செய்து நான் எண்ணித் துணிந்தேன். இனியென்ன... துணிந்தபின் எண்ணுவது இழுக்குத் தானே.

‘துணிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே சோகம் பொல்லாதே...’

தேவதாஸ் படத்தில் கண்டசாலா பாடிய இந்தப் பழைய பாட்டு ஞாபகத்தில் வந்தாலும் அதில் வரும் சில வரிகளை என் புத்தி முற்றாகவே மறுதலித்தது.

*பாயும் ஆற்றில் நீ வீழ்ந்த பின்னால் நீந்துவதால் பயன் ஏது*
*பாயும் ஆற்றில் நீ வீழ்ந்த பின்னால் நீந்துவதால் பயன் ஏது?*

என்ன மடமை... தண்ணீரில் தவறி வீழ்ந்தவன்...

நீந்தும் முயற்சியைக் கைவிட்டால் வாழ்க்கை ஏது?

அடுத்த வார்த்தை...

*சாவது நிசமே நீ ஏன் வீணாய் சஞ்சலப் பேய் வசமானாய்?*
*சாவது நிசமே நீ ஏன் வீணாய் சஞ்சலப் பேய்வசமானாய்?*

ஒருமுறை பாடாமல் இரண்டு முறை... ம்ம்.

*“காலா நீ வாடா. உன்னைக் காலால் உதைப்பேன் போடா”*

என்று சொன்ன பாரதியின் கட்சி நான். இப்பிடி சொன்ன பாரதி பாவம் கெதியாய்ப் போய்ச் சேர்ந்திட்டார். முதன் முதல் கொழும்பில் பிரச்சினை வந்தபோது எனக்கும் பாரதியைப் போல 39 வயதுதான். நல்லவேளை தப்பிவிட்டேன். நான் லேசாய்ப் போய்ச் சேரமாட்டேன்.

நெஞ்சுக்குள் அதனை வைப்பதற்குரிய நாள், நட்சத்திரம், சுபவேளை குறிப்பிடப்பட்டது. ஒரு மணமகனைத் தயாராக்குவது போல மீண்டும் முன்னேற்பாடான சடங்குகள் இனிதே நடந்தேறின. மந்திரங்களும் (Instructions) முன்கூட்டியே தெளிவாக சொல்லப்பட்டன. இரண்டு சக்கர நாற்காலியில் (Wheelchair) - சக்கரம் இருக்கும்போது நாற்காலி என்று சொல்லுவதில் பிழை இருக்கிறது - ம்... அதுவா இப்போது முக்கியம்?

துணைவியார் கையசைத்து - ஆசீர்வதித்து விடை தந்தார்.

என்னை கௌவரவமாக சத்திர சிகிச்சை நிலையத்துக்கு (Operation Theatre) உருட்டிச் சென்றார்கள்.

சத்திரசிகிச்சை என்ற சொல்லே கொஞ்சம் பயமூட்டுவதுதானே?...



# இவ்வார ராசிபலன்

**30-07-2022 வெள்ளி தொடக்கம் 07-07-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** விசேஷமான பலன் கிடைக்கும் வாரம். நாடிய பொருள் கிடைக்கும். முன் கோபத்தை தவிர்க்க வேண்டும். சுபக்காரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டாகும். உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். கல்விச் சலுகைகள் கிடைக்கும். காதலும், நட்பும் மலரும் காலம். வெளியூர் பயணம் லாபம் தரும். தந்தை உடல் நிலையில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். அணிமணிகள் சேரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. பொருளாதார வளம் மேம்படும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். விருந்தினர் வருகை உண்டு. விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். வரவுகள் மிகுதியாகும். விவேகமான செயல்பாடுகள் அவசியம். சொந்த வீடு வாங்க முயற்சி செய்யலாம். திருமண முயற்சி வெற்றியை தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**ரிஷபம்:** தொழில் முன்னேற்றம் கிடைக்கும் வாரம். இதமான நிகழ்வுகள் இஷ்டம் போல் நடந்தேறும் காலம். நல்ல மனிதர்களின் நட்பு பெருகும். நலிவுற்ற தொழில் பொலிவு பெறும். புதிய ஆடைகள் சேரும். அலுவலகப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். விரக்திகள் குறைந்து திருப்தி பெருகும். வாகனச் செலவுகள் ஏற்படும். ஆடம்பர சுகங்கள் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். உணவுப் பிரியம் அதிகரிக்கும். மாலை நேரத்தில் மங்களச்செய்தி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் தொல்லைத் தரும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். தொழிலில் முன்னேற்றம் தரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவிகள் கிட்டும். வயிற்று உபாதை தோன்றி மறையும். கடல் போல் லாபம் சேரும் காலம். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மனக்கசப்பு நீங்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். சகோதரியினால் நன்மை உண்டு. குடும்ப மனநிறைவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. முத்தான வாய்ப்புக்கள் பெருகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். கற்ற வித்தையால் கௌரவம் சேரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. முன்னேற்றம் காணும் முக்கியமான நாளாக அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீநித்ய கல்யாணப் பெருமாள்,
அதிர்ஷ்ட எண்: 6,4,3,9, அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**மிதுனம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவுவிடுதி லாபம் தரும். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். துன்பங்கள் விலகும். கலைந்த குடும்பங்கள் ஒன்று சேரும். கடன்சுமைகளில் இருந்து விடுபடுவீர். அரசியலில் புகழ் கூடும். வீண்பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லைகள் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்படும். பொருளாதார உயர்வு ஏற்படும். இனிமையான எண்ணங்கள் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காணக்கூடிய அற்புதமான காலம். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்கசப்பு ஏற்படும். காதலில் கவனம் தேவை. பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். அலைச்சல் குறையும். பழைய பகை மாறும். வாய்ப்புக்கள் தேடி வரும். வேலைபளு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். சோதனைகள் சாதனையாக மாறும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிட்டும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். வயிறு சம்பந்தமான நோய் விலகும். கால்நடைகளால் பலன் உண்டு. வழக்கு வெற்றித் தரும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். சுபகாரிய செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,H




**கடகம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். விபரீத எண்ணங்கள் விலகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். சச்சரவுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. உறவினர்களின் வருகை உண்டு. வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்புகள் அகலும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுபகாரியச் செய்தி வரும். வேலைதிறன் கூடும். தொழில் மாற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். மனம் மகிழும் நாளாக அமையும். உள்ளம் பூரிப்படையும். மனைவியால் அமைதி கெடும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள். சொத்து பிரச்சனை தீர்வுக்கு வரும். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். வழக்கு வெற்றியைத் தரும். இஷ்டம் போல் வாழ்க்கை அமையும். தனவரவில் தாமதம் ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. வேண்டாத நட்பு விலகும். குடும்ப சச்சரவு ஏற்படும். வருமான வரி தொல்லை ஏற்படும். புத்திரர் வழியில் தொல்லையுண்டு. கடன் வாங்க நேரிடும். ஆடம்பர பொருள் சேரும். வாழ்வில் மேன்மை உண்டாகும். வீண் பேச்சைத் தவிர்க்கவும். சொந்த முயற்சியால் முன்னேற்றம் காணக்கூடிய காலம். இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். சந்தோஷம் அதிகமாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. காரியம் நிறைவேறும். வீண் பழி அகலும். மங்கள செய்தியால் மனம் மகிழும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** அசையா சொத்துக்கள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். பெண்களுக்கு மங்கள செய்தி வரும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா பயங்கள் நீங்கும். மனோ தைரியம் கூடும். திருமகள் கிருபைகள் உண்டு. உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்துக் கொள்வீர்கள். புதுதொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பொன்னான நேரங்களாக அமையும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். மங்களச்செய்தி வரும். வீண் வம்பு விலகும். சேய் நலம் கூடும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உடல்நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். ஏற்றமான தருணம் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பதவி வாய்ப்பு வரும். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. தொல்லைத் தந்தவர் விலகிடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**கன்னி:** அன்பும், அரவணைப்பும் கிடைக்கும் வாரம். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லைத் தந்தவர் விலகி விடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். வங்கி சேமிப்பு உயரும். வயிற்று உபாதை வந்து சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களின் ஆலோசனைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். மனைவியால் மதிப்பு உயரும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். புத்தி சாதுர்யம் கூடும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பணிவும், துணிவும் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். காரிய வெற்றி உண்டு. இல்லத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். அடுத்தவர் தலையீடு குறைக்கவும். செலவுகள் அதிகமாகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். நண்பர்களால் நன்மையுண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடன் சுமை குறையும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தனவரவு திருப்தி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**துலாம்:** பக்குவமான பணவரவு சேரும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கௌரவ வாய்ப்பும் அதிகரிக்கும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். திடீர் செலவுகள் ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். உடல்வலி தோன்றி மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். எதிலும் கவனம் தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன்தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சிரமங்கள் குறையும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். புத்திரர்களால் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பளீர்ப் பேச்சுக்களால் திடீர் முன்னேற்றம் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வேலைபளு கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வர், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**விருச்சிகம்:** நண்பர்களால் பணவரவு கிடைக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு மறையும். முன் கோபம் தவிர்க்கவம். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வார்கள். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். பிரச்சனைகள் முற்றிலும் அகலும். சொத்துச் சேர்க்கையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். வாயில் தேடி வரன் வரும். நட்பு வட்டம் விரி-வடையும். உத்தியோகத்தில் பதவி உயர்வு வரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வராத கடன் வந்து சேரும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். இயற்கைக் காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. மாற்று இன உதவி கிட்டும். ஆதி முதல் அந்தம் வரை ஆதாயம் கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும். பலவிதத்தில் ஷேமம் கிடைக்கும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். வாகன மாற்றம் உண்டு. செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திவ்யமான பலன் கிடைக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,B

(தொடர்ச்சி 38ம் பக்கம்)

# கனடாவில் A.G.A Beauty Academy நிறுவனத்தின் அதிபர் திருமதி சசிகலா நரேந்திரா தலைமையில் நடத்தப்பெற்ற Miss Tamil Universe-2022 உலகத் தமிழ்ச் செல்வி – 2022 போட்டி சிறப்பாக நடைபெற்றது





கடந்த 26-06-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற **Miss Tamil Universe - 2022** போட்டி நிகழ்வை உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் பார்த்து மகிழ்ந்து பாராட்டினர்.

கனடாவில் **A.G.A Beauty Academy** நிறுவனத்தின் அதிபர் திருமதி சசிகலா நரேந்திரா தலைமையில் நடத்தப்பெற்ற இந்த **Miss Tamil Universe-2022** என்னும் உலகத் தமிழ்ச் செல்வி-2022 போட்டி சிறப்பாக நடைபெற்றது. இவ்வருடத்தின் விழா சாதனை படைத்துள்ளது என்றே பேசப்படுகின்றது.




இலங்கையிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட இளம் போட்டியாளர்கள் பங்குபற்றினர். அத்துடன் கனடா ஐரோப்பா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தும் தலா 3 பேர் பங்குபற்றினர். கனடா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண் நடுவர்கள் இந்த போட்டிக்கான பணியாற்றினர். அவர்களின் ஆற்றல் மிகு பங்களிப்பால் இந்த போட்டி முடிவுகள் சபையோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இடம் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல அரசியல் தலைவர்கள் மாகாண மற்றும் மத்திய அரசின் அமைச்சர்கள் கலந்து கொண்ட இந்த போட்டி நிகழ்ச்சி சபையோரை எவ்வித சலிப்பும் இன்றி பார்த்து மகிழச் செய்தது என்றால் அது மிகையாகாது.

திரு ராகவன் மற்றும் செல்வி அபிசேகா ஆகியோர் ஆரம்பத்திலிருந்து இறுதி வரையிலும் நிகழ்ச்சி சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள். இந்தப் போட்டியின் முக்கிய பங்காளியாக விளங்கியவர் திரு நரேந்திரா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
மிகுந்த பொருட்செலவில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த போட்டி விழாவிற்கு முதன்மை அனுசரணையாளராக திரு சங்கர் நல்லதம்பியும் ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகை நிறுவனத்தினரும் பிரபல வீடு விற்பனை முகவர் கெமர்சன் பத்மநாதனும் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.

உலகளவில் நடத்தப்பெற்ற இந்த போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று **Miss Tamil Universe-2022** என்ற கிரீடம் சூட்டப்பெற்றவர் கனடாவைச் சேர்ந்த செல்வி எர்மின் சவாரி ஆவார். அவருக்கு கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் தனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

இரண்டாவது இடத்தையும் மூன்றாவது இடத்தையும் கனடாவைச் சேர்ந்த சேர்ந்தவர்களான முறையே தாரண்யா மகேந்திரன் மற்றும் பானுஜா விக்கினேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சபையில் கூடியிருந்த 500க்கும் அதிகமான பார்வையாளர்கள் கரகோசம் செய்து வெற்றியாளர்களைப் பாராட்டினார்கள்.



## இவ்வார ராசிபலன்

(36ம் பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மகிழ்ச்சிகள் அதிகரிக்கும் வாரம். விவசாயிகள் பலன் பெறுவார்கள். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் உண்டாகும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும். பதினாறு வகையான செல்வங்கள் சேரும். காதல் கைக்கூடும். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. மாற்று இனத்தவர் வாழ்த்துக் கிட்டும். கலைத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனைவியால் மகிழ்ச்சி ததும்பும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திருமண தகவல் இல்லம் தேடி வரும். இனம் புரியாத சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தொழில் வகையில் மேன்மையுண்டு. தொகை தொகையாய் சேரும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். உணவு பிரியம் அதிகரிக்கும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**மகரம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரும் வாரம். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். தனவரவுகள் அதிகரிக்கும். நாடிய பொருளும், தேடிய வாய்ப்பும் கிடைக்கும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். பொருளாதார வளம் மேம்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பணி செய்யும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். தொழில் லாபம் பெருகும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். அமைதியான மனநிலை காணப்படும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். காதலர்களிடையே கசப்பு விலகும். விளையாட்டுத்துறையில் லாபம் கிட்டும். அணிகலன் சேர்க்கையுண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சிரமங்கள் குறையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். கனவுகள் பலிதமாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ர குப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,J




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். பணியில் பாராட்டுக்கள் கிடைக்கும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். அந்நிய தேசப்பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். பொறுப்பும், சிறப்பும் சேர்க்கும். காரிய வெற்றிக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. பெண் வழிப் பிரச்சனை முடிவிற்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. கற்பனை வளம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்தியை ஏற்படுத்தும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். வீடும் நிலமும், விசேஷ யோகமும் அமையும் காலம். நண்பர்களின் உதவி கிடைக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 8,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,C




**மீனம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பை நிறைய பணமும் காசும் ஏற்படும் காலம். மாணவர் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பணத்தட்டுப்பாடு ஏற்படும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வகை ஆதாயம் கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். கால்நடைகளால் லாபம் கிடைக்கும். எதிரிகள் கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். தொல்லைகள் அகலும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கேட்ட உதவிகள் கிட்டும். தொழில் முயற்சி பலன் தரும். நீண்ட நாளைய நோய்கள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். தேகப்பலம் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். மறைமுக எதிர்பார்ப்புகள் மறையும். சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். கூட்டுப் பிரார்த்தனையால் மாற்றம் கிடைக்கும். ஆரோக்கிய பொலிவும், அடிமனதில் தெளிவும் ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்கு முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y



# கடந்தவையும் கடப்பவையும் (37)

**- உமா மோகன் -**

*அடைக்கலம் என்பது மிக சிறப்புக்குரியது*
*இதைக்கூறும் கதையொன்றும் சிலம்பிலுண்டு*

*கிளைக்கதைகள் பல கொண்ட சிலப்பதிகாரத்தில்*
*அடைக்கலக்காதையிலே ஒரு கதை*

*சிறப்பிற்குரிய பெருங்குடிகளிற் பிறந்த கோவலனும் கண்ணகியும்*
*மதிப்புக்குரிய மணவாழ்வில் மாண்புடையோர் வாழ்த்துரைக்க*

*மகிழ்வோடு இணைந்து நற் பொலிவோடு வாழ்ந்தார்கள் - எதிர்பாரா*
*நிகழ்வொன்றால் பின் பலகாலம் பிரிந்தார்கள் - மீண்டும்*

*ஒன்றாக வாழவென ஒழிந்துபோன செல்வத்தை*
*நன்றாகத் தேடலாம் என எண்ணி*

*மதுரைமாநகர் புகுந்த வேளை இருப்பதற்கு*
*ஏதுவாய் ஒரு இடம் தகுந்ததாய் கிடைக்கும்வரை*

*பொருள்தேடும் நோக்கினனாய் கோவலனும் செயற்பட - கண்ணகி*
*இருப்பதற்கு உகந்ததாக ஒரு இடம் - அது*

*மாதுரியின் மனையாக அமைந்திடவே - அன்றைய*
*சாதுக்களில் ஒருவரான கவுந்தி அடிகள்*

*அடைக்கலத்தின் சிறப்பினை மாதுரிக்கு எடுத்துரைத்து*
*அடைக்கலமாய் கொடுக்கிறார் கண்ணகியை மாதுரிக்கு*

*அப்போது உரைத்ததுதான் அக்கதை - அது*
*எப்போதும் அடைக்கலச்சிறப்புக்கு எடுத்துக்காட்டானகதை*

*கதை இதுதான் - அன்று*

*எட்டி என்பது வர்த்தகத்தில் சிறப்பு*
*பட்டம் பெற்றவர் வகுப்புப் பெயராம்*

*அப்பெயர் பெற்றவன் சாயலன் என்பவன்*
*எப்பொழுதும் முனிவர்கள் முதலானோருக்கு*

*உணவினை உவந்தளிப்பாள் அவன் மனைவி*
*உணவருந்த வந்த முனி ஒருவர்*

*தன்னோடு கூடவந்த குரங்கு ஒன்று*
*நன்றாகப் பசி ஆறிய விதம் கண்டு - அவளிடத்தில்*

*'இனி இதை உன் பிள்ளைபோல்*
*நனி சிறப்பாய் வளர்த்திடுவாய்' எனக்கூற*

*மகிழ்வோடு அதைப் பெற்று - அதன்*
*வாழ்நாள் முடியும் வரை பிள்ளைபோல்*

*நல்லபடி வளர்த்தாளாம் அம்மனையாள் - அது*
*தன்காலம் முடிந்து இறந்த பின்பும் - அதன்*

*நல் ஆத்மா சிறப்பு எய்த*
*நல்ல பல புண்ணியங்கள் செய்தாளாம் - குரங்கு*

*மறுபிறப்பில் தேவமகன் வடிவாக - சிறப்பு*
*பேறு கொண்ட பிள்ளையாய் பிறந்ததுவாம் - ஆனாலும்*

*தேவமகன் கைமட்டும் குரங்குபோல இருந்ததுவாம் - அது*
*தேவமகனாவதற்கு சாயலன் மனைவி செய்த*

*புண்ணியத்தை மறவாது பிறருக்கு பறைசாற்றும்*
*நல்லதொரு குறியீடாய் இருந்ததுவாம்*

*அடைக்கலப் பொறுப்பினைச் சிறப்புறச் செய்த*
*எட்டியின் மனைவியோடு எட்டியும்*

*விண்ணுலகப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றானாம்*

*அடைக்கலக் காதை இங்குஏன் என்று - நீங்கள்*
*இடைக்கிடை நினைப்பது புரிகிறது*

*காரணம் இன்றி காரியம் இல்லை*

**(தொடரும்)**



# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்




உதயம் 1369 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 1, 2022

## பிக்கரிங் நகரின் அருள்ஜோதி சிவாலயத்தில் கடந்த 25ம் திகதி நடைபெற்ற பக்தி இசைத் தட்டு வெளியீட்டு விழா





கனடா- பிக்கரிங் நகரில் அமைந்திருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தில் கடந்த 25ம் திகதி சனிக்கிழமை சங்காபிசேகம் , ஏகாதச ருத்ர சங்காபிசேகம் மற்றும் "அருள்ஜோதி பக்திப் பாடல்கள் இசைத் தட்டு வெளியீட்டு விழா ஆகியன பக்தி உணர்வோடு நடைபெற்றன.

அன்றைய தினம் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் மற்றும் "உதயன் லோகேந்திரலிங்கம் ஆகியோர் அங்கு நடைபெற்ற பக்தி இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பெற்றிருந்தனர்.

ஏகாதச ருத்ர சங்காபிசேக உபயகாரராக திரு ராம்குமார் பிரசன்னமாகியிருந்து அபிசேகங்கள் மற்றும் பூசைகளில் பக்தியுடன் பங்கேற்று . பக்தி இசைத்தட்டின் முதற் பிரதியையும் பெற்றுக்கொண்டார். ஆலயத்தின் பிரதம குரு கேஹாபி கிருஸ்ணா சிவாச்சாரியார் மற்றும் "குருஜி" சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் சக சிவாச்சாரியப் பெருமக்கள் சகிதம் அனைத்து அபிஷேகங்கள் ஹோமம் மற்றும் வழிபாடுகளில் பங்கெடுத்தனர்.

பக்திப் பாடல்கள் இசைத்தட்டு பிரதிகளை அடியார்கள் ஆர்வத்துடன் பெற்றுச் சென்றனர். ஆலயத்தோடு தொடர்பு கொள்ள அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 647 989 6943 அல்லது 647 746 7474

## கனடாவில் A.G.A Beauty Academy நிறுவனத்தினால் நடத்தப்பெற்ற Miss Tamil Universe-2022 போட்டி சிறப்பாக நடைபெற்றது



கடந்த 26-06-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற **Miss Tamil Universe-2022**

போட்டி நிகழ்வை உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் பார்த்து மகிழ்ந்து பாராட்டினர்.

கனடாவில் **A.G.A Beauty Academy** நிறுவனத்தின் அதிபர் திருமதி சசிகலா நரேந்திரா தலைமையில் நடத்தப்பெற்ற இந்த **Miss Tamil Universe-2022** என்னும் உலகத் தமிழ்ச் செல்வி-2022 போட்டி சிறப்பாக நடைபெற்றது. இவ்வருடத்தின் விழா சாதனை படைத்துள்ளது என்றே பேசப்படுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 37ம் பக்கத்தில்)

## கனடாவில் உதயன் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகள் மேலும் இரு முக்கியஸ்த்தர்களுக்கு வழங்கப்பெற்றன





கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்கள் சிலர் கடந்த 29-05-2022 அன்று நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலவில்லை.

அவ்வாறான வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்களுக்கு இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகள் நேரடியாகக் கையளிக்கப்பெறுகின்றன.

அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் கனடா உதயன் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் கனடாவில் பக்தி பூர்வமாக இயங்கிவரும் ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகருமான சக்தி ஞானம்மா அவர்களுக்கும் கனடா உதயன் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வைத்திய பீடத்தில் பட்டம்பெற்று பின்னர் வெளிநாடுகளில் உயர் கல்வி பெற்றவருமான வைத்திய கலாநிதி டாக்டர் மயிலாசன் மயில்வாகனம் அவர்களுக்கும் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கையளிப்பதைக் காணலாம்.

## தேடிப்பார் ஊடக நிறுவனம் நடத்தும் "தமிழர் நாள்" இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது




கனடாவில் தேடிப்பார் ஊடக நிறுவனம் நடத்தும் "தமிழர் நாள்" விழாவின் விபரங்களை ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 26ம் திகதி காலை" "தேடிப்பார்" அதிபர் திரு குமார் ஒரு சந்திப்பை நடத்தினார்.

அதில் கலந்து கொண்ட ஊடக நண்பர்களை இங்கு காணலாம்..

ஸ்காபுறோவில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள "தமிழர் நாள் கொண்டாட்டப் பெருவிழாவில் கரபந்தாட்டக் கழகங்களுக்கிடையில் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. கனடாவின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் யூலை 1ம் திகதி இந்த விழா ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் "தேடிப்பார்" ஊடக நிறுவனம் இந்த பெருவிழாவை ஏற்பாடு செய்துள்ளது. இங்கு காணப்படும் படத்தில் ஊடக நண்பர்கள் உள்ளார்கள். மேலதிக விபரங்களுக்கு- 416 454 5646



